# தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

# ஆண்டறிக்கை

1983 — 1984

# தமிழ்ப் பல்கலைக் கழகம்

தஞ்சாவூர்

# ஆண்டறிக்கை

1983 — 1984

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை—விதை நிலையும் தளிர் நிலையும் | 1 |
| 2. | பல்கலைக்கழகச் செயலாண்மை அமைப்பு | 3 |
| 3. | பல்கலைக்கழகத் துவக்கம் | 5 |
| 4. | துணைவேந்தர் பணியேற்பு | 6 |
| 5. | ஆய்வுத் துறைகளை அமைத்தல் | 6 |
| 6. | நில எடுப்பும் கட்டடப் பணியும் | 7 |
| 7. | ஆய்வுப்பணி நோக்கும்,ஆய்வு மாணவர்களை சேர்த்தலும் | 7 |
| 8. | பல்கலைக்கழகச் சட்ட விதிகள் | 7 |
| 9. | இந்தியப் பல்கலைக்கழக மன்ற உறுப்பினர் | 8 |
| 10. | பல்கலைக்கழக மானியக்குழு வருகை | 8 |
| 11. | திட்டக்குழு | 8 |
| 12. | கட்டடத் துறையின் பணி | 10 |
| 13. | பதிப்புத்துறை | 11 |
| 14. | நூல் நிலையம் | 13 |
| 15. | வளர்தமிழ் இயக்ககம் | 14 |
| 16. | திட்டம்—தமிழ் வளர்ச்சி இயக்ககம் | 17 |
| 17. | களஞ்சிய மையம் | 28 |
| 18. | தமிழ்ப்பெரும் பேரகராதி | 31 |
| 19. | மலையின மக்கள் ஆய்வு மையம்—உதகை | 33 |
| 20. | தத்துவ மையம்—காஞ்சிபுரம் | 34 |
| 21. | நீர் அகழாய்வு மையம்—மண்டபம் | 36 |
| 22. | ஆசிரியர்களுக்கு நூல் நிலையத்தைப் பயன்படுத்த மானியம் | 40 |
| 23. | குறுகியகால ஆய்வுத்திட்டம் | 41 |
| 24. | தொல்காப்பியத் தகைமை | 42 |

| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 25. | மாமன்னன் இராச இராசன் பரிசு | 43 |
| 26. | தரமான தமிழ் வெளியீடுகளுக்குப் பரிசு | 43 |
| 27. | மறுநாட்டுத் தமிழர்க்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தரும் வாய்ப்பு | 44 |
| 28. | பிற மாநிலத்தார் / நாட்டினர் தமிழ்ப் படிக்கவும் ஆய்வு செய்யவும் வாய்ப்பு | 45 |
| 29. | தமிழ் மாணவர்கள் பிறமொழி படிக்கும் திட்டம் | 45 |
| 30. | கணிப்பு மையம் | 46 |
| 31. | பல்கலைக்கழக ஆய்வுப்பணிகள் | 47 |
| | I. கலைப்புலம் | 47 |
| | II. சுவடிப்புலம் | 52 |
| | III. வளர்தமிழ்ப் புலம் | 56 |
| | IV. மொழிப்புலம் | 62 |
| | V. அறிவியல் புலம் | 65 |
| 32. | பிற துறை—சமூகவியல் துறை | 70 |
| 33. | ஆய்வாளர்களுக்குத் தமிழ் பல்கலைக்கழகம் அளிக்கும் வாய்ப்பு | 71 |
| 34. | சிறப்புப் பட்டமளிப்புவிழா | 72 |
| 35. | முடிவுரை | 74 |


## இணைப்புகள்

| | | |
|---|---|---|
| 1. | ஆட்சிக்குழு உறுப்பினர் | 76 |
| 2. | ஆட்சிப் பேரவை உறுப்பினர் | 78 |
| 3. | புலக்குழு உறுப்பனர் | 83 |
| 4. | ஆய்வுக்குழு உறுப்பினர் | 88 |
| 5. | முது முனைவர் பட்டப்படிப்பு | 107 |
| 6. | முதுநிலை / இளநிலை ஆய்வாளர் தலைப்புகள் | 108 |
| 7. | கருத்தரங்குகள் | 111 |
| 8. | பல்கலைக் கழக ஆய்வாளர் வெளியிட்ட நூற்கள், பங்குபெற்ற கருத்தரங்குகள் பற்றிய விவரக்குறிப்பு | 115 |



தமிழக முதல்வர்
மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்
தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்தல்
( 15--9—1981 )



வேந்தர்
தமிழக ஆளுநர், மேதகு எஸ். எல். குரானா அவர்கள்



இணைவேந்தர்
கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள்



துணைவேந்தர்
டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் எம்.ஏ., பி.எச்.டி.,
(இந்தியானா, அமெரிக்கா), மதிப்புறு டி.லிட். (இலங்கை).

# தமிழ்ப் பல்கலைக் கழகம்

## ஆண்டறிக்கை

**முன்னுரை**

### 1. விதை நிலையும் தளிர் நிலையும்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தோற்றமும் இரண்டரையாண்டு வளர்ச்சியும் பெருமரம் ஒன்றின் தோற்ற வளர்ச்சியை ஒக்கும். 1981 ஆம் ஆண்டு செப்தம்பர் 20 ஆம் நாள் தொடங்கி, 1982 மார்ச்சு முடிய 'விதைநிலை' என்றும், 1982 ஏப்ரல் முதல் 1983 மார்ச்சு இறுதி வரை 'முளைநிலை' என்றும், 1983 ஏப்ரல் முதல் 1984 மார்ச்சு இறுதி வரை 'தளிர்நிலை' என்றும் கூற இயலும்.

1981 செப்தம்பர் முதல் 1982 மார்ச்சு இறுதி வரை, விதையிடு காலத்தில் நடக்கும் வயற்பணிபோன்று, தக்க ஆய்வாளர்களை நியமித்தல், அலுவலக அமைப்பும் இயக்கமும், நிலம், கட்டடக் கோட்ட அமைப்பு முதலிய முன்னிலைப்பணிகள் நடந்தேறின. இக்காலத்தில் நடந்த கருத்தரங்குகள் பலவும் பிறர் கருத்தையும் ஆலோசனையையும்

அறிய உதவின. 1982 ஏப்ரல் முதல் 1983 மார்ச்சு முடிய ஆய்வுப்பணி தொடக்கமும், சிறப்புப்பொருளில் கருத்தரங்கு அமைப்பும், நூல் நிலையம், மொழிக்கூடம், கணிப்பு மையம் முதலியவற்றை நிறுவு தலும், ஆசிரியர்கள் தங்கும் மனைகள் வகுத்தமைத்தலும் நடந்தேறின. இந் நிலையை 'முளை நிலை' என்று குறிப்பிடுகிறோம்.

1983 ஏப்ரல் முதல் 1984 மார்ச்சு இறுதி வரையுள்ள தளிர்விடு நிலையின் விளக்கமே இவ்வறிக்கை. சில துறைகளில், தொடக்கத் தில் தக்கவர்கள் கிடைக்காததால் அண்மையில்தான் ஆய்விடங்களை நிரப்ப முடிந்தது. சில துறைகளில் ஒன்றிரண்டு பேர் மட்டும் பணி செய்கின்றனர். நிரப்பப்பட வேண்டிய இடங்கள் அனைத்திலும் ஆய்வாளர்களைப் பணியமர்த்திட இயலவில்லை. எனவே, தளிர்விடு நிலையிலும் துறைகளின் ஆய்வில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பது மேற் குறித்த காரணங்களால் என்று நாம் அறிவது நன்று.

## 2. பல்கலைக் கழகச் செயலாண்மை அமைப்பு

| | | |
|---|---|---|
| 1. | பல்கலைக் கழக வேந்தர் | : மேதகு எஸ். எல். குரானா<br>ஆளுநர், தமிழ்நாடு |
| 2. | இணை வேந்தர் | : மாண்புமிகு செ. அரங்கநாயகம்<br>கல்வி அமைச்சர், தமிழ்நாடு |
| 3. | துணை வேந்தர் | : டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் |
| 4. | பதிவாளர் (பொறுப்பு)<br>4-5-82 முதல் 30-6-83 முடிய | : திரு சு. செல்லப்பன் |
| 5. | பதிவாளர் (பொறுப்பு)<br>(1-7-83 முதல்) | : திரு வ. கிருட்டிணமூர்த்தி |
| 6. | நிதியலுவலர்<br>(6-3-82 முதல்) | : திரு வ. கிருட்டிணமூர்த்தி |
| 7. | புலத் தலைவர்கள் | |
| | மொழிப்புலம் | : பேரா. க வெள்ளைவாரணனார் |
| | கலைப்புலம் | : டாக்டர் ஆ. சீ. இராமன் |
| | சுவடிப்புலம் | : பேரா. கே. எம். வேங்கடராமையா |
| | வளர்தமிழ்ப்புலம் | : பேரா. மா. சண்முக சுப்பிரமணியம் |
| | அறிவியற்புலம் | : பேரா. ஆ. சுப்பிரமணியன் |
| 8. | துறைத் தலைவர்கள் | |
| | இலக்கியம் | : பேரா. க. வெள்ளைவாரணனார் |
| | மொழியியல் | : டாக்டர் கி. அரங்கன் |
| | சிற்பம் | : பேரா. சோ. மை. தத்தா |
| | ஓவியம் | : டாக்டர் ஆ. சீ. இராமன் |
| | இசை | : பேரா. து. ஆ. தனபாண்டியன் |
| | நாடகம் | : பேரா. என். வி. இராமநரசன் |
| | ஓலைச்சுவடி | : பேரா. மு. சண்முகம் பிள்ளை |
| | அரிய கையெழுத்துச் சுவடி | : பேரா. கே. எம். வேங்கடராமையா |
| | கல்வெட்டு | : டாக்டர் சி. ஆர். சீனிவாசன்<br>(13—12—83 முடிய)<br>டாக்டர் எ. சுப்புராயலு<br>(21—7—83 முதல்) |

| | | |
|---|---|---|
| வெளிநாட்டுத் தமிழ்க் கல்வி | : | டாக்டர் கு. நம்பி ஆரூரன் |
| மொழிபெயர்ப்பு | : | பேரா. மா. சண்முக சுப்பிரமணியம் |
| தொகுப்பியல் | : | டாக்டர் தா. வே. வீராசாமி |
| தொல் தொழில் | : | பேரா. ஆ. சுப்பிரமணியன் |
| சமூகவியல் | : | பேரா. சீ. செ. தேக்கமலை |
| தொல் அறிவியல் | : | டாக்டர் கு. சீனிவாசன் |
| சித்த மருத்துவம் | : | டாக்டர் ஜ. சாதிக் |

9. பிற மையங்கள்

| | | |
|---|---|---|
| தத்துவமையம் - காஞ்சி | : | டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி |
| மலையினர் ஆய்வு மையம்-உதகை | : | டாக்டர் பி. கே. மிசிரா |

10. முதன்மைப் பதிப்பாசிரியர்கள்

| | | |
|---|---|---|
| அறிவியல் களஞ்சியம்-சென்னை | : | திரு பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) |
| வாழ்வியல் களஞ்சியம்-சென்னை | : | திரு ஏ. சுப்பிரமணியம் (5—3—84 முடிய) |
| பேரகராதித்துறை-தஞ்சாவூர் | : | திரு மு. அருணாசலம் |

11. இயக்குநர்கள்

| | | |
|---|---|---|
| பதிப்பு இயக்ககம் (பொறுப்பு) | : | கண்காணிப்பாளர் திரு கோவை. மெய்கண்டசிவம் |
| விரிதமிழ் இயக்ககம் | : | திரு முருகரத்தனம் (28—10—83 வரை) |
| திட்ட வளர்ச்சி இயக்ககம் | : | டாக்டர் இராம. சுந்தரம் |

12. துணை இயக்குநர்

| | | |
|---|---|---|
| ஆவணப்படுத்துதல் மற்றும் நூலகப்பணி | : | திரு. த. பத்மநாபன் |

13. கணிப்பு மையம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாளர் | : | திரு கா. செ. செல்லமுத்து |

14. அருங்காட்சியகம்

| | | |
|---|---|---|
| பொறுப்பாளர் | : | டாக்டர் ப. கோபால் |

15. சட்ட ஆலோசகர் : திரு எஸ். ஏ. முகம்மது ஜாபர்

16. மருத்துவ அலுவலர் : டாக்டர் இரா. மனோகரன்

## 3. பல்கலைக் கழகத் துவக்கம்

இந்தியத் தமிழரும், மறுநாட்டுத் தமிழரும், ஆய்வறிஞரும் பயன் பெறும் பொருட்டுத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்று அமைக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் 1981 ஆம் ஆண்டு, சனவரித் திங்களில் ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டில் அறிவித்தார்கள்.

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் தலைமையில் மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம், திருச்சி டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம், முன்பு இலங்கையில் பணி செய்து இப்போது அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தராக உள்ள டாக்டர் வி. சி. குழந்தைசாமி, தமிழ் வளர்ச்சி இயக்குநர் டாக்டர் மா. நன்னன், தில்லிப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் சாலை இளந்திரையன், அகில உலகத் தமிழாய்வு நிறுவன இயக்குநர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், கல்வித்துறை உதவிச் செயலாளர் திரு ஆர். மீனாட்சிசுந்தரம் ஆகியவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட வல்லுநர்குழு ஒன்று விரிவான அறிக்கை ஒன்றைத் திறமையாக உருவாக்கி அரசுக்கு அளித்தது. அதன் அடிப்படையில் இந்தப் பல்கலைக் கழகம் வடிவு பெறத் துவங்கியது. வல்லுநர் குழு தனது அறிக்கையில்.

அ. இந்தப் பல்கலைக் கழகம் ஒரே இடத்தில் மையம் கொண்ட, தங்கிப் பயிலும் ஆய்வு நிறுவனமாக இருக்கவேண்டும் எனினும், பிற மாவட்டங்களில் அல்லது பிற நாடுகளில் ஆய்வு மையங்கள் நிறுவலாம்.

ஆ. அதன் ஆய்வு விரிவாகவும் பல துறைச் சார்புடையதாகவும் இருக்கவேண்டும். தெற்கு, மேற்கு ஆசியாக் கண்டம் மற்றும் ஆப்பிரிக்க நாடுகளில் வாழ்ந்துவரும் தமிழ் மக்களின் தேவையை நிறைவேற்றும் நிலையில் அமைய வேண்டும்.

இ. தமிழாய்வுக்கு ஆதாரமாக அமைந்த ஓலைச் சுவடிகள், கையெழுத்துப் படிகள், கல்வெட்டுச் சான்றுகள் முதலியவற்றைத் தேடித் தொகுத்துப் பாதுகாக்க வேண்டும்.

ஈ. எல்லா வகை அறிவுத் துறைகளிலும் தமிழ் மொழியை வளர்த்துப் பல்துறைப் பயிற்று மொழியாக மலர்விக்க வேண்டும் என்று தெளிவாக்கியிருந்தது.

பழமையைக் கண்டறிந்து போற்றுவதும் அதனைப் பயன்படுத்தி வருங் காலத்தில் தமிழ் மொழி வளர்வதற்குரிய வழிவகைகளைக் காண்பதும் இந்த அறிக்கையில் முனைப்பாக இருந்தன.

ஐந்து புலங்களின் கீழ் 16 துறைகளையும் முதற்கண் தோற்றுவிக்குமாறு வல்லுநர் குழு பரிந்துரைத்திருந்தது. தொடராச் செலவாக ரூ. 7.40 கோடியும் ஆண்டுதோறும் தொடரும் செலவாக ரூபாய் 24 இலட்சமும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கென நிதி ஒதுக்கீடு செய்யுமாறு வல்லுநர் குழு கூறியிருந்தது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான அவசரச் சட்டத்தை மேதகு ஆளுநர் அவர்கள் 1981ஆம் ஆண்டு செப்தம்பர் 13 ஆம் நாள் வெளியிட்டார்.

தஞ்சாவூரில், தமிழ்ப் பல்கலைக் கழகம் 1981 ஆம் ஆண்டு செப்தம்பர் 15ஆம் நாள் தமிழக ஆளுநர் மேதகு சாதிக் அலி அவர்களால் தொடங்கிவைக்கப் பட்டது. தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களும், தமிழகக் கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்களும் மற்ற அமைச்சர்களும் அரசியல் தலைவர்களும், பேரறிஞர்களும் அவ்விழாவில் பங்கேற்றனர்.

## 4. துணைவேந்தர் பணியேற்பு

டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் 1981 செப்தம்பர் 19 ஆம் நாள் பல்கலைக் கழகத்தின் முதல் துணைவேந்தராகப் பணியேற்றார். பணியேற்ற உடன் அவர் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள கல்வி, பண்பாட்டு மையங்களில் உள்ள ஆசிரியர்கள் மற்றும் பேரறிஞர்களுடன் கலந்துரையாடிப் பல்கலைக் கழகச் செயல்பாட்டுத் திட்டங்களை வரையறை செய்தார்.
குறிப்பாக,

அ. ஆய்வுத் துறைகளில் தக்க ஆசிரியர்களை நியமித்துச் செயற்படுத்துதல்.

ஆ. அலுவலகத்தை உருவாக்குதல்.

இ. புதிய கட்டிட வளாகத்தின் அமைப்பு, கட்டடத் தோற்றம் முதலியவற்றைச் சீராக்குதல்.

ஈ. பல்கலைக் கழகச் சட்டங்களை உருவாக்குதல்.

உ. பல்கலைக் கழக மானியக் குழுவின் சட்டம் 12 (அ)இன் கீழ்த் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை மைய உதவிக்குத் தகுதி படைத்தது எனத் தேர்வு செய்தல்.

இவ் ஐந்து முறைகளில் கவனம் செலுத்தினார். கருத்தறிந்து நெறிப்பட ஆட்சிக்குழு, பேரவை நிதிக்குழு ஆகியவைகளும் தற்காலிகமாக அமைக்கப்பட்டன. மூதறிஞர்களும் செயல்பாடறிந்த அலுவலர்களும் துணைவேந்தர்களும் இக்குழுக்களில் இடம் பெற்றனர்.

## 5. ஆய்வுத்துறைகளை அமைத்தல்

பல்கலைக்கழக மானியக்குழு விதித்திருந்த கல்வித் தகுதிகளைப் பின்பற்றிப் பதினாறு பேராசிரியர் பதவிகளும் முப்பத்திரண்டு இணைப் பேராசிரியர் பதவிகளும் தமிழ், ஆங்கிலச் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டன. தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்டப்படித் தேர்வுக் குழுக்களை அமைத்து 11—1—1982 முதல் தகுதியுள்ள ஆய்வாளர்களை நியமித்தது. எந்தத் துறையில் தகுதியுள்ள இளைஞர்கள் கிடைக்க வில்லையோ அந்தத் துறையில் பெயர் பெற்ற முதியவர்களுக்குக் குறுகிய காலப் பதவிப் பொறுப்பை வழங்கியது. தக்கவர்கள் இல்லையெனத் தேர்வுக்குழு கருதிய விடத்து மீண்டும் விளம்பரம் செய்யவும், தீர்மானம் செய்தது. உலகளாவிய புகழ் பெற்ற சிலருக்குச் சிறப்பாய்வாளர் பதவியை நல்கியது.



முதலில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கென நியமிக்கப்பட்ட
தற்காலிக (adhoc) ஆட்சிக்குழுவினர் கூட்டம்



திட்டக்குழுவின் முதற் கூட்டம்
( 2—4—83 )

## 6. நில எடுப்பும் கட்டடப்பணியும்

தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கென ஏறத்தாழ 1000 ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியிருந்தது. கையகப்படுத்தும் பணியில் ஈடுபட்டு, பெரும்பகுதியைப் பல்கலைக் கழகத்திற்குக் கிடைக்கும்படி தஞ்சை மாவட்ட ஆட்சியர், விரைவான நடவடிக்கை களை மேற்கொண்டார். நிலம் பெறல், பல்கலைக் கழக வளாக வளர்ச்சி பற்றிய விரிவான விளக்கம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டரசு தொழில் நுட்பக் கல்வி இயக்கத்தின் மேற்பார்வையில் பல்கலைக் கழகத்திற்கெனத் தனியே ஒரு கட்டடக் கோட்டம் அமைத்தது. இந்தக் கோட்டம் ஒரு செயற் பொறியாளரின் தலைமையில் புதிய வளாகத்தின் கட்டுமானப் பணிகளைக் கண்காணித்து வருகிறது.

## 7. ஆய்வுப்பணி நோக்கும், ஆய்வு மாணவர்களைச் சேர்த்தலும்

தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொள்ளும் ஆய்வுப் பணிகள் அனைத்தும் பல்துறையைச் சார்ந்தவையாக இருத்தல் வேண்டும் அல்லது புதுத் துறைகளாக இருத்தல் வேண்டும் என்ற தமிழறிஞர் கருத்து ஒப்புக்கொள்ளப்பட்டது. தமிழகம், ஈழம், மலேயாப் பல்கலைக் கழகங்கள் செய்யும் பணிகளை மீண்டும் தமிழ்ப் பல்கலைக் கழகம் செய்யாமல் விரிந்த ஆய்வுகளில்—குறிப்பாக—தொழில், அறிவியல், சித்த மருத்துவ நூல்கள், ஏடு பதிப்பித்தல் முதலிய துறைகளிலும் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஈடுபட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் ஆய்வாளராகச் சேர விரும்புவோர் குறைந்த அளவு கல்வித் தகுதியாகப் பி. எச். டி. பட்டம் அல்லது அதற்கு ஈடான ஆய்வு அனுபவம் பெற்றிருக்க வேண்டும். பயிற்சி மற்றும் ஆய்வின் முடிவில் டி. லிட், பட்டம் மட்டுமே இப் பல்கலைக் கழகத்தினால் அளிக்கப்படுகிறது. பல்கலைக் கழகத்தின் பயிற்று மொழியும் ஆய்வறிக்கை மொழியும் தமிழாகும்.

## 8. பல்கலைக் கழகச் சட்ட விதிகள்

பல்கலைக் கழகச் சட்ட விதிகளின் முதல் வரைவு முன்னாள் கல்வி இயக்குநர் திரு கே. மோகனரங்கம் அவர்களால் உருவாக்கப்பட்டது. துணை வேந்தரவர்களைத் தலைவராகவும், தமிழ்நாடு அரசு பொது மற்றும் நிர்வாகச் சீரமைப்புத் துறைத் துணைச் செயலர் திரு டி. எஸ். செல்வராசு, நிதித்துறைத் துணைச் செயலர் திரு எம். அருணாசலம், பல்கலைக் கழகங்களின் தனித் அலுவலர் திரு கோ. சிவகுருநாதன், பதிவாளர் (பொறுப்பு) திரு சு. செல்லப்பன், நிதி அலுவலர் திரு வ. கிருட்டிணமூர்த்தி, துணைப் பதிவாளர் திரு ந. முத்துக்குமாரசாமி, சட்ட ஆலோசகர் திரு எஸ். ஏ. முகமது ஜாபர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட குழு அதனைத் இருமுறை தஞ்சையிலே கூடி ஆய்வு செய்தது. பின்னர் அதனை, ஓய்வு பெற்ற இ. ஆ. ப. அலுவலர் திரு கே. எம். முத்துசுவாமிப் பிள்ளை கூர்ந்தாய்வு செய்தார். 17-1-83 அன்று நடந்த கூட்டத்தில் ஆட்சிக்குழு அந்தச் சட்ட விதிகளின் வரைவை ஏற்றுக் கொண்டது, பல்கலைக் கழக வேந்தராகிய தமிழக ஆளுநர் அவர்களின் ஒப்புதல் 28—5—83 அன்று பெற்றுத் துணைச் சட்டமாகியது.

## 9. இந்தியப் பல்கலைக் கழக மன்ற உறுப்பினர்

இந்தியப் பல்கலைக் கழக மன்றக் கடித எண். 24; நாள் 24—7—1982 தமிழ்ப் பல்கலைக் கழகத்தினை இந்தியப் பல்கலைக் கழக மன்றத்தில் உறுப்பினராக மூன்று ஆண்டுகளுக்குத் தற்காலிகமாக அனுமதிப்பது எனத் தீர்மானித்துள்ளது.

## 10 . பல்கலைக் கழக மானியக்குழு வருகை

பல்கலைக் கழக மானியக்குழுவால், ஐதராபாத்திலுள்ள தடையில்லாக் கல்விப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் இராம்ரெட்டி தலைமையில், மைசூர், அனைத்திந்திய மொழி நிறுவனத்தின் இயக்குநர் டி. பி. பட்நாயக், தமிழகக் கல்விச் செயலாளர், திரு சி. இராமதாசு ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட உட்குழு 1983, பெப்ருவரி 5, 6 நாள்களில் பல்கலைக் கழகத்தில் பல்வகைத் துறைகளையும் பார்வையிட்டுப் பல்கலைக் கழகம் அடைந்துள்ள ஆய்வு முன்னேற்றம், நிதி நிலை, சட்டவரைவு முதலியவற்றை ஆய்வு செய்தது.

இந்தியாவில் வட்டார மொழிக்கென நிறுவப்பட்ட பல்கலைக் கழகங்களுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒரு முன்மாதிரியாகத் திகழும் என்று இக்குழு தனது அறிக்கையில் பாராட்டிற்று. இவ்வறிக்கையின் அடிப்படையில் பல்கலைக் கழக மானியக்குழு தமிழ்ப் பல்கலை கழகச் சட்டம் 12—ஏ யின் கீழ் மானியம்பெறத் தகுதியுடையது என 1982 ஆகஸ்டு இறுதியில் முடிவு செய்து அறிவித்தது. சட்ட வரைவின் சில திருத்தங்களுக்குப் பின்னர் மானியக் குழுவின் நல்கை, துறை வளர்ச்சிக்கு முழுமையாகக் கிடைத்து வரும் என்றும் தெரிவித்தது.

## 11. திட்டக் குழு

தமிழ்ப் பல்கலைக் கழக வளர்ச்சிக்குரிய வருங்காலத் திட்டங்களை வகுப்பதற்கும், சீர்தூக்குவதற்கும் திட்டக் குழு நியமிக்கப் பல்கலைக் கழக மானியக்குழு பரிந்துரை செய்திருக்கிறது. திட்டக் குழு ஒன்றை நிறுவுவதையும் அதன் அதிகாரவரன்முறையையும் பல்கலைக் கழகம் ஏற்றுத் திட்டக் குழு ஒன்றை ஆளுநர் குழு உருவாக்கியது. இதில் புகழ்பெற்ற அறிஞர்கள் பல்கலைக்கழக இயக்க அனுபவம் பெற்ற பெருமக்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

ஏப்ரல் மாதம் 2-4-1983 ஆம் ஆண்டு பிற்பகல் திட்டக் குழுவின் முதற் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்தில் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.



பல்கலைக்கழக மானியக்குழு வருகை
( 5, 6—2—83 )



மைய அரசின் கல்வி மற்றும் பண்பாட்டுத்துறை
இணைச் செயலாளர் திரு எம். ஆர். கோல்கட்கர் அவர்கள்
வருகை (30—5—'83)

1. டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்
தமிழ்ப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் — தலைவர்

2. திரு கார்த்திகேயன், இ. ஆ. ப. — உறுப்பினர்
தமிழ்நாடு அரசின் திட்டக் குழுத் தலைவர்
சென்னை - 5

3. திரு டி. டி. சுந்தரராசு, இ. ஆ. ப. — ,,
தமிழ்நாடு அரசின் கல்வி, அறிவியல் மற்றும்
தொழில் நுட்பத்துறை ஆணையர் - செயலர்
சென்னை - 9

4. திரு சு. சோழபெருமாள் — ,,
தமிழ் நாடு அரசு நிதித்துறைத் துணைச் செயலாளர்
(நிதித்துறைச் செயலாளர் சார்பாக)

5. டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு — ,,
சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்
சென்னை

6. டாக்டர் வ. சுப. மாணிக்கம் — ,,
மதுரை காமராசர் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்
காரைக்குடி

7. பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியம்
தமிழ்ப் பல்கலைக் கழக வளர்தமிழ்ப் புலத் தலைவர் (சிறப்பழைப்பாளர்)

8. பேராசிரியர் ஆ. சீ. இராமன்
தமிழ்ப் பல்கலைக் கழகக் கலைப் புலத்தலைவர் (சிறப்பழைப்பாளர்)

9. திரு கோ. சிவகுருநாதன், (சிறப்பழைப்பாளர்)
புதிய பல்கலைக் கழகங்களின் தனி அலுவலர்
சென்னை-9

தமிழ்ப் பல்கலைக் கழகம் உருவாக்கிய அண்மைக்கால, சேய்மைக்காலத் திட்டங்களைப் பரிசீலனை செய்து கீழ்வரும் பரிந்துரைகளைச் செய்தது.

1. திட்டக்குழு, தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் குறுகிய கால மற்றும் நீண்ட காலத்திட்ட முன்வரைவுகளை ஆய்ந்து, அவை நன்கு சிந்தித்துத் திட்டமிடப்பட்டிருப்பதாகவும் எளிதில் நடைமுறைப்படுத்தக்கூடியவையாக இருப்பதாகவும் கருத்தறிவித்தது.

2. அரண்மனைக் கட்டட வளாகத்தில் இருக்கக்கூடிய குறைந்த வசதிகளைச் சிறந்த முறையில் பயன்படுத்தித் தமிழ்ப் பல்கலைக் கழகம் மிகக் குறுகிய கால எல்லையாகிய 18 திங்களுக்குள் செய்துள்ள பணிகளையும், குறிப்பாக ஐந்து புலங்களின் கீழ் 16 துறைகளை அமைத்து ஆற்றியுள்ள பணிகளையும் மனநிறைவுடன் பாராட்டியது.

3. பல்கலைக் கழகத்திட்ட வரைவுகளைக் கீழ்க்காணும் கருத்தறிவிப்பு களுடன் குழு ஏற்றது.

(அ) நீண்டகால மற்றும் அண்மைக்காலத் திட்டச் செயல்பாட்டில் கருவிகள் முதலியவற்றிற்குப் பெரும் பொருள் செலவிடும்போது, அவற்றை ஆண்டுதோறும் நுண்ணாய்வு செய்து தேவைக்கேற்பச் செய்யவேண்டும்.

(ஆ) பிற நிறுவனங்கள் செய்கின்ற பணிகளையே செய்வது இயன்ற அளவில் தவிர்க்கப்படவேண்டும். அரசாங்கம் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து கிடைக்கக்கூடிய வசதிகளைக் கண்டறிந்து அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

(இ) பல்வேறு திட்டங்களுக்கும், பல்கலைக் கழக மானியக் குழு, மையக் கல்வித் துறை, ஏனைய மானிய நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து மானியம் பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

1983, நவம்பரில் நடந்த பேரவைக் கூட்டமும் இந்தத் திட்டக்குழு அறிக் கையை ஆய்ந்து தனது ஒப்புதலை அளித்தது.

இதனைச் செயல்படுத்துவதற்கு உரிய நிதி உதவியைப் பல மானிய நிறுவனங் களிடமிருந்து பெறுவதற்குப் பல்கலைக் கழகம் முயன்று வருகிறது.

## 12. கட்டடத் துறையின் பணி

தொழில் நுட்ப இயக்ககத்தின் கண்காணிப்பில் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டடக் கோட்டமொன்று 1982 பெப்ருவரி முதல் செயல்பட்டு வருகிறது. புறம் போக்கு, தனியார் நிலம் முதலியவற்றை ஏற்று வாங்கியவுடன், பாதுகாப்புக்காக முள் வேலி இடப்பட்டது. ஏறத்தாழ 90 ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் உயர் நீதி மன்றத் தடையுத்தரவு வாங்கியதால் அதில் கட்டடம் கட்ட இயலவில்லை. உயர்நீதி மன்றம் இரண்டு மாதங்களுக்கு முன்னர், தடையுத்தரவை நீக்கித், தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அனுசரணையாக விதித்துள்ளது. அந்த நிலங்களை ஏற் றெடுத்தற்கு உயர்நீதி மன்றத் தீர்ப்பு நகலைப்பெற்று எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. துணைவேந்தர் இல்லம் (தமிழகம் என்று பெயரிடப்பட்டு உள்ளது), புலத் தலைவர்கள், பதிவாளர் ஆகியவர்களுக்கு நான்கு வீடுகள், பேராசிரியர்களுக்கு நான்கு வீடுகள், அலுவலர்களுக்கு ஐந்து வீடுகள் ஆகியவற்றின் பணியினை கட்டடக் கோட்டப் பொறியாளர் முடித்துப் பல்கலைக் கழகப் பராமரிப் பிற்குத் தந்துவிட்டனர். அலுவலர் வீடுகளில் ஐந்து, இணைப் பேராசிரியர் வீடுகளில் ஐந்து முடித்துத் தருவதற்குத் துரிதப்படுத்தப்பட்டுள்ளது. பக்கத்திலுள்ள விமானத் தளத்திற்குத் தடையாக இருக்கும் என்று விமானத்தள மேற்பார்வையாளர்கள் நீர்த் தொட்டி அமைப்பைத் தடை செய்ததால் இதனை நீக்க எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. புதிய வளாகத்தின் தென்பகுதியில் மளிகைக்கடை முதலிய வற்றை அமைக்கச் சிறு கடை வரிசை ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக வடபகுதியில் ஆய்வாளர், விருந்தினர் மாளிகைக்கு அடிவாரம் தோண்டப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அலுவலகக் கட்டடம், தமிழ்ப்



இணைவேந்தரும் துணைவேந்தரும்

புலம், நூல் நிலையக் கட்டடம் முதலியவற்றைத் திராவிடக் கலை நுணுக்கங்களுடன் அமைக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் கருத்துத் தெரிவித்ததால், அவற்றின் மாதிரிகள் சென்னைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவர்கள் பார்த்து ஒப்புக்கொண்ட பின்னர் தான் வேலை தொடங்க இயலும்.

கட்டடக் கோட்டப் பணியைத் துரிதப்படுத்துவதற்கும் கண்காணிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரண்மனை வளாகத்தில் அச்சகத்திற்கென ஏறத்தாழ மூன்று இலட்சம் ரூபாயில் கட்டடம் ஒன்று முடிக்கப்பட்டுள்ளது. முன்னர் இருந்த கழிவறை முதலியவற்றைச் சீராக்கி மருத்துவமனை, பொறியாளர் அலுவலகம், விலங்குவளை, சிறிய அளவில் சோதனைக்கூடம் முதலியவை உருவாக்கப்பட்டுள்ளன.

பல்கலைக் கழகப் பொறியியல் பிரிவு

இவற்றைக் கட்டி முடித்தற்கும் கட்டடக் கோட்ட வேலையைக் கண்காணிப்பதற்கும் பல்கலைக் கழகம் தனக்கென ஒரு பொறியியற் பிரிவை உருவாக்கியிருக்கிறது. அதில் திரு ச. செகதீசன் (ஓய்வு பெற்ற நெடுஞ்சாலைத் துறைத் துணைப்பொறியாளர்) தொகுப்பூதியத்திலும், அவருக்குத் துணையாக திரு பா. கிள்ளி வளவன், உதவிப் பொறியாளராகத் தொகுப்பு ஊதியத்திலும், திரு கு. இராமச்சந்திரன் (கணக்கர்) தொகுப்பு ஊதியத்திலும் நியமிக்கப்பட்டுள்ளனர். சிறு வேலைகளை இந்தப் பிரிவு கவனித்து வருகிறது.

## 13. பதிப்புத் துறை

இயக்குநர் திரு சு. செல்லப்பன் 4—1—82 முதல் 30—6—83
கண்காணிப்பாளர் திரு கோவை. மெய்கண்ட சிவம் 27—7—83 முதல்

வெளியீடுகள்

1. திங்கள்தோறும் வெளியாகும் 'தமிழ்ச் செய்தி மலர்'
   ஆங்கில இதழ் 'Tamil University News'

2. முத்திங்கள் சஞ்சிகையான 'தமிழ்க் கலை' ; 'Tamil Civilization'
   (இரண்டாவது மலர் வெளியாகிவிட்டது ; மூன்றுவது அச்சுருப் பெறுகிறது)

3. மராத்தியச் செப்பேடுகள் ஐம்பது—புலவர் இராசு, கல்வெட்டுத்துறை 1983, விலை ரூ. 150 ; மாருதி அச்சகம், சென்னை.

4. கலித்தொகை : இ. வை. அனந்தராமையர், மறுதோன்றிப் பதிப்பு, தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம், 1984, மூன்று தொகுதி ரூ. 150.

அச்சுக்குத் தயாராகியுள்ள நூற்கள்

| | | |
|---|---|---|
| கருத்தரங்கக் கட்டுரைகள் | நிகழ்ச்சிகள் | 12 |
| மருத்துவம் | | 14 |
| பொறியியல் | | 12 |
| ஆய்வறிக்கைகள் | | 22 |

## சிறப்புத் திட்டம்

பாரதியாரின் பாடல், சிறுகதை, கட்டுரையாகிய மூன்றையும் பாட பேதங்களுடன் கால வரையறைப்படிப் பதித்துச் சிறப்புப் பதிப்பாக வெளியிடும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. பதிப்பாசிரியர் குழு (திரு சீனி விசுவநாதன், பேரா.மு. சண்முகம் பிள்ளை, பேரா. மா. சண்முக சுப்பிரமணியம் முதலியோர் உறுப்பினர்) மும்முறை கூடிப் பாடபேத நிர்ணயம் செய்துள்ளது. அரசு மூன்று இலட்சம் ரூபாய் மானியம் தருவதாகக் கூறியது. அண்மையில்தான் 1½ இலட்சம் ரூபாய் முதல் தவணையாகத் தந்துள்ளது. வேலை துரிதமாக நடந்து நூல்களை வெளிக்கொணர எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழ்ப் பல்கலைக் கழக அச்சகம்

தமிழ்ப் பல்கலைக்கழக அச்சகம் 1983 சூலை மாதம் முதல் இயங்கத் தொடங்கியுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | மறுதோன்றி அச்சுப் பொறி நூல் தையல் பொறியுடன் | ரூ. | 14,99,000 |
| 2. | நிழற்படப் பொறி | ரூ. | 71,000 |
| 3. | அச்சுத் தகட்டுக் கருவி | ரூ. | 15,718 |
| 4. | அழிக்கும் கருவி | | |
| 5. | தாள் வெட்டும் கருவி | ரூ. | 34,317 |
| 6. | லைனோ அச்சுக் கோக்கும் பொறி | ரூ. | 4,78,000 |
| 7. | கிழிதுளைப் பொறி | ரூ. | 3,046 |
| 8. | அமுக்குப் பொறி | | |
| 9. | மின் நிலைப்படுத்தும் கருவி | ரூ. | 7,535 |
| 10. | நேரக்கணிப்புப் பொறி | ரூ. | 2,170 |

போன்றவை மொத்தம் ரூபாய் 26 இலட்சம் விலைக்கு வாங்கப்பெற்று அதற்கென 3.5 இலட்சத்தில் அமைத்த தனிக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. முழு அளவில் இயங்கினால் பல்கலைக் கழகம் எல்லா அச்சு வேலைகளையும் முடிப்பதுடன் பிறர் பணியும் ஏற்றுச் செய்யும் நிலையைப் பெறும்.

## 14. நூல் நிலையம்

மொழி, வாழ்வியல், அறிவியல் ஆகிய பொருளில் உயர் ஆய்வு மையமாக உருவாகியுள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு நூல் நிலையம் இதயம் போன்றது. நூல்கள், சஞ்சிகைகளைப் பெறுவது, அவற்றை வகைப்படுத்துவது, அவற்றின் செய்திகளை ஆய்வாளர்களுக்கு உடனுக்குடன் தெரிவிப்பது போன்ற பணிகளால் நூலகம் இன்றியமையாத நிறுவனமாக இயங்குவதற்குத் திட்டமிட்டுள்ளது.

### நூலக வளர்ச்சி

தஞ்சை-தாய் நூலகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெற்ற நூற்கள் | : | 24,265 |
| 2. | சஞ்சிகைகள் | : | 322 |

காஞ்சி-தத்துவ நூலகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெற்ற நூற்கள் | : | 3,200 |
| 2. | சஞ்சிகைகள் | : | 2 |

சென்னை-களஞ்சிய நூலகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெற்ற நூற்கள் | : | 2,068 |
| 2. | சஞ்சிகைகள் | : | 24 |

உதகை மலையின மக்கள் நூலகம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெற்ற நூற்கள் | : | 89 |
| 2. | சஞ்சிகைகள் | : | — |

### ஆய்வுச் செய்தி அறிக்கை

( நாளும் பெறும் நூற்களைப் பற்றிய செய்தி )

அ) பெற்றுள்ள செய்திகளை ஆய்வாளர்க்கு நாளும் தெரிவித்தல்

ஆ) இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் வழி நூற்சேர்க்கை விவரம் தெரிவித்தல்

இ) நூற்களைப்பற்றிய அளவீடு சீர்தூக்கலைப் பல படிகள் எடுத்து ஆய்வாளர் களுக்கும் பிறருக்கும் விளம்புதல்

ஈ) நூலோதி தயாரிக்க நூற்செய்தியனைத்தும் ஆய்வாளர்களுக்குத் தருதல்

உ) ஆய்வாளர் ஒரு குறிப்பிட்ட தலைப்பில் செய்தி வேண்டினால் அதனைத் தருதல்

ஊ) நிழற்படப் படி எடுத்து இலவசமாக ஆய்வாளர்க்கு, கட்டுரைப்படி வழங்குதல்

எ) நுண்படம் எடுத்தல், இதனைப் படிக்கும் கருவி வழங்கல் முதலிய துணையும் நூல் நிலையத்தில் உண்டு

ஏ) 'புலப்பாடு' என்ற ஒரு பக்க வெளியீடும், நூல்—பட்டிகையும் தேர்ந்தெடுத்த நூல்—செய்தியும் இங்கிருந்து வெளியாகின்றன.

திட்டங்கள்

1. தமிழாய்வு பற்றிய எல்லாச் செய்திகளையும் தொகுத்துக் கணிப்பொறி நினைவுக் குதிரில் காத்தல்.

2. தமிழ்ச் சஞ்சிகைகளில் வெளியாகும் கட்டுரைகளுக்கு நூலோதி செய்தல்

அரிய நூற்கள் தொகுத்தல்

பல அரிய நூற்களையும் நூல் நிலையம் தொகுத்துள்ளது. காலஞ்சென்ற பாவாணர் அவர்களின் நூல்நிலையத்தையும், ஈழ அறிஞர் தி. க. கனக சுந்தரனாரின் நூல் நிலையத்தையும் விலைக்குப் பெற்றுள்ளது. வீட்டிற்கு நூல் எடுத்துச் செல்லாமல் நூலகத்திலிருந்து படித்துப் பயன் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

## 15. வளர் தமிழ் இயக்ககம்

இயக்குநர்

டாக்டர் தி. முருகரத்தனம்

பணியில் சேர்ந்த நாள்
(29—10—81)
தாய்த் துறைக்குத் திரும்பிய நாள்
(28—10—83)

1981இல் தொடங்கப்பட்ட இந்த இயக்ககம், கருத்தரங்குகள் நடத்துதலும், ஆய்வாளர்களுக்குக் குறுகியகால ஆய்வு மானியம் வழங்குதலும், இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளின் தமிழ்த்துறைகளோடும், சங்கங்களோடும் தொடர்பு கொள்ளுதலும், தஞ்சை, கோவை முதலிய மாவட்டங்களில் ஊராய்வு செய்தலும் இதன்பணியாக அமைந்தன.

கருத்தரங்குகள்

ஆய்வுத்துறைகள் உருப்பெறாது இருந்த காலத்தில் முதுநிலைத் தமிழ் பயிற்றாசிரியர்கள், பட்டப் படிப்பு ஆசிரியர்கள், தனித்தமிழ்க் கல்லூரி முதல்வர்கள், ஆகியவர்களின் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்தது. புலவர்குழுவின் ஆண்டுக் கூட்டத்தையும் கூட்டியது. கருத்தரங்கில் படைக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வெளியீட்டிற்காகச் செப்பஞ் செய்தது.

தென்னாசிய நாடுகளுக்கு சென்றது

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா முதலிய நாடுகளுக்கு இருமாத காலம் டாக்டர் முருகரத்தனம் பல்கலைக் கழகச் செலவில் சென்று தமிழ்த் துறைகள், தமிழ்ச் சங்கங்கள் முதலியவற்றோடு தொடர்பு கொண்டு கூட்டுறவுத் திட்டங்கள் செயல்படுவது பற்றி ஆய்ந்து தமது அறிக்கையைப் படைத்துள்ளார்.

குறுகியகால மானியம்

தமிழக ஆசிரியர்கள், தமிழ்-திராவிட மொழிகள்பற்றிய ஆய்வு ஆசிரியர்களுக்குக் குறுகிய கால ஆய்வு மானியம் வழங்கி ஆய்வில் ஈடுபடச் செய்யவும் திட்டமொன்றைச் செயல்படுத்தியது. 1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இதுபற்றிய விளம்பரம் செய்தித் தாள்களில் வெளியாயிற்று. வந்திருந்த 415 விண்ணப்பங்களில் 39 ஆய்வாளர்களை ஆய்வு செய்ய வல்லுநர்குழு ஒன்று தேர்ந்தெடுத்தது. ஒன்பது மாத கால அளவுக்குள் தமது திட்ட அறிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ரூபாய் மூவாயிரம் முதல் ஏழாயிரம் வரை மான்யம் 50 விழுக்காடு முதலிலும், 40 விழுக்காடு ஆய்வுகால இடையிலும், 10 விழுக்காடு ஆய்வு முடிந்த பின்னரும் வழங்குவதாக வரைமுறை செய்துகொண்டு 1982 சூலையில் இத்திட்டம் செயல் படுத்தப்பட்டது. மானியம் பெற்ற 31 பேரில் நால்வர் தங்களால் இயலாது என்று தெரிவித்ததால் 27 பேர்களில் 23 ஆய்வாளர் ஆய்வறிக்கைகளைத் தந்துள்ளனர். அவற்றின் விவரம் பின்வருமாறு :—

| வரிசை எண் | நூலாசிரியரின் பெயர் | நூலின் பெயர் |
|---|---|---|
| 1. | திரு ஆ. இராசாமணி, எம்.ஏ., பி.டி., டிப். மொழியியல் | பனை ஏறுதல்-தொழிற் கலைச் சொற்கள் திரட்டுதல் |
| 2. | டாக்டர் வீ. ப. கா. சுந்தரம் | தமிழ் இசையியல் நூல் |
| 3. | டாக்டர் வி. மி. ஞானப்பிரகாசம் | வீரமாமுனிவர் ஏடுகளும் தேவ மாதா பிள்ளைத்தமிழ் நூலும் பதிப்பித்தல் |
| 4. | திரு வ. தேனப்பன், எம். ஏ. | நகரத்தார் வளர்த்த சிற்பக்கலை |
| 5. | திரு ப. பாண்டியராஜா, எம்.எஸ்சி., எம்.ஏ., எம்.ஃபில். | கணிதவியல் கலைச் சொற்கள்-ஓர் ஆய்வு |
| 6. | திரு பி. சரவணவேல், எம். காம்., எம்.ஃபில்., பி.எல். | தஞ்சைக் கலைத்தட்டு |
| 7. | திரு ஆ. அய்யம்பெருமாள், எம். ஏ. | திருநெல்வேலி மாவட்டத்தில் சமணம் |
| 8. | புலவர் பொ. முனியப்பன், எம்.ஏ. | பெரியார் மாவட்ட மண்பாண்டத் தொழிற் சொற்கள் |
| 9. | புலவர் ஆர். விவேகானந்தன் எம்.ஏ., எம். லிட். | தண்டியலங்காரம் நிரல் முறை தொடர் திட்ட முறை |
| 10. | திரு எம். பாலசுப்பிரமணியன், பி.எஸ்சி. | சோழ மண்டலத்தில் வரலாற்று நாயக்கர்களின் சிற்பங்கள் |

| | | |
|---|---|---|
| 11. | திரு க. பூரணச்சந்திரன், எம். ஏ. | 1950 முதல் 1980 வரை இலக்கியத் திறனாய்வு வரலாறு |
| 12. | திரு கோ. தெய்வநாயகம், எம்.ஏ., எம்.ஃபில். | தஞ்சைக் கோயில் வாகனங்கள் |
| 13. | டாக்டர் இரா. சபேசன், எம்.ஏ., எம்.எஸ்ஸி., பிஎச்.டி. | மின் அணு—மின்னியல் கலைச் சொற்களஞ்சியம் |
| 14. | வித்துவான் மு. வை. அரவிந்தன், எம். ஓ. எல். | தமிழ் இலக்கியத்தில் பஞ்சதந்திர புத்த ஜாதகக் கதைகளின் ஒப்புமைப் பகுதிகள் |
| 15. | டாக்டர் மு. மாணிக்கம் | காவடிச் சிந்து — ஓர் ஆய்வு |
| 16. | திரு ச. முருகானந்தம், எம். ஏ. | திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பரதவர் தொழிற் கலைச் சொற்கள் |
| 17. | திரு வீ. குமாரசாமி | வீர சைவ தத்துவப் பிரகாசம்—பழஞ்சுவடி பதிப்பித்தல் |
| 18. | திரு. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ. | கேரளத் தமிழ்ச் சமுதாயமும் அதன் சிக்கல்களும் |
| 19. | திரு போ. வெ. வரதராசன், எம்.ஏ., எம்.ஃபில். | தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன் |
| 20. | வித்வான் சு. சுவர்ண காளீச்சுவரன் | காளை நாயகர் புராணம்—பதிப்பு |
| 21. | டாக்டர் அ. மா. பரிமணம் | திருமந்திரத்திற் காணும் சைவ சமயக்கலைச் சொல் விளக்கம் |
| 22. | திருமதி நா. வள்ளி, எம்.ஏ., பி.எட். | முகவைக் கோயில்களில் சிற்பக் கலையின் சிறப்பும், சிற்பக் கலைக்கு முகவையின் பங்கும் |
| 23. | டாக்டர் டி. கே. வெங்கடசுப்பிரமணியம் | இயற்கை வளமும் பண்டைக் காலத் தமிழக நகர வளர்ச்சியும் |

# 16. திட்டம்—தமிழ் வளர்ச்சி இயக்ககம்

*இயக்குநர் :  டாக்டர் இராம. சுந்தரம்  (5—11—81 முதல்)*

## தமிழில் அறிவியல்

பல துறை அறிவியல்-செல்வத்தையும், வாழ்வியல்-செய்திகளையும் வளரும் மொழியில் உருவாக்குவதோடு, மாணவர்களும் சிறிது கல்வியறிவுடைய ஊர் மக்களும் அவற்றைப் பெற்று அவர்கள் வாழ்வு செழிப்பதற்கும் சில திட்டங்களைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் மேற்கொண்டுள்ளது. மருத்துவத் துறை, பொறியியல் துறை மாணவர்களுக்குரிய தமிழ் நூலாக்கம், விஞ்ஞானச் சஞ்சிகைகளை ஊக்குதல், அறிவியற் செய்திகளை வெளியிடுதல், கலைச்சொல்லாக்க முறைகளை வரையறை செய்தல் முதலிய பல பணிகளை மேற்கொள்ளுவதற்கு முன்னர், பொறியியல் வல்லுநர்களின் கருத்தரங்கு, மருத்துவ வல்லுநர்களின் கருத்தரங்கு (1982) கலைச் சொல்லாக்கக் கருத்தரங்கு , விஞ்ஞானக் கருத்தரங்கு, ஆசிரியச் சங்கங்களின் கூட்டம், சென்னை வானொலி இயக்குநருடன் அறிவியல் காட்சி விழா பற்றிய கூட்டம், மருத்துவக் கலைச் சொல்லாக்கக் கருத்தறிகூட்டம் முதலியவற்றை நடத்திப் பிறர் சிந்தனையையும், அனுபவ நெறியையும் அறிந்த பின்னர்க் கீழ்வரும் பணிகள் உருவாக்கப்பட்டன.

## முதன்மைப் பணி

இவ்வியக்ககத்தின் முதன்மைப் பணியாகப் பி,இ., எம்.பி.பி.எஸ். மாணவர்களுக்குப் பயன்படும் விதத்தில் அவர்களது முதலிரண்டாண்டுப் பாடத் திட்டத்தை ஒட்டிய பொறியியல்-மருத்துவப் பாட நூற்களை உருவாக்கும் திட்டம் 1982-83 ஆம் கல்வியாண்டில் மேற்கொள்ளப்பட்டது. பாட நூற்களை உருவாக்குவதோடு, பொறியியல், மருத்துவக் கலைச் சொல் தொகுத்தாலும் தமிழில் வெளியான பொறியியல், மருத்துவவியல், அறிவியல் நூல்கள், கட்டுரைகள், கலைச்சொல் பட்டியல்கள் பற்றிய நூலடைவு (BIBLIOGRAPHY) தயாரித்தலும் துணைப் பணிகளாக மேற்கொள்ளப்பட்டன.

## கருத்தரங்கு

இத் திட்டத்தைச் செயல்படுத்த பொறியாளர், மருத்துவர் உதவி இன்றியமையாதது. எனவே, அவர்களுடைய கருத்தை அறிவதற்காக 1982 பெப்ருவரி 13, 14 தேதிகளில் பொறியாளர் கருத்தரங்கும் (பங்கு பெற்றோர்-46) 1982 மார்ச் 6, 7 தேதிகளில் மருத்துவர் கருத்தரங்கும் (பங்குபெற்றோர்-36), 1982 ஏப்ரல் 17, 18 தேதிகளில் கலைச் சொல்லாக்கக் கருத்தரங்கும் (பங்குபெற்றோர்–12) நடைபெற்றன.

### நூலாக்கத் திட்டம்

பேராளர்கள் தந்த ஊக்கத்தின் அடிப்படையில் பொறியியல், மருத்துவ நூலாக்கத் திட்டம் 30-3-82 இல் அறிவிக்கப்பட்டது. இத் திட்டத்துக்குப் பல்கலைக் கழகம் ரூ. 1,40,000/- நிதி ஒதுக்கீடு செய்தது. ஒரு நூலுக்கு ரூ. 5.000/-வரை உதவித்தொகை வழங்குவதாக அறிவிக்கப்பட்டது. செய்தித்தாள்களில் இத்திட்டம் பற்றிய விளம்பரத்தைக் கண்ட 119 அறிஞர்கள் (பொறியியல்-67, மருத்துவம்-52) விண்ணப்பித்தனர். நூல் எழுத தக்கவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக 1982 மே 28, 29 தேதிகளில் வல்லுநர்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. 28 தலைப்புகளில் நூல் எழுதத் தகுதிபெற்ற அறிஞர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 27 நூலாசிரியர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பெற்றது. ஒருவர் உதவித் தொகையின்றி நூல் எழுத முன்வந்தார்.

### நூலாக்கப் பணியில் முன்னேற்றம்

நூல் எழுதும் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு 1982 சூன் முதல்வாரத்தில் ஆணைகள் அனுப்பப்பட்டன. 9 மாதங்களுக்குள் நூல் எழுதித்தர வேண்டுமென்று ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். முதலாவது பொறியியல் நூல், சரியாக 9 மாதங்களுக்குள் (4-3-1983) தயாரித்தளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நூற்கள் வரலாயின. 12-10-83 முடிய 24 நூற்களுக்கான தட்டச்சுப் பிரதிகள் (பொறியியல் 14இல் 13, மருத்துவம் 14-ல் 12) கிடைத்து உள்ளன. எஞ்சிய 4 நூற்களும் 1984 மார்ச்சு இறுதிக்குள் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஒவ்வொரு நூலும் தேவையான வரைபடங்கள், ஒளிப்படங்கள், பயிற்சி வினாக்கள், கலைச்சொற் பட்டியல்கள் (ஆங்கிலம்—தமிழ் ; தமிழ்—ஆங்கிலம்) ஆகியவற்றைக் கொண்டிருக்கிறது. அனைத்து நாட்டுச் சமன்பாடுகள், குறியீடுகள், வாய்பாடுகள் கையாளப்பட்டுள்ளன. நூலாசிரியர்களுக்கு உதவித்தொகையில் 50%முன் பணமாக அளிக்கப் பெற்றது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

### அச்சுக்குத் தயாராக உள்ள நூல்கள்

கிடைத்த 24 நூற்களுள் 23 நூற்கள் துறை வல்லுநராலும் மொழி வல்லுநராலும் (ஒவ்வொரு நூலுக்கும் இருவர்) நுண்ணாய்வு செய்யப்பட்டுள்ளன. (பொறியியல்-13, மருத்துவம்-10). நுண்ணாய்வு செய்யப்பட்ட நூற்களுள் நுண்ணாய்வுக் குறிப்புக்கேற்ப நூலாசிரியர்களால் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு அச்சுக்குத் தயாராக்கப்பட்ட நூற்கள்-18 (பொறியியல்-11, மருத்துவம்-7). பொறியாளர்களும் மருத்துவர்களும் தமது கருத்துகளைத் தமிழில் சொல்வதில் வெற்றி கண்டுள்ளனர் என்றும். நூல்கள் ஆங்கில நூல்களுக்கு இணையாக எழுதப்பட்டுள்ளன என்றும் நூல்களை நுண்ணாய்வு செய்த அறிஞர் கருத்து தெரிவித்துள்ளனர்.

## பொறியியல் - 13

1. *அடிப்படை இயந்திரவியல்* — கே. ஆர். கோவிந்தன் (காரைக்குடி)
   Basic Engg. Mechanical

316 பக்கங்கள், 800 கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 20இயல் களை உடையது. 138 வரைபடங்கள்; 2 ஒளிப்படங்கள். சக்தி, உற்பத்தி என்ற இரு பெரும் பிரிவுகளை உடையது. சக்தி என்ற பிரிவில் பஞ்ச பூதங்களின் சக்தி, அதன் தன்மைகள், தற்போது உள்ள பொறிகளின் அடிப்படைகள், அமைப்புகள் மற்றும் நிறைகுறைகள் விளக்கப்பட்டுள்ளன. உற்பத்தி என்ற இரண்டாவது பிரிவில் எந்திரங்களின் நுட்பம், வகைகள், செயல்படுத்தும் முறைகள், நிறைகுறைகள் ஆகியவை அடங்கியுள்ளன.

2. *உலோகப் பொறியியல்*—கே.என்.கே.எஸ்.கே.சொக்கலிங்கம் (சென்னை)
   Metallurgical Engineering

343 பக்கங்கள். 278 கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 61 வரை படங்களும் 8 ஒளிப் படங்களும். உலோகவியல், இரும்பும் அதன் உலோகக் கலவை களும். உலோகங்களில் வெப்ப நடக்கைகள், இயந்திரப் பணிமுறைகள், உலோக வரைபடவியல், வார்ப்பட உலோகவியல், பற்றவைப்பு உலோகவியல், துகள் உலோகவியல் முதலிய 10 இயல்களைக் கொண்டுள்ளது இந்த நூல்.

3. *செயலாக்க மின்னணுவியல்* — டாக்டர் தி. க. பழனிவேலு (திருச்சி)
   Applied Electronics

430 பக்கங்கள். 320 கலைச் சொற்கள். 11 இயல்களைக் கொண்ட இந்நூல் மின்னணுவியல் பற்றிய அறிமுகத்தில் தொடங்கி அப்பொருள் தொடர்பான அடிப் படைச் செய்திகளைப் பொறிகள், திருத்திகள், பெருக்கிகள், அலைவான்கள், மின்னளவைக் கருவிகள், அலை, வீச்சு இவற்றின் பண்பு ஏற்றம், இறக்கம், பல்வகைச் சுற்றுக்கள் என்ற பொதுத் தலைப்புக்களில் நிரல்படுத்திக் கூறுகிறது. பயிற்சி வினாக்கள் தரப்பட்டுள்ளன. 86 வரைபடங்கள்.

4. *பொருள் வலிமையியல்* — டாக்டர் அ. இளங்கோவன் (சென்னை)
   Strength of Materials

512 பக்கங்கள்,250 கலைச் சொற்கள், 12 இயல்கள். பொருள் வலிமையியல் பற்றிய அறிமுகத்துடன், அச்சு விசைகள், நறுக்கு விசைகள்,விட்டங்கள், தகைவுகள், வெட்டுமுகப் பண்பு,சக்திக் கோட்பாடுகள், சுருள் வில்கள் பற்றிய பலசெய்திகளையும் விளக்கமாக எடுத்துரைக்கிறது. மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய விதத்தில் பயிற்சிகளும் தரப்பட்டுள்ளன. 130 வரைபடங்கள்.

5. *அடிப்படைப் பொறியியல்-மின்னியல்*—சொ. குமார் (செட்டிநாடு)
Basic Engg. Electricals

329 பக்கங்கள். 800 கலைச் சொற்கள். மின்னியல் கணியங்கள், மின் சுற்றுக்கள், மின் திறன் சாதனங்கள், மின்னளவைக் கருவிகள், மின்சாரத்தின் பயன்கள், முதலியவை பற்றி 6 இயல்களில் விவரித்துக்கூறுகிறது. பயிற்சி வினாக் களும் தரப்பட்டுள்ளன. அவற்றிற்கான விடைகளும் தரப்பட்டுள்ளன. 150 வரை படங்கள்.

6. *கேளொலிப் பொறியியல்* — டாக்டர் தி. க. சந்திரவடிவேலு (கோவை)
Acoustic Engg.

300 பக்கங்கள். 320 கலைச் சொற்கள். 6 இயல்கள், அதிர்வுகளின் அடிப் படைத் தன்மைகள் முதல் அலைகள், அவற்றின் தன்மை, ஓட்டம், நுட்பம், சக்தி மாற்றிகள், பேச்சுக் கருவிகள் வரை விரிவாகக் கூறுகிறது. அரங்குகள் சிலவற்றை விளக்கும் படங்களும் இணைக்கப்பட்டுள்ளன. பயிற்சி வினாக்கள் தரப்பட்டுள்ளன. 125 வரைபடங்கள், 8 படங்கள்.

7. *அடிப்படைக் கட்டுமான வடிவமைப்பு* — டாக்டர் இலெ. சு. ஜெயகோபால் (கோவை)
Basic Structural Design

446 பக்கங்கள். 225 கலைக் சொற்கள் 9 இயல்கள் உள்ளன. கட்டுமான வடிவமைப்புக் கணக்கீடு, பலவகையான கட்டுமானங்கள், அங்கங்கள், உத்தரங்கள். தாலக்கட்டுகள் முதலானவற்றை விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது. 75 வரைபடங்கள்.

8. *கட்டடத் தொழில் நுட்பம்* — டாக்டர் சூ. சி. நடேசன் (சென்னை)
Construction Technology

162 பக்கங்கள். 600 கலைச் சொற்கள், 13, இயல்கள். கட்டுமானப் பணிகள், மராமத்து செய்தல், வடிகால் அமைப்பு முதலான செய்திகள் விரிவாகக் கூறப்பட் டுள்ளன. பயிற்சி வினாக்கள் தரப்பட்டுள்ளன. 138 வரைபடங்கள்.

9. *பொருள்களின் இயற்பியல்* — மு. ஆறுமுகம் (சென்னை)
Physics of Materials

537 பக்கங்கள். 851 கலைச் சொற்கள். 13 இயல்கள், குறைக் கடத்திகள், திரவப் படிகக் காட்சியமைப்பு, மின்காப்புப் பொருள்கள், லேசர்கள் போன்றவற்றின் கருத்தியல்கள், மீக்கடத்திகள் முதலான செய்திகள் கூறப்பட்டுள்ளன. மாதிரிக் கணக்குகள், பயிற்சி வினாக்கள் ஆகியவை தரப்பட்டுள்ளன. 92 வரைபடங்கள்.

10. *மின்சுற்றுக் கோட்பாடு* — கு. நல்லதம்பி (சேலம்)
Circuit of Theory

567 பக்கங்கள், 200 கலைச் சொற்கள். 14 இயல்கள், மின்னூற்றுக்கள் மின்வலைகளை எளிமைப்படுத்த உதவும் பல்வேறு நுட்பங்கள், திசைமாறும் மின்

னோட்டம் பற்றிய அடிப்படைக் கருத்துகள், மின்வலை அமைப்பு, மின்வலைத் தோற்றம், மின்வலைக் கோட்பாடு முதலான பல்வேறு செய்திகள் அடங்கியுள்ளன. பயிற்சி வினாக்கள் தரப்பட்டுள்ளன. 43 தாள்களில் வரைபடங்கள்.

11. *பொறியியல் வரைபடம்* — ஊ. கு. பழனிசாமி (கோவை)
Engineering Drawing

200 பக்கங்கள், 234 வரைபடங்கள். வரை கருவிகள், எழுதும் முறைகள். வரைமுறைகள், கம்பின் வெட்டு வடிவங்கள். நேர் வீழ்ச்சித் தோற்றங்கள் எனத் தொடங்கி 16 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. 150க்கு மேற்பட்ட கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

12. *மண் விசையியல்* — கொடுமுடி சண்முகன் (சென்னை)
Soil Mechanics

242 பக்கங்கள், 155 வரைபடங்கள். நிலம் நீர் வளி உறவுகள், மண்பறிதல், நீர் ஊடுருவல், நிலத்தடி அழுத்தம் முதலான 13 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. 200க்கு மேற்பட்ட கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

13. *செயலாக்க நிலையியக்கவியல்* — டாக்டர் அ. ஆறுமுகம் (திருச்சி)
Applied Mechanics

424 பக்கங்கள், 166 வரைபடங்கள். நிலையியல், தகைவு, விகலத்தின் அடிப்படைத் தத்துவங்கள், தரையாணி இணைப்பு, எளிய இயந்திரங்கள் எனத் தொடங்கி 8 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. 300க்கு மேற்பட்ட கலைச் சொற்கள் இந் நூலில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## மருத்துவம்—11

1. *காச நோய்*—டாக்டர் அ. கதிரேசன் (சென்னை)
Tuberculosis

364 பக்கங்கள், 225 கலைச்சொற்கள், காச நோயின் வரலாறு, அது பரவிய நிலை, காச நோய்க் காரணி, குழந்தைப் பருவக் காச நோய், கர்ப்பிணிகளில் காச நோய், நோய்க் காரணி, அறிகுறிகள், சிக்கல், விளைவு, சிகிச்சை, நோய்த் தடுப்பு முறைகள் முதலானவை 19 இயல்களில் கூறப்பட்டுள்ளன. 21 வரைபடங்களும் 17 ஒளிப்படங்களும்.

2. *உடலியங்கியல்*—டாக்டர் வெ. அனந்தராமன் (சென்னை)
Physiology

477 பக்கங்கள், 818 கலைச் சொற்கள், உடலியங்கியல் வரலாறு, இதயமும் சுற்றோட்டமும், உயிர்த்தல், கழிவு முறைகள், செரித்தல்,நாளமில்லாச் சுரப்பிகள், இனப்பெருக்கம், நரம்பும் தசையும், நடுநரம்பு மண்டலம், தன்னியக்க நரம்பு மண்டலம், ஐம்புலன்கள் ஆகிய பத்துப் பெரும் பிரிவுகளாக நூல் அமைந்துள்ளது.

3. *உடற்கூறு: கையும் நெஞ்சுப் பகுதியும்*—டாக்டர் எம். முத்து (மதுரை)
Anatomy–Thorax and Upper Limbs

377 பக்கங்கள், 1080 கலைச்சொற்கள், இந்நூல் மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது. முதல் பகுதியில் பொதுவான அறிமுகம்; இரண்டாவது பகுதியில் கைகளும், மூன்றாவது பகுதியில் நெஞ்சுப் பகுதியும் விளக்கப்பட்டுள்ளன. மூன்று பகுதிகளிலுமாக மொத்தம் 17 இயல்கள் உள்ளன. 190 படங்கள்.

4. *உடலமைப்பியல்: தலையும் கழுத்தும் மூளையும்*—டாக்டர் கா. லோகமுத்துக் கிருட்டிணன் (சென்னை)
Anatomy : Head, Neck and Brain

740 பக்கங்கள், உடற் பகுதிகளின் அமைப்பை விளக்குவதோடு மருத்துவ மாணவர்கள் இவற்றைப் பகுத்தாயவும் இந்நூல் வழிகாட்டுகிறது. கழுத்து, கண், நாசி, வாய், நாக்கு, தொண்டை, செவி, நெற்றிப்பொட்டு முதலானவற்றை 23 இயல்களிலும் மூளையைப்பற்றி 15 இயல்களிலும் விளக்குகிறது.

5. *பொது அறுவை மருத்துவம்*—டாக்டர் எஸ். நரேந்திரன் (தஞ்சை)
General Surgery

400 பக்கங்கள், 625 கலைச்சொற்கள், காயங்கள், தொற்று, சிரை, கழலை, கட்டி, புற்றுக்கட்டி முதலியவை பற்றிய அடிப்படைச் செய்திகளும். அவற்றுக்காக மேற்கொள்ள வேண்டிய அறுவை முறைகளும் 18 இயல்களில விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

6. *நுண்ணுயிரியல்*—டாக்டர் செ. இந்திரா பிரியதரிசினி (சென்னை)
Microbiology

646 பக்கங்கள். 300 கலைச்சொற்கள். 51 படங்கள். நோய்கள் தோன்றக் காரணமாக இருக்கும் நோய் நுண்ணுயிர்களைப் பற்றியும். நோய்த் தடுப்பு முறைகள் பற்றியும் விவரமாக இந்நூல் கூறுகிறது. 6 பகுதிகளையும் 53 இயல்களையும் உடையது. பாக்டீரியாவின் வடிவமைப்பு, நுண்ணுயிர்களின் மரபியல், வளர்ப்பு முறை முதலான பல கருத்துக்கள் முதல் பகுதியிலும், நோய் உண்டாதல், காப்பு மூலம், காப்பு மண்டகம், காப்புப் பொருள்கள், காப்புப் பொருள் விளைவுகள், காப்புச் செயல் முதலிய செய்திகள் இரண்டாவது பகுதியிலும், ஸ்டெஃபிலோ காக்கை, பெசிலஸ், மைகோ பாக்டீரியம், மைகோ பிளாஸ்மா முதலியவை பற்றி மூன்றாவது பகுதியிலும் விளக்கப்பட்டுள்ளன. நான்காவது பகுதி காளான்களைப் பற்றிக் கூறுகிறது. ஐந்தாவது பகுதி வைரசுகள் பற்றியும், ஆறாவது பகுதி தண்ணீரிலும் பாலிலும் உள்ள நுண்ணுயிர்கள் பற்றியும் கூறுகின்றன.

7. *குழந்தை—அறுவை மருத்துவம்*—டாக்டர் குழந்தைவேலு (தஞ்சை)
Paediatric Surgery

173 பக்கங்கள், 28 இயல்கள், இரத்தக் குழாய்களில் ஏற்படும் கோளாறுகள், தீப்புண்கள், எலும்பு நோய்கள், வாத நோய்கள், பிறவிக் கோளாறுகள். சுரப்பிகளில்

ஏற்படும் கோளாறுகள், தொண்டை, பித்தப்பை ,குடல், சிறுநீரகம் இவை குறித்த நோய்களும், அவற்றின் அறுவைச் சிகிச்சையும் விளக்கப்பட்டுள்ளன.

8. *குழந்தை நல மருத்துவம்*—டாக்டர் ஞா. இராசராசேசுவரி (தஞ்சை)
Paediatrics டாக்டர் அ. செகதீசன் ,,

1485 பக்கங்கள், நான்கு தொகுதிகளாக உள்ளன. 123 பக்கங்களுக்குக் கலைச் சொற்பட்டியல் உள்ளது. 96 ஒளிபடங்களும் 46 வரைபடங்களும் குழந்தை நலம் குறித்து மேற்கொள்ள வேண்டிய முறைகள், குழந்தை நோய்களும் நீக்கும் முறைகளும் பற்றித் தெளிவாகவும் விரிவாகவும் கூறுகிறது.

9. *உயிர் வேதியல்*—டாக்டர் சி. இராமகிருஷ்ணன் (புதுச்சேரி)
Bio-Chemistry

747 பக்கங்கள். சுமார் 800 கலைச் சொற்கள், 24 இயல்கள். கார்போ ஹைட்ரேட்டு, கொழுப்பினி, புரதங்கள் இவற்றின் வளர்சிதை வினைமாற்றம், வைட்டமின்கள், ஹார்மோன்கள், செல், மரபு உயிர் வேதியியல் முதலான தலைப்பு களில் கருத்துக்கள் தரப்பட்டுள்ளன.

10. *அறுவை சிசிச்சை நோய் நாடல்*—டாக்டர் வெ. சிவராமன் (தஞ்சை)

பக்கம் 406. வரைபடம் 26. ஒளிப்படம் 157. 43 அத்தியாயங்கள். அறுவைச் சிகிச்சை நோயாளியை எவ்வாறு அணுகி மருத்துவச் சோதனை செய்ய வேண்டும், நோயினை எவ்வாறு நிர்ணயிக்க வேண்டும் என்பதைத் தக்க எடுத்துக்காட்டுகளுடன் இந்நூல் கூறுகிறது. 500 கலைச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

11. *மருந்தியல்*—டாக்டர் மு. துளசிமணி (பாண்டிச்சேரி)
டாக்டர் ச. ஆதித்தன்

பக்கங்கள் 946. படங்கள் 49. பொது மருந்தியல், தானியங்கி நரம்பு மண்டல மருந்தியல், மத்திய நரம்பு மண்டல மருந்தியல், மனநோய் மருந்தியல், தல ஹார்மோன்கள், இதய குருதிக் குழாய் மண்டல மருந்தியல், சிறுநீரகம், இரைப்பை—குடல் பாதை மண்டல மருந்தியல், சுவாச மண்டலம், இரத்தத்தின் மீதும் இரத்தச் செல்களின் மீதும் இயங்கும் மருந்துகள், வேதிச் சிகிச்சை, ஹார்மோன்களின் மருந்தியல், வைட்டமின்கள், பலதரப்பட்ட மருந்துகள் எனப் பதினைந்து பொதுத் தலைப்புகளில் 91 அத்தியாயங்களில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. 400 கலைச் சொற்கள் கொண்ட பட்டியல் தரப்பட்டுள்ளது.

### திட்டச் செலவு

இந்த நூலாக்கத் திட்டத்துக்காக ரூ. 1,30,000 (ரூபாய் ஓர் இலட்சத்து முப்பதாயிரம்) இதுவரை செலவாகியுள்ளது.

### கலைச்சொல் தொகுப்புப்பணி

நூலாக்கத் திட்டத்தில் ஈடுபட்டுள்ளோருக்கு உதவும் வகையிலும், கலைச் சொற்களைத் தரப்படுத்துதற்குத் துணைபுரியும் வகையிலும் பொறியியல், மருத்துவக் கலைச் சொற்கள் தொகுக்கப்பட்டன. (பொறியியல்—13,000 சொற்கள்; மருத்துவம்—12,000 சொற்கள்). இதற்காக 140 மூலங்கள் (Sources) பயன்படுத்தப் பட்டன. இலங்கையில் உருவாக்கப்பட்ட கலைச் சொற்களும் இப்பட்டியல்களில் இடம் பெற்றுள்ளன. மூலங்கள் கலைச்சொல் பட்டியலில் எண்ணிடப்பட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

### கலைச்சொல் வங்கி

பொதுமக்களைக் கலைச் சொல்லாக்கப் பணியில் ஈடுபடுத்தும் நோக்கத்தோடு 'கலைச்சொல் வங்கி' ஒன்றும் செயல்பட்டு வருகிறது. குறிப்பிட்ட கலைச் சொற்களை அட்டையில் எழுதி, அதற்கான தமிழ்ச் சொற்களை உருவாக்கித் தருமாறு பொது மக்களும், துறை அறிஞர்களும் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர். இதற்காகப் பதிலீடு அட்டைகள் பயன்படுத்தப்படுகின்றன. சிலர் இப் பணியில் ஆர்வம் காட்டுகின்றனர்.

### நூலடைவு

தமிழில் பொறியியல், மருத்துவவியல், பொது அறிவியல் தொடர்பான நூல் களைத் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் லிமிடெட், சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் முதலிய நுறுவனங்கள் வெளியிட்டுள்ளன. கலைக்கதிர், தென்மொழி, விஞ்ஞானச்சுடர் முதலிய இதழ்கள் அறிவியல் கட்டுரை களை வெளியிட்டுள்ளன. இலங்கையிலிருந்தும் பல அறிவியல் நூல்கள், கட்டுரை கள் வெளிவந்துள்ளன. இவற்றுக்கு ஒரு நூலடைவு தயாரிக்கும் பணி மேற்கொள்ள பட்டது. பொறியியல், தொழில் நுட்பவியல் (50 நூல்கள்; 540 கட்டுரைகள்). மருத்துவவியல் (67 நூல், 357 கட்டுரைகள்). கலைச் சொற்கள் (38 அகராதிகள், 40 கட்டுரைகள்) ஆகியவற்றுக்கான நூலடைவுகள் தயாரிக்கப்பட்டு உள்ளன. பொது அறிவியல் நூலடைவு தயாரிக்கப்பட்டு வருகிறது. தயாரிக்கப்பட்ட நூலடைவுகள் பல அறிஞர்களுக்கும் அனுப்பப்பட்டுக் கருத்தறியப்பட்டது. அவர்கள் நூலடைவில் சேர்ப்பதற்கென அனுப்பிய குறிப்புகள். நூலடைவில் 'சேர்க்கை' எனக் குறிக்கப் பட்டுச், சேர்க்கப்பட்டு வருகின்றன.

### அறிவியல் கண்காட்சி

பொறியியல், மருத்துவ மாணவர்களுக்குரிய பாட நூல்களை உருவாக்கிய தோடு அமையாது, பொதுமக்களிடையே அறிவியல் உணர்வைத் தூண்டுதலையும்,




திருச்சி, சென்னை வானொலி நிலையங்களுடன் இணைந்து
நடத்திய அறிவியல் பேரரங்கு
( 12—6—83 — 19—6—83 )

அடிப்படை அறிவியல் செய்திகளைப் பரப்புதலையும் நோக்கமாகக்கொண்டு சென்னை, திருச்சி வானொலி நிலையங்களோடு இணைந்து தமிழ்ப் பல்கலைக்கழகம் 1983 சூன் 12 முதல் 19 முடிய நாள்தோறும் காலை 10 மணி முதல் இரவு 10 மணி வரை தஞ்சைச் சங்கீத மகாலிலும், தூய பேதுரு மேல்நிலைப்பள்ளி விளையாட்டுத் திடலிலும் அறிவியல் கண்காட்சி ஒன்றை நடத்தியது. இக் கண்காட்சியின்போது பொது மக்களுக்குப் பயன்படும் விதத்தில் அறிவியல் கருத்தரங்கு, கவியரங்கு, கலை நிகழ்ச்சிகள், திரைப்படக் காட்சிகள், செயல் விளக்க முகாம்கள், அறிவியல் பயிற்சி முகாம்கள் ஆகியனவும் நடத்தப்பெற்றன. தமிழக அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர் கள் மட்டுமின்றி ஆந்திரம், கேரளம் மற்றும் மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த அறிவிய லாளர்களும் இந் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பளித்தனர்.

இக் கண்காட்சியில் பங்குபெற்ற அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ் நாட்டு வேளாண்மைப் பல்கலைக் கழகம், தஞ்சை மருத்துவக் கல்லூரி, முருகப்பா பல்தொழில் நுட்பப் பயிலகம், தமிழக அரசின் பொதுநல வாழ்வுத் துறை, சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை, புது தில்லி பெட்ரோலியப் பொருட்கள் சேமிப்பு நிறுவனம், கோவை இலக்குமி நூற்பு ஆலை, பம்பாய் இழப்புத் தடுப்புக் கழகம், தமிழ்நாடு கதர் கைத்தொழில் வாரியம், பாரத ஸ்டேட் வங்கி, ஈ. ஐ. டி. பாரி ஆயில் என்ஜின்கள், பிலிப்ஸ் இந்தியா, தஞ்சைத் தொலைபேசித் துறை, திருச்சி பாரத கனரக மின்சாதன நிறுவனம் முதலிய அமைப்புகள் அறிவியல் பயிற்சி முகாம்கள் நடத்தவும், முன்மாதிரிக்கிராமம் ஒன்றை அமைத்து அன்றாட வாழ்வில் அறிவியலை எவ்வாறு பயன்படுத்திப் பலன் பெறலாம் என்பதற்கான செயல் விளக்கம் அளிக்கவும் உதவின. சுமார் 9 இலட்ச ரூபாய்ச் செலவில் பல்கலைக் கழகத்தின் பங்கு ரூபாய் 80 ஆயிரம். 32 அரங்குகள் பங்குகொண்ட இந்த ஒருவாரக் கண்காட்சியைக் கண்டும், பேரரங்கு நிகழ்ச்சிகளைக் கேட்டும் 9 இலட்சம் மக்கள் பயனடைந்தனர். இந்த நிகழ்ச்சிகளை வானொலி நிலையங்கள் ஒலிபரப்பியதால், தமிழகத்தின் பிறபகுதி மக்களும் கேட்டுப் பயன் பெற்றனர்.

இக் கண்காட்சியை ஒட்டித் தயாரிக்கப்பட்ட 'அறிவியல் மலர்கள்' என்ற நூலை அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் வ. செ. குழந்தைசாமி வெளியிட்டார்.

### அறிவியல் கட்டுரைத் தமிழ்ச் சுருக்க வெளியீடுகள்

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகமும் தமிழ்ப் பல்கலைக் கழகமும் இணைந்து 1983 ஆகஸ்டு 5, 6 ஆகிய நாள்களில் அறிவியல் கருத்தரங்கு ஒன்றைத் திருச்சியில் நடத்தின. தமிழில் அறிவியல் ஆய்வுக் கட்டுரைகள், நூலடைவுகள், களஞ்சியங்கள், அறிவியல் கட்டுரைகளின் தமிழ்ச் சுருக்க வெளியீடுகள், தமிழில் துறைச் சொற்கள் முதலிய தலைப்புகளில் கலந்துரையாடல்களும் கருத்துப் பரிமாற் றங்களும் நடைபெற்றன. நூலடைவு, களஞ்சியம், கட்டுரைச் சுருக்க வெளியீடு முதலிய பணிகளுக்குத் தேவையான நடுவண், மாநில, தனியார் பொருளுதவித் திட்டங்கள் பற்றியும் பேசப்பட்டது. பாரதிதாசன் பல்கலைக்கழகத் துணைவேந்தர்,

தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், வேளாண்மைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் அரங்கசாமி, திருச்சி மண்டலப் பொறியியல் கல்லூரிப் பேராசிரியர் நாகரத்தினம், நடுவண் அரசின் அறிவியல் தொழிற்கூட ஆராய்ச்சிக் கழகத்தைச் சார்ந்த அறிவியல் இதழாசிரியர் எஸ். அருணாசலம், டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம் பேராசிரியர் பொன்னுச்சாமி முதலியோர் இக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

பேராசிரியர் பொன்னுச்சாமி அவர்களை ஆசிரியராகக் கொண்டு அறிவியல் வளர்ச்சிகளை எடுத்துரைக்கும் தமிழ் இதழ் ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் முத்திங்களுக்கொருமுறை வெளியிட ஏற்பாடு செய்யும் எனக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

### அறிவியல் பண்ணை

அறிவியல் அறிவு சிறிதும் இல்லாதவர்களும், ஓரளவு அடிப்படை அறிவியல் அறிவு உள்ளவர்களும், பள்ளிச் சிறுவர்களும் பயன்பெறும் பொருட்டு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை அறிவியல் செய்திகளைத் தரமான பிற மொழி அறிவியல் இதழ்களிலிருந்து தமிழில் மொழி பெயர்த்தும், தானாகவே தயாரித்தும் தமிழ் நாளிதழ் / இதழ் வாயிலாக வெளியிடும் திட்டத்தைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டம்-தமிழ் வளர்ச்சி இயக்ககம் 1983 நவம்பர் முதல் தனது ‘அறிவியல் பண்ணை’ வழிச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்ச் சமூகத்தில் அறிவியல் உணர்வையும் அறிவையும் வளர்த்துத் தமிழர்களை மேம்படுத்த எண்ணுதல் இதன் தலையாய குறிக்கோள் ஆகும்.

### அறிவியல் சொற்பொழிவு வரிசை

அறிவியல் துணுக்குகள், கட்டுரைகள், செய்திகள், அறிவியலார் வாழ்க்கை வரலாறு, அவர்தம் சாதனைகள் இவற்றை வெளியிடுவதோடு, பல துறை அறிஞர் களையும் அழைத்துப் பொறியியல், தொழில் நுட்பவியல், பொது அறிவியல், மருத்துவம், பொதுநலவியல் ஆகியவை குறித்துச் சொற்பொழிவாற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சொற்பொழிவுகளைச் சிறுசிறு நூல்களாக வெளியிடும் திட்டமும் உள்ளது. இந்தச் சொற்பொழிவுகள் தஞ்சையில் மட்டுமன்றிப் பல்வேறு சிற்றூர்களிலும் நடைபெற உள்ளன. எதிர்வரும் மூன்று திங்கள்களுக்குள் 15 சொற் பொழிவுகள் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கலைச் சொல்லாக்கம்

அடிப்படை அறிவியல் உணர்வையும் அறிவையும் வளர்ப்பதோடு மொழியின் வளர்ச்சியையும் அறிவியல் பண்ணை தன் நோக்கங்களில் ஒன்றாகக் கொண்டு செயல்படும். கலைச் சொற்களை நிலைப்படுத்தி அகராதி தயாரிக்கும் திட்டத்துக்கு இது உதவி செய்யும்.

### அறிவியல் கலை நிகழ்ச்சிகள்

அறிவியல் கருத்துகளை மையமாகக் கொண்ட கலை நிகழ்ச்சிகளைக் கிராமிய கலை வடிவங்களான வில்லுப்பாட்டு, தெருக்கூத்துவழி ஊர்தோறும் நடத்திக்காட்டவும் சில நிகழ்ச்சிகளை 'வீடியோ' மூலம் ஒளிபரப்பவும் அறிவியல் பண்ணை முனைந்து செயல்பட்டு வருகிறது.

### இதழ்கள்—வானொலி ஆதரவு

அறிவியல் பண்ணை தயாரித்து அனுப்பிய செய்திகளையும், கட்டுரைகளையும் தினமணி, செந்தமிழ்ச் செல்வி, ராணி முதலிய இதழ்கள் வெளியிட்டு வருகின்றன. பிற இதழ்களும் வெளியிட முன்வந்துள்ளன.

### அறிவியல் இதழ் அன்பளிப்பு

அறிவியல் இதழ்களை வாங்குதல், அவற்றிலுள்ள கட்டுரைகளைப் படித்தல் குறைந்து காணப்படும் இன்றைய சூழ்நிலையில் அறிவியல் இதழ் வெளியீடுகளை ஊக்குவிக்கவும், அறிவியல் கட்டுரைகளைப் படிக்கும் பழக்கத்தை வளர்க்கவும் தமிழ்ப் பல்கலைக் கழகம் 'கலைக்கதிர்', 'விஞ்ஞானச் சுடர்' ஆகிய அறிவியல் இதழ்களை வாங்கித் தமிழ்நாட்டிலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகளிலும் வாழும் 200 வாசகர்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைக்கிறது.

அறிவியல், தொழில் நுட்பவியல், மருத்துவவியல் கருத்துகளைத் தமிழில் கூறுதற்கியலாது என்கிற கருத்து ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று; முயன்றால் முடியும். தமிழர்க்கும் தமிழுக்கும் அந்த ஆற்றல் உண்டு என்பது தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பொறியியல் / மருத்துவவியல் நூலாக்கத் திட்டம், கலைச்சொல் வங்கி, அறிவியல் பண்ணை, அறிவியல் பேரரங்கு ஆகியவை மூலம் தெளிவுப்படுத்தப் பட்டுள்ளது. தமிழர்தம் அறிவியல் சிந்தனை வளர்ச்சிக்கும் அறிவியல் தமிழின் வளர்ச்சிக்கும் இன்னும் முனைப்போடு செயல்படத் தமிழ்ப் பல்கலைக் கழகம் உறுதி கொண்டுள்ளது.

# 17. களஞ்சிய மையம்

தமிழ்மொழி மட்டுமறிந்த ஒரு தமிழ் மாணாக்கனுக்கு உலக அரங்கில் ஊடாடும் அறிவுச் செல்வத்தை வடித்துத் தரும் தொகுப்பு நூல் தமிழ்க் களஞ்சியங்கள்தாம். முதியோர் கல்வி, அஞ்சல் வழிக் கல்வி, தடையில்லாப் பல்கலைக் கழக வழிக் கல்வி என்று கற்க வாய்ப்புப் பெருகிய இந்த நாளில் எந்தச் செய்தியையும் விரைவில் அறிதற்குக் களஞ்சியங்களே துணையாக அமைகின்றன.

உலக நாடுகளில் பரவியுள்ள ஆங்கிலத்திற்குச் சிறப்பு நிலையிலும் பொது நிலையிலும் எண்பதிற்கு மேற்பட்ட களஞ்சியங்கள் வெளியாகி இருக்கின்றன. இரஷ்யன், சீனம், கன்னடம், பிரெஞ்சு, செர்மன் முதலிய மொழிகளில் எண்ணற்ற களஞ்சியங்கள் இருப்பது புதிய செய்தியன்று.

இந்திய மொழிகளுக்குள்ளே தமிழுக்குத்தான் முதன் முதலில் கலைக் களஞ்சியம் ஒன்று உருவாகி முற்றுப் பெற்றது. அதன் பின்னர் மலையாளம் இரு களஞ்சியங்களை வெளியிட்டது. கன்னடமும் தெலுங்கும் களஞ்சிய வெளியீட்டுப் பணியில் முயன்றுழைக்கின்றன. ஒரியாவில் தனியார் ஒருவர் தொடர்ந்து களஞ்சியப் பணி செய்து வருகிறார். வங்காளம், இந்தி முதலிய மொழிகளிலும் களஞ்சியம் உருவாக்கும் முயற்சி நடைபெறுகிறது.

கலைக் களஞ்சியம் வெளியாகி முப்பது ஆண்டுகளாகி விட்டன. பல புதுச் செய்திகள், கண்டுபிடிப்புகள் அந்தத் தொகையில் இடம் பெறாதிருக்கின்றன. அதனைத் திருத்திப் பிற்சேர்க்கைகளை வெளியிடும் முயற்சியும் தமிழகத்தில் நடைபெறவில்லை. மறுதோன்றிப் பதிப்பு மட்டும் அண்மையில் வெளியாகி உள்ளது, திருத்தப் பணியை அரசு மேற்கொள்ளச் சிந்தனை செய்யும்போது, தமிழ்ப் பல்கலைக் கழகச் சட்ட வரைவுகளின்படி களஞ்சிய பேரகராதி முதலியன தொகுக்கும் பணியை மேற்கொள்வதை நினைவு கூர்ந்து தமிழ்ப் பல்கலைக் கழகம் அறிவியலுக்கென இருபது தொகுதிகளையும், வாழ்வியலுக்கெனப் பதினான்கு தொகுதிகளையும் வெளியிட முடிவு செய்தது.

ஆசிரியர் குழுவில் ஒருசிலர் பணியாற்றிப் பல பத்தாண்டுகளில் களஞ்சியங்களை நிறைவேற்றல், பதிப்பாசிரியர் பலரை நியமித்துக் களஞ்சிய வேலைகளைத் துரிதமாக முடித்தல் என்ற இரு முறைகளில் பிரிட்டிஷ் என்சைக்ளோபீடியா மேற்கொண்டுள்ள முறையைப் பின்பற்றி நான்காண்டுகளுக்குள் களஞ்சியத்தை முடிப்பதற்கு இரு தொகுதிகளுக்கு ஓராசிரியர் வீதம் அறிவியலுக்குப் பத்துப் பதிப்பாசிரியரும்,வாழ்வியலுக்கு ஏழு பதிப்பாசிரியரும் ஒவ்வொரு பதிப்பாசிரியருக்கும் ஒரு செய்தி திரட்டுவோர், தட்டச்சர் ஆகிய துணையுடன் நெறிப்படுத்த அறிவியலுக்கு ஒரு தலைமைப் பதிப்பாசிரியரும் வாழ்வியலுக்கு ஒரு தலைமைப் பதிப்பாசிரியரும் என்ற முறையில் சென்ற சூன் முதல் களஞ்சிய மையம் உருவாயிற்று.

அறிவியல் களஞ்சியத் தலைமைப் பதிப்பாசிரியராகத் திரு பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு) நியமிக்கப்பட்டு, 1983 சூன் மாத இறுதியில் பதவியேற்றார். திரு ஏ. வீ. சுப்பிரமணியம் வாழ்வியல் தலைமைப் பதிப்பாசிரியராக மையத்தில் சூன் நடுவில் பதவியிற் சேர்ந்தார். அவர் பதவியிற் சேருமுன், களஞ்சியம் செய்து




சென்னைக் களஞ்சிய மையம்
நெறிப்படுத்துவோர் கூட்டம் 28—11--1983
தமிழக முதலமைச்சர்
மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில்
ஆலோசனை.



அகில இந்தியக் கலைக்களஞ்சியக் கருத்தரங்கு
சென்னைக் களஞ்சிய மையம்
( 27, 28—11—83 )

அனுபவப்பட்ட முன்னாள் கல்வியமைச்சர், திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியாருடன் துணைவேந்தர் அவர்கள் கோவை, தஞ்சை ஆகிய இரு இடங்களிலும் விரிவாக ஆலோசனை நடத்தினார். பின்னர்த் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் இப்போதுள்ள தலைவர் திரு சி. சுப்பிரமணியத்துடன் சென்னையிலே செயற்படும் குழந்தைகள் களஞ்சிய மையத்திற்குச் சென்று அதன் பணிமுறைகளையும் துணைவேந்தர் அவர்கள் தெரிந்துகொண்டார்கள். அதன் பின்னர் மே மாதம் இரண்டு நாள், சென்னையில் திரு பி.எல். சாமி, திரு ஏ. வீ. சுப்பிரமணியம் ஆகியவர்களுடன் கூடி நீண்ட செயல் விளக்க அறிக்கையொன்றை விவாதித்து உருவாக்கிச் செயல்படுத்துவதற்கு நல்கினார்கள்.

அதன்படி பதவியிடங்கள் விளம்பரம் செய்யப்பட்டு, சென்னையில் வாழும் ஆளுநர் குழு உறுப்பினர்கள். வளர் தமிழ்ப் புலத் தலைவர் அடங்கிய குழு ஒன்று தக்க பதிப்பாசிரியர்கள்,செய்தி திரட்டுவோரைத் தேர்ந்தெடுத்தது; தட்டச்சர்களையும் தேர்ந்தெடுத்தது.தலைமைப் பதிப்பாசிரியர்கள் ஒவ்வொருவரும் ஓர் ஆங்கிலக் களஞ்சியத்தைத் திறனாய்வு செய்து தலைப்புகளை உருவாக்கினர். துணையாளர்கள் வந்ததும் தலைப்புகள் ஒருமிக்கப்பட்டுக் கட்டுரையாளர்க்குக் கட்டுரை கோரி வேண்டுகோள் அனுப்பப்பட்டது. துணையாளர்களும் தங்கள் துறையில் பல தலைப்புகளில் கட்டுரை எழுதத் தொடங்கியுள்ளனர்.

1983 நவம்பர் 28, 29 ஆம் நாள்களில் அகில இந்தியக் கருத்தரங்கொன்று சென்னையில் நடைபெற்றது, இதில் கட்டாக், மைசூர், பூனா, திருவனந்தபுரம் முதலிய நகரங்களிலிருந்து களஞ்சியப் பதிப்பாசிரியர்கள் வந்திருந்தனர். அந்தக் கருத்தரங்கில் எல்லாத்துறைகளுக்குமுரிய வல்லுநர்களின் முகவரி, கட்டுரைச் செய்திகள் முதலியவற்றை பலமொழிக் களஞ்சியங்களுக்குத் தந்து உதவக் களஞ்சிய மையம் ஒன்றை அமைக்கப் பரிந்துரை செய்யப்பட்டது.

இதனைத் தஞ்சையில் மைய அரசின் நிதி உதவியுடன் நிறுவவும் முடிவு செய்தது. அன்று மாலை களஞ்சியத்தின் காப்பாளர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் துணைத்தலைவர்கள் கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம், இலங்கைத் தொழிலமைச்சர் தொண்டைமான், கல்விச் செயலாளர் திரு டி. டி. சுந்தர்ராஜ் உட்பட பலர் பங்கேற்றனர்.அதில் ஏப்ரல் மாதம் மீண்டும் கூடும் கூட்டத்திற்கு முன்மாதிரிப்படிவம் ஒன்று வெளியிடுவதென்று முடிவாயிற்று.

இப்போது கட்டுரைகள் பிறராலும், களஞ்சியப் பதிப்பாசிரியர்களாலும் எழுதப்படுகின்றன. அட்டைகள் தயார் செய்யப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொருளிலும் வரும் தலைப்புகள் நிறைவு தருவனவா என்றறிய அந்தத் துறை வல்லுநர்களுக்கு வினாப் பட்டியல் வழிக் கருத்தறிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது, பல இடங்களில் தக்கவர்கள் நிரப்பப்பட உள்ளனர்.

பணியாற்றுவோர்

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. திரு எ. வீ. சுப்பிரமணியம்<br>வாழ்வியல் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர் | 15—6—83 முதல்<br>5—3—84 முடிய |
| 2. திரு பி. எல். சாமி, இ. ஆ. ப. (ஓய்வு)<br>அறிவியல் களஞ்சிய முதன்மைப் பதிப்பாசிரியர் | 23—6—83 முதல் |
| 3. டாக்டர் திருமதி. க. சாவித்திரி, எம்.ஏ., பிஎச்.டி.<br>பதிப்பாசிரியர்—உளவியல் | 22—9—83 முதல் |
| 4. டாக்டர் அரோமா குளோரிசாம், எம்.ஏ., பிஎச்.டி.<br>பதிப்பாசிரியர்—பொருளாதாரம் | 28—9—83 முதல் |
| 5. திரு கொடுமுடி. ச. சண்முகம்,<br>பி.ஈ.,டி.எஸ்.எஸ்., எம்.ஐ.இ.<br>பதிப்பாசிரியர்—பொதுப் பொறியியல் | 19—10—83 முதல் |
| 6. திரு இரா. அண்ணாமலை, எம்.ஏ., எம்.லிட்., பி.டி.<br>பதிப்பாசிரியர்—வரலாறு | 3—12—83 முதல் |
| 7. திரு நா. வேதமணி மானுவேல்,<br>எம்.ஏ. (தமிழ்) எம்.ஏ., (தத்துவம்) பி.எச்.டி.<br>பதிப்பாசிரியர்—கல்வியியல் | 7—12—83 முதல் |
| 8. திருமதி உலோ. செந்தமிழ்க் கோதை<br>பி.ஈ., எம்.எஸ்சி., எம்.சி.எஸ்.ஐ., எம்.ஐ.சி.<br>பதிப்பாசிரியர்—மின் இயந்திர பொறியியல் | 31—12—83 முதல் |
| 9. திரு சாமி சண்முகம், எம். பி. பி. எஸ்.<br>பதிப்பாசிரியர்—மருத்துவம் | 2—1—84 முதல் |
| 10. திரு எஸ். கமலநாதன், எம்.எஸ்சி.<br>பதிப்பாசிரியர் | 13—1—84 முதல் |
| 11. திரு மா. பூங்குன்றன், எம்.ஏ.<br>செய்தி திரட்டுபவர் | 20—8—83 முதல் |
| 12. திரு மு. முத்தையன், எம்.ஏ. எம்.ஃபில்.<br>செய்தி திரட்டுபவர் | 1—9—83 முதல் |
| 13. திரு பா.சந்திரன், எம்.ஏ., எம்.ஃபில்<br>செய்தி திரட்டுபவர் | 9—9—83 முதல் |

14. செல்வி சுபேதாபானு, எம்.ஏ., எம்.ஃபில். 1—9—83 முதல்
செய்தி திரட்டுபவர்

15. திருமதி ந. வள்ளியம்மாள், எம்.ஏ.,எம்.ஃபில்., பி.டி. 26—10—83 முதல்
செய்தி திரட்டுபவர்

16. திரு விசுவ சிவசுப்பிரமணியம், பி.எஸ்சி., எம்.பி.பி.எஸ். 18—11—83 முதல்
செய்தி திரட்டுபவர்

17. திரு அ. மோகன், எம்.எஸ்சி. 21—11—83 முதல்
செய்தி திரட்டுபவர்

18. திரு ப. கிருட்டிணன், எம்.ஏ.,பிஎச்.டி. 1—12—83 முதல்
செய்தி திரட்டுபவர்

19. திருமதி வ. ஜெயக்கொடி, எம்,எஸ்சி., எம்.ஃபில். 23—12—83 முதல்
செய்தி திரட்டுபவர்

20. திரு சே. கூடலிங்கம், எம்.ஏ. 9—1—84 முதல்
செய்தி திரட்டுபவர்

21. திரு இரா. முரளி 6—2—84 முதல்
செய்தி திரட்டுபவர்

## 18. தமிழ்ப்பெரும் பேரகராதி

சென்னைப் பல்கலைக் கழகம் 1936ஆம் ஆண்டில் ஆறு தொகுதிகளாகத் தமிழ்ப் பேரகராதி ஒன்றை வெளியிட்டது. அன்றுள்ள சூழ்நிலையில் இந்திய மொழிகளுள், தமிழுக்குத்தான் இந்தியாவில் தொகுத்த சிறப்பகராதியாக் இது கருதப் பட்டது. தமிழ்ச் சொல், ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, ஆங்கிலப் பொருள், தமிழ்ப் பொருள், தமிழ் எடுத்துகாட்டுகள் என்ற முறையில் இது தொகுக்கப்பட்டது. எடுத்துகாட்டுகள் விரிவாகக் கால வரையறையுடன் கொடுக்கப்படவில்லை.

1936 க்கு மேல் பல இலக்கிய நூற்கள் வெளியாகி உள்ளன; சொல்லடைவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன ; மொழியியல் படிப்பு வளர்வுற்றுள்ளது ; அகராதி ஆக்கலில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு பத்துத் தொகுதிகளாகத் தமிழ்ப் பேரகராதியைப் பெருமளவிற் செய்யத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்தது,

பெரும் பேரகராதியில் தமிழ்ச் சொல், தமிழ்ப் பொருள், கால வரையறையுடன் எடுத்துக்காட்டுகள் தருதல் என்ற முறையைப் பின்பற்றி :

(அ) பயன்படுத்தப்பட்டுள்ள இலக்கிய இலக்கணச் சொற்கள் அனைத்தையும் தொகுத்தல்

(ஆ) தற்கால இலக்கிய இலக்கணச் சொற்களைத் தொகுத்தல்

(இ) பொது இலக்கியங்களில் ஆட்சிபெற்ற கலைச் சொற்களை தொகுத்தல்

(ஈ) மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் ஆட்சிபெற்ற தமிழ்ச் சொற்களைத் தொகுத்தல்

(உ) வட்டார வழக்குச் சொற்களைத் தொகுத்தல் என்று வரையறை செய்யப்பட்டது

மானியர் வில்லியம் சமச்கிருத மொழிக்குச் செய்த அகராதி போன்று பின்னர் ஆங்கில எழுத்துப் பெயர்ப்பு, ஆங்கிலப் பொருள், ஆங்கில எழுத்துப் பெயர்ப்பில் எடுத்துக்காட்டு வரிசைகள் என்று வெளியிடுவதற்கு உதவியாக இருக்கும் என்று கருதப்பட்டது.

நான்காண்டில் முடிவுறும் படியாக இரு தொகுதிகளுக்கு ஒரு பதிப்பாசிரியர் வீதம், ஒரு பதிப்பாசிரியருக்கு ஒரு செய்தி திரட்டுவோரும், ஒரு தட்டச்சரும் என்ற நிலையில் நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்தப் பணியை நெறிப்படுத்தத் தலைமை பதிப்பாசிரியராகத் திரு மு. அருணசலம், ஆகஸ்டு மாத மூன்றாவது வாரத்தில் பொறுப்பு ஏற்றார். தமிழறிஞர் பலரும், நூல் நிலையத் துறையும் தஞ்சையில் இருப்பதால் இது புதிய வளாகத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

**பணியாற்றுவோர்**

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. திரு மு. அருணசலம், எம்.ஏ.<br>தலைமைப் பதிப்பாசிரியர் | 18—8—82 முதல் |
| 2. புலவர் எஸ்.கே. இராமராசன்<br>பதிப்பாசிரியர் | 1—12—83 முதல் |
| 3. டாக்டர் பா. ரா. சுப்பிரமணியம், எம்.ஏ., பிஎச்.டி.<br>பதிப்பாசிரியர் | 5—12—83 முதல் |
| 4. திரு இ. கொ. இலட்சுமணசாமி<br>பதிப்பாசிரியர் | 6—2—84 முதல் |
| 5. திரு தி. அரங்கநாதன், எம்.ஏ.,எம்.ஃபில்.<br>செய்தி திரட்டுபவர் | 17—11—83 முதல் |
| 6. டாக்டர் சா. சுபாசு சந்திர போஸ்,<br>எம்.ஏ.,எம். ஃபில். பி. எச். டி.<br>செய்தி திரட்டுபவர் | 1—12—83 முதல் |
| 7. டாக்டர் இரா. சுகுமார், எம்.பி.பி.எஸ். ஏ.எப்.சி.ஐ.டி.<br>செய்தி திரட்டுபவர் | 18—11—83 முதல் |
| 8. திரு ம. மதியழகன்<br>செய்தி திரட்டுபவர் | 1—12—83 முதல் |

## 19. மலையின மக்கள் ஆய்வு மையம்—உதகை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. டாக்டர் பி. கே. மிசிரா, எம்.ஏ., பிஎச்.டி. இயக்குநர் | 3—12—83 முதல் |
| 2. டாக்டர் எம். சேதுராமன், எம்.எஸ்சி., பிஎச்டி, விரிவுரையாளர் | 29—11—83 முதல் |
| 3. திரு டி. எஸ். நடராஜன், எம் ஏ.,டி.எச்.இ.,எம்.பி.எச். (அமெரிக்கா) | 12—12—83 முதல் |

மலையின மக்கள் 3,18 இலட்சம் பேர் என 1971 இல் கணக்காக்கப்பட்டிருந்தது. 1981இல் இந்தத் தொகை 5.70 இலட்சமாக உயர்ந்துள்ளது. கேரளத்தைவிட இது மூன்று மடங்கு கூடுதலாகும். அங்கும் ஆந்திராவிலும் மலையின ஆய்வு மையம் இருக்கத் தமிழகத்தில் இதுவரை ஒன்று அமைக்கப்படவில்லையே என்ற ஒரு குறை இருந்தது. மலையின மக்கள் அடர்ந்த காடுகளில் நாட்டுப்புற மக்களிடமிருந்து நீங்கி வாழ்வதால் பழைய பண்பாட்டுக் கூறுகள் பலவற்றைக் காத்து வருகின்றனர். இலக்கியச் சான்றுகள்வழிப் பழைய தமிழர்—திராவிடர் பண்பாட்டுக் கூறுகளை அறிய முயல்கின்றவர்கள் மலைவாழ் மக்களின் கலாச்சாரக் கூறுகளை அறிந்து மீளுரு அளிப்பதே மானிடவியல் அறிஞர்கள் மேற்கொள்ளும் நெறிமுறை ஆகும். தொல்காப்பியத்தில் காணப்படும் கலாச்சாரக் கூறுகளை மு. இராகவையங்கார் அவர்கள் இம்முறையில் தொகுத்தார். பல கட்டுரைகளும் நூற்களும் இவ்வடிப்படையில் நம் நாட்டவராலும், பிற நாட்டவராலும், உருவாக்கப்பட்டிருக்கின்றன. அகன்ற—நுண்ணிய ஆய்வு செய்யப்படின் நம்பத்தகுந்த பல செய்திகளை நாம் சேகரிக்க இயலும். திராவிடப் பழங்குடி மக்கள் தென் மாநிலங்களில் மட்டுமன்றி, மத்தியப் பிரதேசம், ஒரிசா, மேற்கு வங்காளம், பீகார், மகாராட்டிரம், குஜராத் முதலிய மாநிலங்களில் வாழ்கின்றனர். திராவிடப் பழங்குடி மக்களின் பண்பாட்டுக் கூறுகளை ஆராயவேண்டிய பொறுப்புத் தமிழ்ப் பண்பாட்டை ஆராயும் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு மிக உண்டு.

மைய அரசின் உள்துறை இத்தகைய மலையின மையங்களுக்கு 50% நிதி உதவி செய்வதையும் பயன்படுத்தி மலையின மக்கள் பெரும்பகுதியாக வாழும் உதகையில் ஆய்வு மையம் ஒன்றைத் தோற்றுவிக்கத் திருவாளர்கள் பி. ஆர். ஜி. மாத்தூர் (இயக்குநர், கேரள மலையின மற்றும் தாழ்த்தப்பட்ட மக்கள் ஆய்வு மையம்), டி. எம். ஆறுமுகம், இ. ஆ. ப., (இயக்குநர், ஆதி திராவிட மலையின நல்வாழ்வுத் துறை), தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் அவர்களின் தலைமையில் 9-5-83இல் தஞ்சை அரண்மனையில் கூடி அறிக்கை ஒன்றைத் தயாரித்தனர்.

சேர நாட்டிற்கு ஒரு மையம், பல்லவ நாட்டுக்கு ஒரு மையம், பாண்டிய நாட்டுக்கு ஒரு மையம் என அமைத்து, தமிழ்ப் பல்கலைக் கழக ஆய்வு முயற்சியை விரிவு படுத்தும் எண்ணத்துடன் ஆளுநர் குழு இதனை ஒப்புக்கொண்டு 1983 ஆம்

ஆண்டு, காந்தி அடிகளின் பிறந்த நாளன்று உதகையில் மிஷனரி குன்றில் அமைந்த அண்டர்பெல் பங்களாவில் இந்த மையத்தைத் திறந்தது. தமிழக ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு விசயசாரதி அவர்கள் இந்த நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்கள்.

இந்த மையத்திற்கென ஏறத்தாழ 30 ஏக்கர் நிலப்பரப்பைப் பாலாடா என்ற ஊரில் வழங்குவதற்கு எல்லா நடவடிக்கைகளும் நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ஏற்றுக் கொண்டுள்ளார். ஆட்சிக் குழுவின் உட்குழு ஒன்று இதனைக் கண்காணித்து நெறிமுறைப் படுத்துகின்றது. அதன் முதற் கூட்டமும் 1983 அக்டோபர் 2 ஆம் நாள் நடந்தது.

1984, மார்ச்சு 2,3 ஆம் நாள்களில் இந்தியா முழுவதும் உள்ள மலையின மக்களின் இயக்குநர்களின் கருத்தரங்கு ஒன்றும் 1984 க்குரிய நிதி அளவீட்டை உரு வாக்கி அமைத்தற்கு உட்குழுவின் கூட்டமும் ஏற்பாடாகியிருக்கின்றது. மலையினர் ஆய்வு மையத்தின் பணியாக இதுவரை விவரிக்காத மலையினர்களின் பண்பாட்டை ஆய்வது, அவர்களுடைய உடற் கட்டமைப்பு முறை, இரத்த இயல்பு, நோய் வகை கள் முதலியவற்றை விளக்குதல் ஆகியவை உடனடியாக ஆராய மேற்கொண் டுள்ளது. நூல் நிலையமொன்றும் உருவாகியுள்ளது.

மைய அரசின் உள்துறை 1983—84 ஆம் ஆண்டு நிதி அளவின் 50 விழுக் காட்டைத் தர ஒப்புக்கொண்டு 2½ இலட்ச ரூபாய் உதவியுள்ளது.

## 20. தத்துவ மையம்—காஞ்சிபுரம்

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் வ. ஆ. தேவசேனாபதி<br>இயக்குநர் எம்.ஏ.,பிஎச்.டி. | 1—6—83 முதல் |
| 2. வித்துவான் எஸ். அருணை வடிவேலு முதலியார்<br>சைவ சித்தாந்தச் சிறப்பு ஆய்வாளர் | 1—6—83 முதல் |
| 3. டாக்டர் அரு. மருததுரை, எம்.ஏ.,பிஎச்.டி.<br>முதுமுனைவர் பட்ட ஆய்வாளர் | 28—12—83 முதல் |
| 4. திரு ஜே. அரங்கசாமி, எம்.ஏ.,எம்.ஃபில்.<br>இளநிலை ஆய்வாளர் | 30—11—83 முதல் |
| 5. டாக்டர் வே. இராமகிருட்டிணன்<br>இலங்கை ஆய்வாளர் | 4—10—83 முதல் |




காஞ்சித் தத்துவமையக் கருத்தரங்கு

( 6, 7, 8—10—1983 )

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர்

மாண்புமிகு இராம வீரப்பன் அவர்கள் தலைமை

பல மதங்கள், மத வேதாந்திகளின் அறிவுப் பீடமாக விளங்கிய காஞ்சி நகரத்தில் தத்துவ மையம் ஒன்றை அமைத்து, அதன் பழம் பெருமையைப் புதுப்பிக்கத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தீர்மானம் செய்து செயல்பட்டது.

சங்கப்புலவர், திருமூலர், வேதாந்த தேசிகர் முதலியவர்களால் கல்வியிற் சிறந்த காஞ்சி என்று போற்றப்பட்ட இந்த நகரில் அறுவகைச் சமயங்களும், சமணமும் புத்தமும் தழைத்தோங்கின. சங்கரரும், இராமானுசரும். இங்குக் கல்வி நிலையங்களை உருவாக்கிப் போற்றினர். மணிமேகலை இந்நகரைப் புகழ்கின்றது. சூனிய வாதத்தைப் போதித்த ஆரிய தேவரும் (2,3 ஆவது நூற்றாண்டு) புத்த தத்தரும் (5 ஆம் நூற்றாண்டு), போதி தருமரும் (6 ஆம் நூற்றாண்டு), தின்னாகரும் (6 ஆம் நூற்றாண்டு), வச்சிர போதியும் (7 ஆம் நூற்றாண்டு), தரும பாலரும் (7 ஆம் நூற்றாண்டு), சித்த நாகார்ச்சுனரும் (7 ஆம் நூற்றாண்டு), அநிருத்தரும் (12 ஆம் நூற்றாண்டு) காஞ்சியைச் சார்ந்தவர்கள். தர்க்கநூற் படிப்பிற்கு மிகவும் பேர்போன மையமாக இது விளங்கியது.

பழம் பாரம்பரியம் மிக்க இந்தத் திருநகரில் சென்ற 1—6—83 முதல், டாக்டர் வ. ஆ. தேவசேனாபதியை இயக்குநராகக்கொண்டு பச்சையப்பன் கல்லூரி ஆடவர் விடுதியில் இது தொடங்கப்பட்டது.

வேத இந்து மதத்திற்கும், சைவசித்தாந்தம், வைணவசித்தாந்தம் ஆகிய துறைகளுக்கும் ஒவ்வொரு பேராசிரியரை நியமித்தற்குத் தமிழ் நாட்டு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை 9-11-1982 ஆம் நாள், 15 இலட்சம் ரூபாய் அறக் கட்டளையாக அமைக்க இசைந்து, ஆணை பிறப்பித்தது. அதன்படித் தக்கவர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்று இந்த மையத்தில் நியமிக்கப்பட்டனர்.

1983 அக்டோபர் 8. 9 ஆம் நாள்களில் வேத இந்து மதம், சைவ வைணவ இந்து மதம், புத்தம், சமணம், இசுலாம், கிறித்துவம், ஏனைய மதப் பிரிவுகளைப் பற்றி ஆய்ந்திடுவதற்கு இரண்டு நாள் கருத்தரங்கு ஒன்று காஞ்சியில் நடைபெற்றது. 20 அறிஞர்கள் இதில் கலந்து கொண்டு கட்டுரைகள் படைத்தனர். அக்டோபர் 6 ஆம் நாள் காலை, அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு இராம. வீரப்பன் அவர்கள் இந்தக் கருத்தரங்கைத் தொடக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்கள். ஆய்வு மாணவர் இருவர் சேர்ந்துள்ளனர். ஒரு நல்ல நூல்நிலையமும் உருவாகியுள்ளது.

## 21. நீர் அகழாய்வு மையம் – மண்டபம் (இராமேசுவரம்)

முன்னுரை

உரோம நாட்டு வணிகர்களும், அரபுநாட்டுக் கப்பலோட்டிகளும், தமிழகப் பட்டினங்களில் வந்து சென்ற செய்தியையும் தமிழர்களின் கடற்செலவு பற்றிய செய்திகளையும் சங்க இலக்கியங்களும் பிற்காலத்தெழுந்த காப்பியங்களும் பலபடக் கூறுவது உலகறி செய்தியாகும். சில பட்டினங்கள் நாட்டின் தலைநகராக விளங்கின. சோழ நாட்டின் தலைநகர் காவிரிப்பூம்பட்டினம். அவற்றுள் பல இன்று கடலுள் மூழ்கி மறைவுற்றிருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினம் கடலுள் மூழ்கி மறைந்ததை நெஞ்சுருக்கும் சொற்களால் மணிமேகலை (கி. பி. 5 ஆம் நூற்றாண்டு) குறிக்கிறது. நகரத்தார் இன்றும் இதனை வாய்மொழிச் செய்தியாகப் போற்றுகின்றனர். கொற்கை, காயற்பட்டினம் முதலிய கடலோரத் துறைமுகங்கள் பாண்டியர் பேரரசில் வளமுற்று விளங்கின. முசிறி, தொண்டி முதலிய பட்டினங்கள் சேர நாட்டில் புகழுடன் விளங்கின. அவையனைத்தும் மணலால் மூடப்பட்டுள்ளன; கடலுள் மறைந்து கிடக்கின்றன. கடலோரத் தமிழர் வரலாறு, மிகக் குறைவாகவே தெரிய வருகிறது; அல்லது தமிழகம் தெரிய இயலாது தவிக்கிறது.

வரலாற்றின் முன்னுள்ள காலம் தொடங்கித் தமிழர் திரை கடலோடிப் பொருளீட்டிய செய்தியை இலக்கியங்களும் செவிவழிச் செய்தியும் உறுதிப்படுத்துகின்றன. இந்நிலை, பாண்டியர் ஆட்சியிலும், சோழப் பேரரசிலும் தொடர்ந்தது. மாமன்னர்கள் ஆண்ட சோழர் காலத்தில், வலிவுடைய கடற்படையொன்று பகைவர்களை வென்ற செய்தியை வரலாறு கூறும்.

முசிறி, தொண்டி, நெல்குன்று, சாலியூர், பூம்புகார், கொற்கை முதலிய பட்டினங்களைக் கிரேக்க நிலவியல் ஆசிரியர்களான பிளினியும், தாலமியும் குறித்துள்ளனர். ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, அண்டார்டிக்கா முதலிய கண்டங்களுடன் தமிழகம் நிலத் தொடர்பு கொண்டிருந்ததை நீரடி நிலவியலாய்வு, தெளிவுகள் பலவற்றை நல்கியுள்ளது. இதனை முன்னர் கோண்டவனா நிலப்பரப்பு என்றனர். அதன் பின்னர் இந்தக் கொள்கையை மாற்றி, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, தமிழகம் முதலியவற்றை இணைக்கும் லெமூரியாக் கண்டம் ஒன்று இருந்ததாக அறிஞர் உலகம் உறுதி செய்தது. (பக்கங்கள் 123,127 மூன்று கடல்களின் சிக்கல்கள்: The Riddles of Three Oceans — அலெக்சாந்தர் கொந்தரத்னோவ், புரேகிரஸ் பப்ளிசர்ஸ், மாஸ்கோ.)

இன்றைய குமரி முனைக்கு அப்பால் நீண்டு பரவிய நிலப்பரப்பு இருந்த செய்தியை இறையனார் அகப்பொருளுரை (கி. பி. 12 ஆம் நூற்றாண்டு) கூறுகிறது. கடலுள் மூழ்கிய பகுதி எழுநூறு காவதம் (அதாவது 7000 மைல் என்பர் சிலர்; 5250 மைல் என்பர் வேறு சிலர்). சிலப்பதிகாரம் (கி. பி. இரண்டாம் நூற்றாண்டு) இறையனார் களவியலுரை (கி. பி. 12 ஆம் நூற்றாண்டு) ஆகிய இரண்டும் பஃறுளி, குமரி என இரு ஆறுகளைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. ஆனால் இவை இன்றில்லை. இலங்கையிலுள்ள பழைய வரைவுகளும் கி. மு. 2837, கி. மு. 504, கி.மு. 306இல் ஏற்பட்ட கடல்கோளால் நிலம் ஆழ்ந்த செய்தியைக் காத்துவருகின்றன.

மறைந்த லெமூரியாவில் தலைச்சங்கமும், இடைச்சங்கமும் கூட்டப்பெற்றன. மூன்றாம் சங்கமாகிய கடைச்சங்கம் இன்றிருக்கும் மதுரையில் கூடிற்று ; அதுவும் தீயால் அழிந்த செய்தியைச் சிலப்பதிகாரம் குறிக்கிறது.

தமிழ் இலக்கியச் செய்திகளைக் கிரேக்க நிலவியலாசிரியர்கள் கூறும் குறிப்புகள் உறுதிப்படுத்துகின்றன. சிறப்பாகப் பெரிப்புளூஸ் நூலின் ஆசிரியரும், தாலமியும் எழுதிய குறிப்புகளில் தெளிவுப்படுத்துகின்றனர். வ ர லா ற் று வரைவுகளில் காணும் செய்தியை இப்பெயர் ஆய்வு வலியுறுத்துகிறது. திரு வி. கனகசபை எழுதிய 'தமிழர் ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னர்'(1904) என்னும் நூலில் இதன் விரிவைக் காண இயலும். கடல் ஆய்வுகள் பல பொது நிலையில் நடந்தேறியுள்ளன. சிறப்பாக ருஷிய விஞ்ஞானிகளும் (அலெக்சாந்தர் கொந்தரத்னோவ் முன் குறித்த நூலில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்) கோவாவில் உள்ள கடற்றுறை தேசிய ஆய்வு மைய ஆய்வாளர்களும் இந்தத் துறையில் பணி செய்துள்ளனர். தமிழகத்தின் முன்னுள்ள வரலாற்று நிலையை உறுதிசெய்ய வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்திய பெருங்கடல் முதலியவற்றைத் துருவிப்பார்த்தல் இன்றியமையாதது. இன்று வாய்மொழிச் செய்தி அல்லது பழங்கதையாக இருப்பவை அகழ் ஆய்வுகளால் தெளிவு பெறும் ; மாற்றவும் இயலும். பிரெஞ்சு அறிஞர் உதவியால் காவிரிப்பூம்பட்டினத்தின் பக்கத்திலும் வங்காள விரிகுடாவின் கரையோரங்களிலும் நடத்திய காந்தமானி முதலியவற்றின் உதவியால் நடந்த அளவீடுகள், பல நல்ல தெளிவுகளைத் தந்துள்ளன. ஆனால் தொடர்ந்து ஆய்வுப்பணி செய்வதற்கு வேண்டிய நிதிவளம்,அறிவியல் துறையில் செயல் நுட்பம் தெரிந்தவர்கள் இல்லாமை போன்ற பல காரணங்களால் தொடர்ந்து பணி செய்யாமல் முடங்கிவிட்டன.

## நீர் அகழாய்வின் தேவை

அறிவியல் உலகம் ஏற்கும் தெளிவுகள்வழித் தமிழர்களின் பண்டைய வரலாற்றை உறுதிசெய்வது தமிழ்ப் பல்கலைக் கழக நோக்கங்களுள் முக்கியமான ஒன்று. இந்திய வரலாற்றுச் சிக்கல்களைப் பிற நாட்டாய்வாளர் தீர்த்தற்கு உதவுவார் என்று எதிர்பார்ப்பது நன்றன்று. ஊக்கத்துடன் அவர்கள் அகழாய்வு செய்யினும், வட்டார மரபுகளும் இலக்கிய வாய்மொழித் தெளிவுகளும் அன்னியருக்குதெரிய வாய்ப்புக் குறைவு. ஆனால் தமிழர்க்கும் ஏனைய இந்தியர்களுக்கும் எளிதில் விளங்கும் அகழாய்வுப் பொருள்கள், மறு நாட்டினர்க்கு முக்கியமல்லாதனவாகத் தோன்றக் கூடும். ஆனால் இந்தியருக்கு முக்கியமானவையாய் அமையும், மற்ற அகழாய்வுப் பொருளைப் பிற நாட்டினர் எடுத்துச் செல்லும் வாய்ப்பும் இத்தகைய முயற்சியிலுண்டு. எந்த இடத்தில் முன்னர் அகழாய்வு செய்ய வேண்டும் என்று வரிசை செய்தலும் அன்னியர் முயற்சியில் இயலாது. தேசப் பெருமையைக் காத்தற்கும், முன்னேற்றத்திற்கும், இந்திய நாட்டு வரலாற்றுச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் ஒன்றிரண்டு நீர் அகழாய்வு மையங்கள் இந்தியாவில் செயல்படுவது நன்று.

ஆஸ்திரேலியா ஆப்பிரிக்காவுடன் தமிழகம் கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்பை அறிவதற்கு மறைந்த லெமூரியா பற்றிய ஆய்வு மிகவும் இன்றியமையாதது. தென்னகத்தின் வரலாற்றுக்கு முன்னுள்ள சிக்கலை தீர்ப்பதற்கு இது மிகவும் உதவும்.

அ) நீருள் காணும் நிலவியல் ஆய்வு

ஆ) மூழ்கிய துறைமுகங்கள், பட்டினங்களைப் பற்றிய ஆய்வு

இ) மூழ்கிய கப்பல்களைப் பற்றிய ஆய்வு

ஈ) கடல் வளப் பொருள்களாகிய முத்து, மீன் முதலிய வளம் தமிழகப் பொருளாதாரம் ஆகியவற்றை நுண்ணாய்வு செய்வதற்கு மையமொன்றை நிறுவுவது இன்றியமையாத தேவையாக இருக்கிறது.

### பிற நிறுவனங்களோடு கூட்டு முயற்சி

மைய-மாநிலக் கடல் வளர்ச்சித்துறை, அறிவியல் எந்திரத் துறை, கல்வித் துறை, எண்ணெய் இயற்கை எரிபொருள் குழு, தொழில் அறிவியல் ஆய்வுக் குழு, மீன் வளர்ச்சித் துறை முதலியவற்றின் ஒத்துழைப்பைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் பெற வேண்டியுள்ளது. மண்டபம், இராமேசுவரத்தில் உருவாகும் இந்த மையம், குறுகிய அளவீட்டிற்கும் ஆய்விற்கும் பெறும் நிதி உதவியைப் பொறுத்து வளர்ந்து விரிவுறும்.

### செயல்பாட்டின் வடிவமைப்பு

இந்த மையத்தின் செயல்பாடு குறைந்தது மூன்றடுக்காக அமையும் :

1. கடலோரப் பகுதியிலும் பிறவிடங்களிலும் காணும் நீரடி நிலத்தை அளவீடு செய்து துருவுதல்

2. அடி மட்டத்தை அகழ்ந்து கலைப் பொருள்களை நிலத்திற்குக் கொணர்தலும், கடலுள் மூழ்கிய நகரங்களை வரைவு செய்தலும்

3. அகழ் பொருள்களை ஆய்தல்

இறுதியில் கூறிய அகழ்பொருளாய்தல் நில அகழ் பொருளாய்வுகளினின்று நிலத்தைத் துருவியாய்வதற்கும், ஆழநீரில் தோண்டியாய்வதற்கும் அனுபவமிக்க நீர் குளிக்கும் அகழாய்வாளர் தேவைப்படுவர். அவர்கள் அகழாய்வு செய்வதற்கும் கரை யேற்றுவதற்கும் தேவையான நவீன கருவிகள் வாங்கப் பெறுதல் வேண்டும்.

எல்லாப் புதிய கருவிகளும் இணைத்த கடல் செல்லும் ஆய்வுக் கப்பல் ஒன்றும் தேவைப்படும்.

நீருள் அகழாய்வு செய்யும் முயற்சி பிறர் அருகியே மேற்கொண்ட முயற்சி உலகில் ஒன்றிரண்டு நிறுவனங்களே உள்ளன. இந்தியாவிலே இந்த மையம் முதலாவதாக இருக்கும். இது மிகைச் சொல்லன்று. மானிய நிறுவனங்களின் நிதி உதவியைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வேண்டும்போது தேச அளவில் ஏற்பட்டுள்ள ஒரு குறையைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிரப்ப முயல்கின்றது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

### கருத்தரங்கும் அதன் பரிந்துரையும்

அக்டோபர் 16, 17, 18 ஆகிய மூன்று நாள், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கட்டடத்தில் நீர் அகழாய்வு பற்றி நடந்த கருத்தரங்கில் கெ. எச். வோரா, எ. சுப்புராசு, எஸ். ஆர். ராவ் (இவர்கள் மூவரும் தேசிய கடல் ஆய்வு மையம், கோவாவிலிருந்து வந்திருந்தனர்) ; பி. எம். திரு நாரணன். எஸ். பரமேஸ்வரன், ஆர். சீனிவாசன் (ஓய்வு பெற்ற தென் வட்ட அகழாய்வு அளவீட்டின் கண்காணிப் பாளர்கள்) ; அசோக் கோஷ், திருமதி ரஞ்சனா ராய் (கல்கத்தா பல்கலைக் கழக மானிடவியல் துறை) ; பி. நாராயண பாபு, வி. சிவானந்தா (மைய அகழாய்வு அள வீட்டுத் துறை) ; தமிழ்ப் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள்—அனைவரும் இந்தத் திட்டத்தை நுணுக்கமாக விவாதித்து இதனை உடனடி செயற்படுத்துவதற்குப் பரிந் துரை செய்தனர்.

### நிதி—தேவையும் அளவீடும்

மொத்த மூலதனச் செலவாக ரூபாய் 263 இலட்சம் தேவைப்படும் என்றும், தொடக்க நிலைக்குப் பின்னர் மையம் முழுமையாக இயங்கும்போது ஆண்டுதோறும் தொடராச் செலவாக ரூபாய் 26,74,000 தேவைப்படும் என்றும் கணக்கிடப்பட்டுள் ளது. நுண் கருவிகள் பிற நாட்டிலிருந்து இறக்குமதி செய்யின் சுங்கவரி, வழங் காணை நாளில் நிலவும் விலை முதலியவற்றைப் பொறுத்து அளவீடும் மாறும்.

தொடக்கத்தில் கப்பல், மையமியங்கும் இடம் முதலியவற்றை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளலாம். ஆய்வாளர்களின் எண்ணிக்கையும் ஆரம்பத்தில் மிகக் குறைவாகவே இருக்கும். தேவையான கருவிகளே பெறப்படும். நூல் நிலையம் வளர்வதற்கு எல்லா ஏற்பாடுகளையும் முதலிலிருந்தே செய்யவேண்டும். ஐந்தாண்டு களுக்குள் இந்த மையம் நன்கு வளர்ந்துவிடும். அப்போது மையத்திற்கெனக் கப்ப லும் கட்டடங்களும் அமைந்துவிடும்.

நீருள் மூழ்குவோருக்குப் பயிற்சியளிப்பதற்கும், பிற நாட்டில் அனுபவமிக்க அகழாய்வு வல்லுநர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் இந்த அளவீட்டில் வகை செய்யப் பட்டுள்ளது. இதன் இயக்குநர் சில வாரங்கள் பிற நாட்டு மையங்களைக் காணவும் அனுப்பப்படுவார்.

மையத்தை விரிவாக்குவதற்குரிய திட்டங்களை ஏறத்தாழ மூன்றாண்டு கழித்து அனுபவத்தாலும் ஆய்வாலும் மேற்கொள்ள வேண்டும்.

தேவையான நிதி அளவீடு 263 இலட்சங்களாகும். இதற்கு மைய அரசின் உதவி வேண்டப்பட்டுள்ளது.

மண்டபத்தில் மையக் கடலாய்வு மையத்தின் அருகிலுள்ள அரசு நிலத்தில் 15 ஏக்கர் ஒதுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 22. ஆய்வாசிரியர்களுக்கு நூல் நிலையத்தைப் பயன்படுத்த மானியம்

தமிழியல் ஆய்வில் ஈடுபட்டுள்ள தமிழாசிரியர்களுக்கு இரண்டு முதல் ஆறு வார காலம் தஞ்சையில் தங்கி நூல்நிலையத்தைப் பயன்படுத்தவும், பேராசிரியர்களின் ஆலோசனை கேட்கவும், பயணப்படியும், நாட்படியும் பல்கலைக் கழகம் மானியமாகக் கொடுத்து, ஆய்வுக்கு ஊக்கம் நல்கியது. 1983 ஏப்ரல், மே மாதங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. மாவட்டத்திற்கு ஒருவராக 12 பேர்கள் இதனால் பலன் பெற்றனர்.

| | பெயர் — ஊர் | மாவட்டம் |
|---|---|---|
| 1. | திரு எஸ். அருள்மணி<br>உதவிப் பேராசிரியர், நெய்யூர் | கன்னியாகுமரி |
| 2. | திரு க. விநாயகம்<br>உதவிப் பேராசிரியர், மயிலம் | தென்னாற்காடு |
| 3. | திரு எம். வி. பச்சையப்பன்<br>உதவிப் பேராசிரியர், பொன்னேரி | செங்கல்பட்டு |
| 4. | திரு சு. முருகேசன்<br>உதவிப் பேராசிரியர், ஸ்ரீவைகுண்டம் | திருநெல்வேலி |
| 5. | திரு இரா. மணியன்<br>உதவிப் பேராசிரியர், செங்கல்பட்டு | செங்கல்பட்டு |
| 6. | திரு மு. சதாசிவம்<br>உதவிப் பேராசிரியர், ஈரோடு | பெரியார் |
| 7. | திரு பெ. சண்முகம்<br>உதவிப் பேராசிரியர், ஈரோடு | பெரியார் |
| 8. | திரு பொ. திருஞானசம்பந்தம்<br>தமிழ் ஆசிரியர், வடகரை | திருச்சி |
| 9. | திரு சு. மாரியப்பன்<br>உதவிப் பேராசிரியர், செங்கல்பட்டு | செங்கல்பட்டு |
| 10. | திரு பி. தங்கவேலு<br>உதவிப் பேராசிரியர், மன்னார்குடி | தஞ்சை |
| 11. | திரு செ. உலகநாதன்<br>உதவிப் பேராசிரியர், திருத்தணி | செங்கல்பட்டு |
| 12. | திரு மு. சண்முகம்<br>உதவிப் பேராசிரியர், சென்னை | சென்னை |

## 23. குறுகிய கால ஆய்வுத் திட்டம்

தமிழ்மொழி பேசுவோர் கணிசமான அளவில் இந்தியாவின் பிற மாநிலங்களிலும், இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய தென்னாசிய நாடுகளிலும் வாழ்வதால் அவர்கள் நிலையினை அளவீடு செய்வதற்கும், மறையாத மதப் பிணைப்பால் தோன்றியுள்ள கடவுளரின் வழிபாட்டு நிலையங்களை அளவீடு செய்வதற்கும், தமிழ் நாட்டுக்கும் கர்நாடகத்துக்கும் உறவு ஏற்படுத்திய வீர சைவ சமயத்தையும், அதைப் போன்று ஆந்திராவுடன் உறவு ஏற்படுத்திய வைணவ சமயத்தையும் அளவிடுவதற்கும் குறுகிய கால ஆய்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

### 1. தென்னாசிய அளவீடு

தென்னாசிய நாடுகளில் கடவுளர் வழிபாட்டு நிலையங்களை அளவீடு செய்தல், சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து முதலிய நாடுகளில் இந்துமதப் பரப்பு தமிழகத்திலிருந்து சென்றது என்ற கருத்தை ஆய்தற்கு முன்னாள் அறநிலையத் துறை ஆணையர் திரு யு.சுப்பிரமணியம், இ.ஆ.ப. (ஓய்வு) அவர்களை 19-7-83 முதல் 2-10-83 வரை அனுப்பிக் கள ஆய்வு செய்யத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிதி உதவி செய்தது. இந்த நாடுகளுக்குச் சென்ற திரு சுப்பிரமணியம், தமிழ்ப் பல்கலைக் கழகத்தோடு ஆய்வுத் தொடர்பு கொள்வதற்கும் விவாதம் நடத்தினார். அவருடைய ஆய்வறிக்கை விரைவில் வெளியிடுவதற்கு உருவாக்கப்படும்.

### 2, வடமாநிலத் தமிழர் - ஆய்வு

வடமாநிலங்களில் வாழும் தமிழர்களுடைய கல்வி, சமுதாய நிலையை அறிவதற்கும், மொழிக் கழகங்களின் செயல்பாட்டைத் தெரிவதற்கும் திரு சோமலெ அவர்களை 6 மாத காலத்திற்கு ரூ. 1800 மாத ஊதியமும், ரூ. 4000 பயணப்படியும் நூல் முதலியவை வாங்குவதற்கு ரூ. 800-ம் நல்கையுடன் அளவீடு செய்யப் பல்கலைக் கழகம் அனுப்பியது.

பல இடங்களுக்கும் சென்று இதுவரை அறியாத அரிய பல செய்திகளை அவர் தொகுத்துத் தமது அறிக்கையைப் படைத்துள்ளார். இதனை வெளியிடுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது.

### 3. தமிழ்நாடு, கன்னடம் ஆகியவற்றுக்கிடையே வீர சைவத் தொடர்பு

வீர சைவசமய அடிப்படை இலக்கியமாகிய கன்னட வசன இலக்கியங்கள், நாயன்மார்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களின் அருட் செயல்கள் முதலியவற்றை எடுத்துக்காட்டுவதுடன், நாயன்மார்களின் சிலைகளைச் சைவக் கோயில்களில் சற்று வேறான பெயருடன் வணங்குவதை அளவீடு செய்வதற்காகப் பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் ஆறு மாத காலத்திற்கு மாத ஊதியம் ரூ. 1800 ரூ. 3000 பயணப்படியும், நூல் வாங்க ரூ. 1000-ம் தட்டச்சுக்கு ரூ. 200-ம் அனுமதித்து அனுப்பப்பட்டார். மைசூர், பெங்களூர், தார்வார், ஹூப்ளி, முதலிய நகரங்களுக்குச் சென்று, வீர சைவ மதத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு, பல

செய்திகளைத் தொகுத்துள்ளார். விரைவில் ஆய்வறிக்கை பெறப்பட்டதும் அச்சேற்றத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நடவடிக்கை எடுக்கும்.

*4. தமிழ்நாடு - ஆந்திர வைணவ உறவு*

இராமானுசர் காலத்திலும், அதற்குச் சற்று முன்னும், வைணவர்கள் ஆந்திரப் பிரதேசத்தில் குடியேறி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தைத் தெலுங்கு லிபியில் எழுதி, கட்டுரையுடன் படித்தறிந்து வரும் செய்தியை அளவீடு செய்ய இராஜபாளையம் திரு மு. கு. ஜகந்நாத ராஜா அவர்கள் மாதத் தொகுப்பூதியம் ரூ. 1800, பயணப்படி ரூ. 3000, நூல் வாங்கிட ரூ. 1000, தட்டச்சுக்கு ரூ. 200 கொடுத்துத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆந்திரப் பிரதேசத்திற்கு அனுப்பியது. பல கோயில்கள், திருமடங்கள், வைணவக் குடும்பங்கள் முதலியவற்றோடு தொடர்பு கொண்டு உருவாக்கிய அறிக்கையை விரைவில் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

*5. சிலப்பதிகாரமும் இசைச் செல்வங்களும்*

தமிழ்ப் பல்கலைக் கழகக் குறுகிய காலத் தமிழ் ஆய்வுத் திட்டத்தின் கீழ் ''சிலப்பதிகாரமும் அதில் கூறப்பட்டுள்ள இசைச்செல்வங்களும்'' என்னும் தலைப்பில் டாக்டர் சேலம். எஸ். ஜெயலட்சுமி, பி.எச்.டி., ஆய்வு மேற்கொண்டுள்ளார். அவர் தம் ஆய்வுப் பணிக்காக ரூ. 5,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 24. தொல்காப்பியத் தகைமை

ஆங்கிலம் போல் பன்னாடுகளில் அலுவலக மொழியாக உருப்பெற்றுள்ள தமிழில், தரமான ஆய்வு வெளியாகி மதிப்புறு நிலையைப் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் தமிழுக்குப் பெருமை தேடித்தந்த தொல்காப்பியத்தின் பெயரில் உயர் தகைமை ஒன்றைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் 1—10—83 முதல் நிறுவியுள்ளது. தொல்காப்பியப் பெயரிலக்கணம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய திராவிட மொழி இலக்கணங்களுக்கு அடிப்படையாக அமைந்த செய்தி இப்போது தெளிவாகியுள்ளது. பாணினீயம் நுண்ணாய்வால் பெருமைப்பட்டது போன்று, தொல்காப்பிய ஆய்வும் பெருகினால் தமிழ் பிற திராவிடமொழி அறிஞர்கள், மற்றும் உலக அறிஞர்கள் இவ்விலக்கணத்தின் சிறப்பை ஏற்றுப் போற்றுவர் என்ற உறுதியால் இந்த உயர் தகைமையைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவியுள்ளது.

இதற்கு என 4 இலட்ச ரூபாய் அறக்கட்டளையாகப் பல்கலைக் கழகம் நிறுவியுள்ளது. இதிலிருந்து கிடைக்கும் வட்டியில் மாதந்தோறும் ரூ. 2500 ஊதியமும் துணையாளர், பயணம், நூல் வாங்குதல், எழுதுபொருள் முதலியவை வாங்குதல் ஆகிய இனங்கட்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10,000 மானியமும், தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்குகிறது. ஈராண்டுக்குத் தொடர்ந்து இந்தத் தகைமை வழங்கப்படுகின்றது. ஒருமுறை, இந்திய தமிழக அறிஞர்க்கும், அடுத்த முறை ஏனைய நாட்டுத் தமிழறிஞர்க்கும் வழங்க முடிவு செய்துள்ளது. மதிப்புறு ஆய்வாளர்களை அழைத்து இந்தத் தகைமை வழங்கப்படும்.




தொல்காப்பியத் தகைமை

டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களுக்கு வழங்கல்

( 30—9—83 )

சவகர்லால் நேரு தகைமை போன்று பணக் கொடையும், ஆய்வு செய்தற்குக் கட்டுப்பாடின்மையும் இந்தத் தகைமைக்கு உண்டு. இதன் விளைவாக உருவாகும் ஆய்வறிக்கையைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடும்.

நுணுகிய புலமையுடன், பழமையிற் புதுமை காணும் ஆய்வாளரான டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் 1-10-83 ஆம் நாள் முதல் இந்தத் தகைமையைப் பெற்றிருக்கின்றார்.

30-9-83 ஆம் நாள், இத்தகைய தகைமை ஒன்றை நிறுவ வேண்டும் என்று பல காலம் கருத்துத் தெரிவித்து வந்த முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் தகைஞரை நியமித்துப் பல்கலைக் கழகச் சின்னம் அளித்துப் பொன்னாடையும் போர்த்திப் பாராட்டியது.

## 25. மாமன்னன் இராச இராசன் பரிசு

தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு மாமன்னன் இராச இராசன் பெயரில் ஒரு இலட்சத்து ஒரு ரூபாய் பரிசாக வழங்கத் தமிழ்ப் பல்கலைக கழகத்தின் இரண்டாவது ஆண்டு விழாவின் போது ஆளுநர் குழு தீர்மானித்தது.

ஆண்டுதோறும் அளிக்கப்படும் இப்பரிசுக்குக் கவிதை, சிறுகதை, புதினம், அழகுறு உரைநடை முதலிய படைப்பிலக்கியங்கள் உரியனவாகும். ஆசிரியர் உலகின் எந்தப்பகுதியில் வாழ்ந்தாலும், அவர் நூலுக்குப் பரிசுபெறும் தகுதியுண்டு. வாழும் ஆசிரியரின் பரிசுப் போட்டிக்கு ஓராண்டுக்காலம் முன் வரை வந்த படைப்பு நூற்கள் பரிசுக்குத் தகுதியுடையன,

ஞானபீடம் இத்தகைய பரிசொன்றை நிறுவி இந்திய மொழிப் படைப்பிலக் கியத்திற்கு எழுச்சியூட்டியுள்ளது. பரிசு விதிகள் உருவாக்கி, நூற்கள் பெற்று, தேசிய குழுக்கள் தக்க நூற்களைத் தேர்ந்தெடுத்து வருகின்றன. (பிற செய்திகள் 'சிறப்புப் பட்டமளிப்பு விழா' என்ற தலைப்பில் காண்க.)

## 26. தரமான தமிழ் வெளியீடுகளுக்குப் பரிசு

அறிவியல், ஓவியம், இசை, நாட்டுப் படைப்பு, தமிழ்மொழி நூற்களின் பிற மொழியாக்கம், நல்ல செய்தியறிக்கை முதலிய பத்துப் பொருளில் வெளியாகும் நூற்களுக்கு ரூ. 5000 வீதம் பரிசு அளிக்கும் திட்டம் சென்ற ஆண்டு செயற்பட்டது போன்று இவ்வாண்டும் பரிசு வழங்கவுள்ளது. தமிழக அரசு இத்தகைய பரிசுகளை, இலக்கியப் படைப்புக்களுக்கு அளிப்பதால், அவற்றை நீக்கி ஏனைய துறைகளுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்குகிறது.

## 27. மறுநாட்டுத் தமிழர்க்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் தரும் வாய்ப்பு

1. நிலையான ஆய்விடங்களில் மூன்றில் ஒன்றிலே மறுநாட்டுத் தமிழ் ஆய்வாளர்களை நியமிக்கப் பல்கலைக் கழகம் திட்டமிட்டுள்ளது. தகுதி வாய்ந்த ஆய்வாளர்களில் மூவரை இதுவரை நிலையான ஆய்விடங்களில் நியமித்துள்ளது.

2. சிறப்பு ஆய்வாளராக இருவரை, இதுவரை நியமித்துள்ளது. மேலும் பலருடைய விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து வருகிறது.

3. இளநிலை ஆய்வாளர்களாக இருவரை நியமித்துள்ளது. இருவருக்கு ஆணை அனுப்பியுள்ளது.

4. குறுகிய கால ஆய்வுத் திட்டங்களில் மறுநாட்டுத் தமிழாய்வாளருக்கும் மானியம் வழங்கியுள்ளது. ரிசர்வ் வங்கியின் அன்னியச் செலாவணி அனுமதி கிடைத்ததும் மானியம் அனுப்ப இருக்கிறது.

5. தரமான நூற்களுக்கு ரூபாய் ஐயாயிரம் வழங்கும் பரிசுத் திட்டத்தில் மறுநாட்டுத் தமிழரும் பங்கு பெறலாம்.

6. தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு ஒரு இலட்சத்து ஒரு ரூபாய் வழங்கும் இராச இராசன் பரிசு ஓராண்டிற்கு இந்தியாவிற்குக் கிடைத்தால் அடுத்த ஆண்டிற்கு மறு நாட்டிற்கு வழங்கும் நிபந்தனையுண்டு.

7. தொல்காப்பியத் தகைமையும், ஒரு முறை இந்தியத் தமிழறிஞர்க்குக் கிடைத்தால் அடுத்த முறை பிற நாட்டறிஞருக்கு வழங்கப்படும் நிபந்தனையுண்டு.

8. மறுநாட்டுத் தமிழர் வாழும் ஈழம், சிங்கப்பூர், மலேசியா, முதலிய நாடுகளில் கள ஆய்வு செய்வதற்கு இந்தியத் தமிழர்களை அனுப்பி அளவீடு மேற்கொண்டது.

9. ஆண்டுதோறும் நான்கு வாரம் நீண்டு நிற்கும் தமிழ்ப் பண்பாட்டு வகுப்பு நடத்தி, முப்பது மாணவர்களுக்குத் தமிழகக் கலைச் செல்வத்தை அறிய வாய்ப்பளித்தது.

10. கலைக் களஞ்சியம், பேரகராதி முதலியவற்றில் நெறிப்படுத்தும் குழுவில் அயல்நாட்டு அமைச்சர் அல்லது பெயர் பெற்ற ஆய்வாளரை நியமித்தது.

11. களஞ்சியம் பேரகராதி முதலியவற்றிற்குத் தொடர்பு கொள்ளும் அறிஞராக ஒருவரை ஒவ்வொரு நாட்டிலும் நியமிக்கவிருப்பது.

12. மறுநாட்டுத் தமிழர் துறை ஒன்றைத் தோற்றுவித்து எல்லாச் சஞ்சிகைகளையும் பெறுவதோடு நெருங்கிய தொடர்புக்கும் வழி செய்துள்ளது.

## 28. பிற மாநிலத்தார் / நாட்டினர் தமிழ்ப் படிக்கவும் ஆய்வு செய்யவும் வாய்ப்பு

1. பிற மொழி பேசும் பிற மாநிலத்திலுள்ள மாணவர்கள் இளநிலை (மாதம் ரூ.600/-), முதுநிலை (மாதம் ரூ.900/-) ஆய்வாளர் தகைமைபெற்று இரண்டாண்டு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தங்கிப் படிப்பதற்கு வாய்ப்புள்ளது. இதனைப் பயன்படுத்தி, காஷ்மீர், ஒரியா. கன்னடம், தெலுங்கு, மலையாளம், இந்தி, உருது, பஞ்சாபி மாணவர்கள் தமிழ் பயின்று வருகின்றனர்.

2. மேலை நாட்டு ஆய்வாளர்களும், (மேற்கு செருமனி இரண்டு, செக்கோசுலோவோகியா ஒன்று, சீனா ஒன்று) இளநிலை, முதுநிலை தகைமை பெற்றுத் தமிழ் பயின்று வருகின்றனர்.

3. சிறப்பாய்வாளராக டாக்டர் கத்ரே (ஐக்கிய அமெரிக்கா) டாக்டர் ஹெர் மன் பர்கர் (மேற்கு செருமனி), டாக்டர் இராசேசுவரி கோஷ் (ஹாங்காங்) முதலியோர் இத் தகைமை பெற்றனர்.

4. சேலம், திருச்சி, தஞ்சை ஆகிய மாவட்டங்களில் வாணிகச் சந்தைகளைப் பற்றிய ஆய்விற்கு சப்பான் நாட்டுப் பல்கலைக் கழகமும், தமிழ்ப் பல்கலைக் கழகமும் ஒத்துழைக்கத் திட்டமுள்ளது.

5. காவிரியின் கரையோர மண்ணின் நிலை,மரஞ் செடிகொடி நிலை முதலியவற்றை ஆயும் பிரஞ்சு நாட்டு ஆய்வாளருடன் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒத்துழைக்க இசைவு தெரிவித்துள்ளது.

6. ஹாலந்திலுள்ள லைடன் பல்கலைக்கழக 'கேர்ன் மைய'த்துடன் மடங்களின் வரலாறு, டச்சுக்காரர்களின் வாணிப நிலை ஆகியவை பற்றி 1984 ஆகஸ்தில் லைடனில் கருத்தரங்கொன்று நடத்த ஏற்பாடு செய்து வருகிறது.

## 29. தமிழ் மாணவர்கள் பிறமொழி படிக்கும் திட்டம்

இந்திய ஆரிய மொழிகளில் சமச்கிருதம் செல்வாக்குற்றது போன்று திராவிட மொழிகளில் தமிழ் செல்வாக்குப் பெற்றுள்ளமை இப்போது தெளிவாகியுள்ளது. பக்தி இயக்க காலத்திய மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகள் தமிழால் பாதிக்கப்பட்டன. தமிழ் இலக்கண மரபும், பிற திராவிட இலக்கணங்களைப் பாதித்தன. தமிழர் வாழும் மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகிய நாடுகளிலுள்ள பெரும்பான்மையினரின் மொழியை அறிதலும் தமிழ் ஆய்வுக்கு நன்மை தரும். எனவே பிற மொழிகளில் தமிழின் செல்வாக்கை அளவிடுதற்கு முதுநிலை, இளநிலை தகைமைகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு தகைமைக்கும் பயணப்படி, நூல் வாங்கும் செலவு, கல்விச் செலவு, வீட்டு வாடகைப்படி முதலியவையும் வழங்கப்பட்டன. (விரிவை மொழிபெயர்ப்புத் துறையில் காண்க.)

## 30. கணிப்பு மையம்

ஊராய்வுத்திட்ட அகராதி, கணிப்பொறிவழி கலைச்சொல் வங்கி, தானியங்கி மொழிபெயர்ப்பு முதலியவற்றிலும் கணிப்பொறி மொழிபற்றிய பயிற்சியளித்தலிலும் ஈடுபட்டிருக்கும் கணிப்பு மையத்தில் கீழ்க்கண்ட கருவிகள் உள்ளன.

1. 192 கே. பைட் (நினைவுத் தெள்ளுள்ள) நினைவகம், இரண்டு காட்சித் திரைகள் (VDU)
2. இரு பிளாப்பி டிரைவுகள், இவற்றிற்கு இருபது இலட்சம் பைட் (தெள்ளுடைய) துணை நினைவாற்றலுண்டு.
3. புள்ளி அச்சேற்றும் சில பாயமைப்பு (Printer) 150 சி. பி. எஸ். உடையது.
4. பல பயன்பாடு, பல சிக்கல் செயற்படுத்தும் இணையம். (CPU)
5. சொல் உருவாக்கு இணையம். (Word Processor)
6. உள்ளீட்டு மொழிகள்-பேஸிக், போர்ட்ரான் பி. எல்-1, பாஸ்கல், கோபால்.

(இந்த மையத்தின் செயற்பாட்டைப் பற்றிய விளக்கம் மொழிபெயர்ப்புத்துறையின் கீழ்ப் பார்க்க.)



கணிப்பு மையத்தில்

தமிழக அரசு முதன்மைச் செயலாளர் திரு கு. சொக்கலிங்கம், இ. ஆ. ப.

( 20—11—83 )



மைய அரசின் தகவல் தொடர்புத் துறைத்

துணை அமைச்சர்

மாண்புமிகு விஜய் நாவல் பட்டீல் வருகை

( 26—9—82 )

# 31. பல்கலைக் கழக ஆய்வுப்பணிகள்

## I கலைப்புலம்

### 1. ஓவியத்துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| பேராசிரியர் ஆ. சீ. இராமன், எம். ஏ., டி. லிட். துறைத் தலைவர் | 22—7—82 முதல் |

#### 1. தமிழ்நாட்டு ஓவியங்களை ஆய்தலும், திரட்டுதலும், பாதுகாத்தலும்

தமிழ்நாட்டு ஓவியங்களின் பரிமாணத்தையும் உணர்ச்சியையும் இந்திய ஓவியங்களுடன் ஒப்பீடு செய்வதும், தமிழ் ஓவியச் சிறப்பைச் சுட்டுவதும் தமது பணியாக மேற்கொண்டு டாக்டர் ஆ. சீ. இராமன் உழைத்து வருகிறார். கள ஆய்வு செய்தல் வெளியீடுகளில் இருந்து செய்திகளைத் திரட்டல், அறிஞர்களுடன் விவாதித்தல் என்ற மூன்று நிலைகளில் ஆய்ந்து வருகிறர். தஞ்சாவூர் பெரியகோவில் ஓவியங்களையும், சித்தன்ன வாசல் ஓவியங்களையும் படியெடுத்துக் காக்கும் திட்டமும், பல இடங்களில் காணப்படும் தமிழ் நாட்டு ஓவியங்களைத் திரட்டும் திட்டமும், செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளன. முன் திட்டத்திற்குப் பெரும்பொருள் செலவு செய்ய வேண்டிய காரணத்தால் பிற நிறுவனங்களின் மானியத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

#### 2. ஓவியக் கருத்தரங்கு

1982ஆம் ஆண்டு நவம்பர் 5,6இல் நடந்த அகில இந்திய ஓவியக் கருத்தரங்கில் பரோடா, பம்பாய், சென்னை முதலிய நகரங்களிலிருந்து பெயர்பெற்ற ஓவியர்களும், ஓவியத் திறனாய்வாளர்களும் கலந்துகொண்டனர். சென்னை ஓவியர் திரு கிருட்டிணமூர்த்தி, தெருக்கூத்து அடிப்படையில் தாம் வரைந்த ஓவியங்களின் காட்சி ஒன்றை நடத்தினார். தஞ்சாவூர் திரு குப்புசாமிராசா, தஞ்சாவூர் ஓவிய அமைப்பைப் பல இளைஞர்களின் உதவியுடன் செய்து காண்பித்தார். அந்தக் கருத்தரங்கின் கட்டுரைகள் அச்சேற்றுவதற்கு உரிய நிலையில் சீராக்கப்பட்டுள்ளன.

## 2. நாடகத்துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் என். வி. இராமநரசன், எம்.ஏ., துறைத் தலைவர் | 7—4—82 முதல் |
| 2. டாக்டர் மு. இராமசாமி, எம். ஏ.,பிஎச்.டி. இணைப்பேராசிரியர் | 5—6—82 முதல் |
| 3· திரு ஆர். இராசு, எம். ஏ. விரிவுரையாளர் | 3—8—83 முதல் |
| 4, டாக்டர் கு. முருகேசன், எம். ஏ.பி.எச்.டி. முதுமுனைவர் பட்ட முதுநிலை ஆய்வாளர் | 20—6—82 முதல் |
| 5. டாக்டர் மா. இரவிச்சந்திரன், எம்.ஏ.,பிஎச்.டி. முதுநிலை ஆய்வாளர் | 1—11—82 முதல் |

### 1. தமிழ் நாடகம் பற்றிய ஆய்வறிக்கை

19,20ஆம் நூற்றுண்டில் தமிழ்நாடகம் என்ற தலைப்பில் சென்ற இரண்டாண்டு களாகப் பேராசிரியர் என். வி. இராமநரசன் ஆய்ந்து வருகின்றார். செய்தி திரட்டும் பணியைச் செய்து முடித்த பின்னர் இப்போது தமது அறிக்கையை உருவாக்கி வருகின்றார். தமிழ் நாடகத்தின் அடிப்படைக் கொள்கை, அதன் செயற்பாடு அவற்றில் ஏற்பட்ட தடைகள் ஆகியவற்றை இந்த ஆய்வு விளக்கும். மார்ச்சு இறுதியில் இந்தத் திட்டம் நிறைவேறும்.

### 2. தெருக்கூத்து ஆய்வு

தமிழ்நாடு தெருக்கூத்து பற்றிய விரிவான முறையில் டாக்டர், மு. இராமசாமி ஆய்வு மேற்கொண்டு வருகிறார். இவர் தெருக்கூத்து நடிகராகவும் பயிற்சி பெற்றுள்ளார். வடமோடி, தென்மோடி என்ற இரு மோடிகளையும் அவற்றிற் காணும் ஒற்றுமை, வேற்றுமைகளையும் விரிவாக ஆய்ந்து தம் அறிக்கையை விரை வில் முழுமை செய்ய முயன்று வருகிறார். செருமன் நாட்டு நாடகத் திறனாய்வாள ரான பிரெக்ட்டின் நூலையும் தமிழாக்கம் செய்துள்ளார். பதிப்புரிமை பற்றிய அனுமதி கிடைத்ததும் இந்நூல் வெளியிடப்படும்.

### 3. கேரளத்திலுள்ள முடியேற்றம்

கேரளத்திலுள்ள முடியேற்றத்துக்கும். தமிழகத் தெருக்கூத்திற்குமுள்ள வேறு பாட்டைத் திரு இராசு ஆய்ந்து வருகிறார். நாட்டு நாடக மரபுகளை ஒத்து நோக்கு வதும் இவருடைய நோக்கமாகும். ஏறத்தாழ 18 மாதங்களில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவார்.

## 4. பொய்க்கால் குதிரை ஆட்டம்

'பொய்க்கால் குதிரை ஆட்டம்' என்ற தலைப்பில் டாக்டர் கு. முருகேசன் ஆய்வு செய்து வருகின்றார். இவர் இந்த ஆட்டத்தில் பயிற்சி பெற்றபின் இராஜஸ்தான் மாநிலம் சென்று அங்குள்ள பொய்க்கால் குதிரை ஆட்டத்தையும், தமிழ்நாட்டு ஆட்டத்தையும் ஒத்து நோக்கியுள்ளார். முதுமுனைவர் பட்டத்திற்கு இவர் பதிவு செய்து, தகுதித் தேர்வு முடிந்ததும் விரிவாக இதனை ஆய்வார்,

## 5. பொம்மலாட்டம்

பொம்மலாட்டம் பற்றி முதுநிலை ஆய்வாளர் டாக்டர் ம. இரவிச்சந்திரன் ஆய்வு செய்து வருகின்றார். இதில் சேலம், தஞ்சாவூர் மாவட்டங்களில் காணும் பொம்மைகளின் தோற்ற வேறுபாடு, ஆட்ட முறைகள் முதலியவற்றை ஆய்ந்து தமது முன்னறிக்கை ஒன்றை அளித்துள்ளார்.

## 6. தெருக்கூத்து விழா

புரிசை கண்ணப்பத்தம்பிரான் குழுவினரின் 3 நாள் தெருக்கூத்து பல்கலைக் கழகத்தில் நடந்தது. ஒவ்வொரு நாளும் வந்திருந்த வல்லுனர்கள் கூத்தின் பல அம்சங்களை விரிவாகக் கலைஞர்களுடன் ஆராய்ந்தனர். 1983 செப்தம்பர் 13,14 ஆம் நாள்களில் கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மூன்று மாநிலங்களில் புகழ் பெற்றுள்ள கதகளி, யட்சகானம், தெருக்கூத்து முதலிய நாடக நடனக் கலைகள் அரங்கேற்றப்பட்டன. அவை ஒவ்வொன்றும் முடிந்ததும், அவற்றைப் பற்றிய விளக்கங்களும் சீர்தூக்கலும் நடைபெற்றன. தென் மாநிலங்களில் இராமநாத புரம் மாவட்டத்தில் வழக்காறு பெற்றிருக்கும் தேவராட்டம், ஒயில், கும்மி முதலிய ஆட்ட வகைகளைத் திராவிட மொழியியல் மாநாடு நடந்தபோது அறிஞர்கள் காண ஏற்பாடு செய்து அவர்களுக்கு ஊக்கம் தந்தது. தெருக்கூத்து முறைகளை உள்ளடக்கி 'அன்டிகோன்' என்ற ஆங்கில நாடகத்தைப் பெங்களூரில் திரு மு. இராமசாமி நடத்தினார். தில்லியில் அதனை நடத்துவதற்கு அழைக்கப்பட்டிருக்கின்றார்.

## 7. கருத்தரங்கு

20 ஆம் நூற்றாண்டு நாடகக் கலைஞர்கள்' இசை ஆசிரியர்கள், திறனாய்வாளர்கள் ஆகியவர்களின் கருத்தரங்கு ஒன்றை 1983 மார்ச்சு 24, 25, 26 ஆகிய நாள்களில் இத்துறை நடத்தியது. பெயர் பெற்ற நாடகத்துறைக் கலைஞர்கள் இதில் பங்கேற்றனர்.

## பகல் வேடம்

பகல் வேடம் என்றுக் கூறப்படும் நாட்டுக் கலை அமைப்பை, மூன்று நாள் நடத்தி ஒலிப்பதிவு செய்துள்ளது.

## 3. சிற்பத்துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் ஜோ. மை. தத்தா<br>நுண்கலைப் பட்டம்<br>துறைத் தலைவர் | 28—1—83 முதல் |
| 2. பி. வாசுதேவன்<br>கோயிற் சிற்பக் கலையில் பட்டயம்<br>உதவியாளர் | 21—4—83 முதல் |

**1. கோயில் தேர்கள் பற்றிய ஆய்வு, சிற்பக் களஞ்சியம், சிற்ப அருங்காட்சியகம்**

கோயில் தேர்களில் காணும் மரச் சிற்பங்களை ஆயும் திட்டத்தைப் பேராசிரியர் ஜோ. மை. தத்தா மேற்கொண்டுள்ளார். திருவாரூர், திருவில்லிபுத்தூர் மற்றும் சில கோயில்களில் காணப்படும் தேர்களை விரிவாக நிழற்படம் எடுத்தும், சிற்பச் செதுக்குகளை மறுதோன்றி உருவம் செய்தும் தமது திட்டதைச் செயல் படுத்தி வருகின்றார். அவருக்குத் துணையாகத் தொழில் நுட்ப உதவியாளர் ஒருவர் அமர்த்தப்பட்டிருக்கின்றார். முதலாவது நீண்ட காலத் திட்டமாகத் தமிழ்நாட்டுச் சிற்பங்களுக்கு பட விளக்கங்களுடன் களஞ்சியம் ஒன்று தயாரித்தல். இரண்டாவது மண்ணுருவச் சிற்பங்கள், வெண்கல வார்ப்புகள் இவற்றை விரிவாகவும், நுணுக்க மாகவும் வடிப்பது, தமிழ் நாட்டுச் சிற்பங்களைப்பற்றிய விளக்கவுரை ஒன்றைத் தயார் செய்வது, தென்னிந்தியச் சிற்பப்படங்கள் பற்றிய நிழற்படம் ஒன்று உருவாக்குவது, சிற்ப அருங்காட்சியகம் ஒன்றைத் தோற்றுவிப்பது, புகழ் பெற்ற சிற்பங்களின் மறு தோன்றிகளைச் செதுக்குவது ஆகிய திட்டங்களில் உழைத்து வருகிறார்.

## 4. இசைத் துறை

| பெயர்—பதவி | பதவியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் து. ஆ. தனபாண்டியன், பி. ஏ.<br>இதழியலில் பட்டயம்<br>துறைத் தலைவர் | 27—1—83 முதல் |
| 2. டாக்டர் மு. அரிகரன்<br>முதுநிலை ஆய்வாளர் | 5—4—82 முதல்<br>27—12—83 வரை |
| 3. திரு ஏ. சான் பிரிட்டோ, எம். ஏ. (இசை)<br>இளநிலை ஆய்வாளர் | 22—8—83 முதல் |
| 4. திருமதி. ஞானா குலேந்திரன், எம்.ஏ., பி.எச். டி.,<br>இலங்கை ஆய்வாளர் | 16—9—83 முதல் |



தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள்
அளித்த வீணைப்பரிசு
திருமதி கமலாதேவி சட்டோபாத்தியாயா அவர்கள்
சென்னையைச் சார்ந்த செல்வி க. சரசுவதி அவர்களுக்கு
வழங்குதல் ( 27, 28 – 8 — 82 கருத்தரங்கு )



தேவாரத் திருப்புகழ்த் திவ்வியப்பிரபந்த மாநாடு

( 12, 13—10—83 )

1. புதிய இராகங்கள் கண்டு பிடிப்பும் இசைப்பாடல்கள் உருவாக்கமும்

டாக்டர் ஆபிரகாம் பண்டிதர் வகுத்த நெறிப்படி புது ராக அமைப்புகளை ஆயும் திட்டத்தில் பேராசிரியர் து, ஆ. தனபாண்டியன் உழைத்து வருகின்றார். 72 மேளகர்த்தா ராகங்களில் ஜன்ய ராகத்தில் காணப்படாத 30 புது ராகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நட்பு, கிளை, இணை முதலிய சுரத் தொகுதிகளையும் ஒவ்வொரு இராகத்திற்கும் சூட்டப்பட்டுள்ளன. கீதங்களுக்கு இசை அமைப்பும், சுரசாதிகள் கீர்த்தனம், சாதி சொர்ணம் வர்ணம் முதலியவையும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. முன்னாள் கரந்தைப் புலவர் கல்லூரித் துணை முதல்வரான திரு ச. பாலசுந்தரனாரின் துணையுடன் இசைப் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மார்ச்சு மாதத்தில் முடிவுறும் இந்தத் திட்டத்தில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட இராகங்களின் சஞ்சார இலட்சணம் முதலியவை தெளிவாக்கப்படும்.

ஒலி அளவீட்டுக் கருவிகளினால் இராக வேறுபாடுகளைத் தெரிந்து வேறுபடுத்துவதற்கும் பேராசிரியர் தனபாண்டியன் திட்டமிட்டுள்ளார்.

2. தென்னாட்டில்—சிற்பம், ஓவியம், இசை அடிப்படையில் ஆய்வு

டாக்டர் மு. அரிகரன் சிற்பம், ஓவியம், கல்வெட்டு முதலியவற்றின் அடிப்படையில் தென்னக மாநிலங்களில் இசை வளர்ந்து பரிணமித்துள்ளமை என்ற திட்டத்தின் கீழ்த் தமது அறிக்கையை ஏறத்தாழ 300 விளக்கப் படங்களுடன் அளித்துள்ளார்.

3. தமிழ்க் கீர்த்தனங்கள்

தமிழ்க் கீர்த்தனங்களில் நுண்ணாய்வு செய்யும் திட்டத்தில் திரு சான்பிரிட்டோ உழைத்து வருகிறார். முத்துத்தாண்டவர், அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், வேதநாயகம் பிள்ளை முதலியவர்களின் இசைப் படைப்பின் நிலை, தாளம் அமைப்பு முறைளை, இசைக் கூறு, இசைத் தொழில் நுட்பங்கள் முதலியவற்றின் அடிப்படையில் இரண்டாண்டிற்குள் ஆய்ந்து தமது அறிக்கையை அளிப்பார்.

4, நாட்டியமும் நாட்டியமாடுவோரும்—ஓர் ஆய்வு

தென்னாட்டுச் சிவன் கோயில்களில், இலங்கைக் கோயில்களில் நாட்டியம், நாட்டியமாடுவோர் நிலை என்பதைப் பற்றி நுண்ணாய்வு செய்வதற்குத் திருமதி ஞானா குலேந்திரன் திட்டமொன்றை அளித்துள்ளார். இந்தக் கால வரம்பு விசயநகர ஆட்சிக்கு உட்பட்டதாகும், கோயில் சிற்பங்கள், கல்வெட்டுகள் முதலியவற்றின் அடிப்படையிலும், வெளிநாட்டு அறிஞர்களின் குறிப்புகளிலிருந்தும் இந்தத் திட்டம் தொகுக்கப்படும். தமிழ், சமச்கிருத இலக்கியச் சான்றுகளைப் பயன்படுத்தி, நாட்டியத்தின் பங்கையும், கலையின் பரிணாமத்தையும் அளவீடு செய்ய முயன்று வருகின்றார்,

1983 அக்டோபர் மாதத்தில் தேவாரம், திருப்புகழ், திவ்யப்பிரபந்தம் ஆகிய வற்றின் இசையமைப்புப் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடந்தது. பாடல்முறையும், விரிவான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டன.

**இசைக் கலைஞர்களுக்குத் தமிழக முதல்வர் அவர்களின் பரிசு**

இளைய கலைஞர்களை ஊக்குவித்தற் பொருட்டுத் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் அளித்த வீணையை, சென்ற ஆண்டு வீணைப் போட்டியில் வென்ற ஒருவருக்குப் பரிசாக அளிக்கப்பட்டது. இந்த ஆண்டு நாதசுரம், தவில் ஆகியவற்றில் வெற்றிபெற்றவருக்கு அரிய பரிசு வழங்க இந்தத்துறை ஏற்பாடு செய்தது. இந்தப் பரிசு முதலமைச்சர் பெயரால் ஆண்டு தோறும் வழங்கப்படும்.

## II. சுவடிப்புலம்

### 1. ஓலைச் சுவடித் துறை

| பெயர்—பதவி | | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. பேராசிரியர் மு. சண்முகம்பிள்ளை<br>துறைத் தலைவர் | | 21—6—82 முதல் |
| 2. திரு அடிகளாசிரியர்<br>இணைப் பேராசிரியர் (சிறப்பு) | | 20—1—82 முதல் |
| 3, டாக்டர் த. கோ. பரமசிவம், எம். ஏ., பிஎச். டி.<br>இணைப் பேராசிரியர் | | 7—11—83 முதல் |
| 4. டாக்டர் திருமதி மைக்கேல் சரோசினிபாய்<br>முதுநிலை ஆய்வாளர் | எம். ஏ., பிஎச். டி. | 15—4—82 முதல் |
| 5. திரு சி. இலட்சுமணன், எம். ஏ.<br>அச்சுப்படி திருத்துபவர் | | 12—8—83 முதல் |

1. **குறுந்தொகைப் பதிப்புப்பணி**

சங்க இலக்கிய நூலாகிய குறுந்தொகையைச் செப்பமாகப் பாட நிர்ணயம் செய்து, உரையெழுதிப் பதிப்பிக்கும் பணியில் பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை ஈடுபட்டிருக்கின்றார். சொல்லடைவு, சிறப்புப்பெயர், அகராதி முதலிய வற்றை இணைக்கவும் ஏற்பாடாகியிருக்கிறது. இதுவரை பிறர் பாராத இலண்டன் ஏடு ஒன்றும், பிற பல்கலைக் கழகங்களிலும், இடங்களிலும் காணப்படும் ஏடுகளும் பாட நிர்ணயத்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மார்ச்சு இறுதியில் இவை அச்சுக்குத் தயாராகும்.

2. **வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றிய நூல்**

வீரபாண்டிய கட்டபொம்மனைப் பற்றிக் கலியுகப் பெருங்காவியம் என்ற நூலையும் செப்பஞ் செய்துள்ளார்.

3. தொல்காப்பியச் செய்யுளியல் பதிப்புப்பணி

தொல்காப்பியச் செய்யுளியலைப் பாடம் நிறுவி விளக்கக் குறிப்புகளுடன் இளம்பூரணர் உரையைப் பதிப்பிக்கும் திட்டத்தில் திரு அடிகளாசிரியர் உழைத்து வருகின்றார். செய்யுளியலை முடித்து இப்போது தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்குரிய இளம்பூரணர் உரையைச் செப்பனிட்டு வருகின்றார்.

4. நற்றிணை—பாடத்திருத்தத்துடன் வெளியிடல்

அண்மையிற் சேர்ந்த டாக்டர் த. கோ. பரமசிவம் மற்றொரு சங்க இலக்கியமாகிய நற்றிணையைப் பாடத்திட்டத்துடன் வெளியிட முயன்று வருகின்றார்.

5. தொல்காப்பியம்—நச்சினார்க்கினியருரை செப்பஞ்செய்தல்

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்திற்கு, நச்சினார்க்கினியர் எழுதிய உரையைச் செப்பமாகப் பதிப்பிக்கும் பணியில் திருமதி மைக்கேல் சரோசினிபாய் உழைத்து வருகின்றார். டாக்டர் கத்ரே எழுதிய 'பதிப்புப் பணிக்கு ஒரு முன்னுரையை'த் தமிழாக்கம் செய்திருக்கின்றார்.

6. சுவடி நூலகம்

| பெயர் —பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| புலவர் ப. வெ. நாகராசன், பி. லிட்.<br>தொழில் நுட்ப உதவியாளர் | 10 - 5 - 82 முதல் |

ஓலைச் சுவடித் துறையுடன் இணைந்த சுவடி நூலகம் ஒன்றும் உருவாக்கப் பட்டிருக்கின்றது. அறிஞர்கள் நன்கொடையாகத் தந்த 980 சுவடிகளும் சுமார் 200 அரிய நூல்களும் கையெழுத்துப் படிகளும் இந்நூலகத்தில் காக்கப் பெறுகின்றன. 801 சுவடிகள் தமிழிலும், 105 கிரந்தத்திலும், 12 தெலுங்கிலும் 9 மலையாளத்திலும் ஒன்று கன்னடத்திலும் காணப்படுகின்றன. 18 பிரிவாக ஓலைச்சுவடிகளைப் பிரித்து அவற்றிற்கு எண்ணெய் தடவி, கறையான் கொல்லி மருந்து தெளித்துக் காப்பாற்றி வைக்கப்பட்டுள்ளன. நுண்படக் கருவி மூலம் பல ஏடுகளுக்கு நுண்படம் எடுக்கப் பெற்றுக் காப்பாற்றப்படுகின்றது. இதனைக் கண்காணித்து வரும் தொழில் நுட்ப உதவியாளர் திரு ப. வெ. நாகராசன் தண்டபாணி சுவாமிகள் செய்த அறுவகை இலக்கணத்திற்கு விரிவுரை ஒன்றையும் எழுதி வருகின்றார். ஓலைச் சுவடிகளின் விவரப்பட்டியல் ஒன்றும் உருவாக்கி வருகின்றார்.

7. ஓலைச்சுவடிப் பயிற்சிப் பண்ணை

பேரூர், தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமிழ்க் கல்லூரி, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக உதவியுடனும், கோவை சக்தி அறக்கட்டளை உதவியுடனும், ஓலைச் சுவடிப் பயிற்சிப் பண்ணை ஒன்றை 23 - 3 - 84 முதல் 30 - 3 - 84 முடிய சிறப்பாக நடத்தியது. அதற்குத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ரூ. 2, 300 /- கொடுத்து உதவியது. பல ஆய்வாளர்கள் சுவடி படிப்பதில் பயிற்சி பெற்றனர். திரு நாகராசன் இப்பண்ணையின் பயிற்றுநருள் ஒருவராகக் கலந்துகொண்டு பணியாற்றினார்.

## 2. அரிய கையெழுத்துச் சுவடித்துறை

| பெயர் — பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் கே. எம். வேங்கடராமையா, எம். ஏ., துறைத்தலைவர் — புலத் தலைவர் | 24 - 1 - 82 முதல் |
| 2. டாக்டர் தெ. ஞானசுந்தரம், எம். ஏ., பிஎச். டி., இணைப் பேராசிரியர் | 24 - 6 - 82 முதல் |
| 3. டாக்டர் ம. சா. அறிவுடைநம்பி, எம். ஏ., பிஎச். டி., முதுமுனைவர் பட்ட ஆய்வாளர்/முதுநிலை ஆய்வாளர் | 12 – 4 – 82 முதல் |
| 4. டாக்டர் செகதீசன், எம். ஏ., பிஎச். டி., முதுநிலை ஆய்வாளர் | 19 - 4 – 82 முதல் |

### 1. மோடி ஆவணங்களில் இருந்து மராத்திய மன்னர் காலத்துத் தஞ்சை மக்கள் வாழ்வுநிலை—நூலாக்கம்

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் அண்மைக் கட்டிடத்திலுள்ள சரசுவதிமகால் நூல் நிலையத்தில் ஏறத்தாழ 800 துணிமூட்டைகளில் பழந்தாளில் எழுதப்பட்ட மோடி (மராத்திய எழுத்துவகை) ஆவணங்கள் பாதுகாக்கப்படுகின்றன. மராத்திய மன்னர்கள் ஆட்சிப் பொறுப்பைக் கிழக்கிந்தியக் கம்பெனியார்களிடம் ஒப்படைத்ததும் பல மோடி ஆவணங்கள் சென்னைக்குக் கொண்டு செல்லப்பட்டன. சில மராத்திய மன்னர் கையில் தங்கின. சில மாவட்டத் தலைவர் அலுவலகத்தில் இடம் பெற்றன. மன்னர் கையிலுள்ளவற்றைச் சரசுவதி மகால் நூல் நிலையத்திற்குக் கொடுத்தனர். அவை இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் மேசர் எஸ். என். கத்ரேயால் ஆங்கில ஆக்கம் செய்யப்பட்டன. அவற்றின் தமிழாக்கம் 10 தொகுதிகளாக நூல் நிலையத்தில் உள்ளன. அவற்றின் படியைப் பெற்றதோடு மொழிபெயர்க்கப்படாத மோடி ஆவணங்கள் 500, ஒரு மராத்தி மொழி பெயர்ப்பாளரால் மொழிபெயர்க்கப்பட்டன. கிடைத்த செய்திகளைத் தலைப்பு வாரியாக வகை செய்து இருபது கட்டுரைகளாக ஒழுங்குபடுத்தி, பேராசிரியர் கே. எம். வேங்கட ராமையா அச்சுக்குச் செம்மை செய்துள்ளார். சட்டம், சமுதாய வாழ்வு, பொருளாதாரம், கல்வி நிலை, மருத்துவம், கோயில் வழிபாடு, சத்திரம் அமைத்தல், அடிமை நிலை முதலிய இதுவரை வெளி வராத செய்திகளை இந்த நூலில் தொகுத்துள்ளார். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த தஞ்சை மக்களின் வாழ்வு நிலையை அறிய இவை பெரிதும் உதவும். மார்ச்சுமாதம் இறுதிக்குள் இந்த நூல் அச்சேற்றி முடிக்க முயற்சி நடக்கிறது.

### 2. பெரிய திருமொழி—மணிப்பிரவாள உரை—தமிழாக்கம்

பத்துப் பத்தாக அமைந்த பெரிய திருமொழியின், திருமங்கை ஆழ்வார் அருளிய ஆயிரம் பாக்களுக்குப் பெரியவாச்சான் பிள்ளை செய்த மணிப்பிரவாள உரையாக்கத்தில் இருநூறு பாக்களுக்கு டாக்டர் தெ. ஞானசுந்தரம் தமிழாக்கம் செய்து முடித்துள்ளார். ஒவ்வொரு சமச்கிருதச் சொல்லுக்கும் நேரிய தமிழ்ச் சொல்லும், பாட பேதக் குறிப்பும் பாட்டு முதற்குறிப்பு, அரும்பத அகரவரிசை, சமச்கிருத சுலோகங்களின் தமிழாக்கம் முதலியன உட்கொண்ட அறிக்கை ஒன்றை உருவாக்கி அச்சேற்றி வருகிறார். மார்ச்சு இறுதியில் இது வெளியாகும்.

3. மராத்தியர்—நுண்கலைக்கு அளித்த தொண்டு பற்றி ஆய்வு

மராத்திய மன்னர்கள் காலத்தில் எழுந்த தமிழ், தெலுங்கு, மராத்தி, சமச்கிருத நூற்களைத் தொகுத்து, அவற்றினுடைய திறத்தை முதுநிலை ஆய்வாளராக இருந்த போது திரு அறிவுடைநம்பி ஆய்ந்த பின்னர் முதுமுனைவர் பட்டத்திற்கு மராத்தியர்கள் நுண்கலைக்கு அளித்த தொண்டு என்ற தலைப்பில் ஆய முனைந்துள்ளார்.

4. தெலுங்கு ஆவண மொழி பெயர்ப்பு

தெலுங்கு ஆவணங்களை மொழிபெயர்க்க வந்த டாக்டர் ஏ. செகதீசன் இப்போது நாகார்ச்சுனா பல்கலைக் கழகத்தில் 26 - 8 - 82 முதல் தெலுங்கு பயிலச் சென்றுள்ளார்.

## 3. கல்வெட்டுத்துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. டாக்டர் சி. ஆர். சீனிவாசன்<br>இணைப் பேராசிரியர்—தலைவர் | 22—3—83 முதல் 13—12—83 முடிய |
| 2. பேராசிரியர் ஏ. சுப்பராயலு, எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி.,<br>பேராசிரியர்—தலைவர் | 27—7—83 முதல் |
| 3. புலவர் எஸ். இராசு, எம்.ஏ.,<br>விரிவுரையாளர்<br>இணைப் பேராசிரியர் | <br>1—2—82 முதல் 16—10—83 முடிய<br>17—10—83 முதல் |

1. கொங்குநாட்டுப் பாண்டியர் கல்வெட்டுக்கள்

கொங்குநாட்டில் உள்ள பாண்டியர் கல்வெட்டைத் தொகுத்து அளிக்கும் பணியில் டாக்டர் சி. ஆர். சீனிவாசன் ஈடுபட்டிருந்தார். இந்த வேலை முற்றுப் பெறுவதன்முன் அவர் தமது தாய்த் துறைக்குத் திரும்பிவிட்டார்.

2. வல்லம் அருகே பழைய கோட்டை இடங்கள்—அகழாய்வு

டாக்டர் சுப்பராயலு அகழாய்வுத் துறையில் கவனம் செலுத்தி வல்லம் அருகே பழைய கோட்டை இடங்களை அகழாய்வு செய்யும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

3. மராத்திய மன்னர் காலத்துச் செப்பேடுகள் ஆய்வு—நூலாக்கம்

தஞ்சை மராத்திய மன்னருடைய செப்பேடுகளைக் கண்டுபிடிப்பதிலும் ஆய்ந்து வெளியிடுவதிலும் புலவர் இராசு முனைந்து உழைத்து வருகின்றார். 'தஞ்சை மராத்தியர் செப்பேடுகள் 50' என்ற நூலைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முதல் வெளியீடாக அதன் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவின்போது வெளியிடப்பட்டது. அது கையெழுத்துருவில் இருந்தபோது வல்லுநர் குழு ஒன்று சீர்தூக்கியது, அவரது ஆய்வுப் பணியை வல்லுநர் குழு சீர்தூக்கி அவரை இணைப் பேராசிரியராக நியமிக்கப் பரிந்துரை செய்தது.

### 4. கல்வெட்டுக்களைப் பாதுகாத்தல்

காலந்தோறும் கல்வெட்டுக்களிற்காணும் எழுத்து மாற்றம் பற்றிய நிழற்படங்களையும், புதிதாகக் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களும் மறுதோன்றிப் பதிப்புக்களும் இந்தத் துறையில் காப்பாற்றப்பட்டுள்ளன. அகழாய்வுக்குரிய கருவிகளும் இந்தத்துறையில் வாங்கப் பெற்றுள்ளன. வடகால் இராவுத்தமிண்டநாயனார் அளித்த செப்பேடும் இத்துறையில் காப்பாற்றப்படுகின்றது.

## III. வளர்தமிழ்ப்புலம்

### 1. மறுநாட்டுத் தமிழ்த் துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் டாக்டர் கு. நம்பிஆரூரன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., துறைத் தலைவர் | 1—4—82 முதல் |
| 2. டாக்டர் சு. இராசாராம், எம். ஏ.,பிஎச்., டி. இணைப் பேராசிரியர் | 13—8—83 முதல் |

1. அயல்நாடுகளில் வாழும் தமிழ்ச் சிறுபான்மையினர் பற்றிய ஆய்வு

இலங்கை, மலாசியா, சிங்கப்பூர், பர்மா, தென்னாப்பிரிக்கா, மொரீசியசு முதலிய 12 நாடுகளில் வாழும் தமிழ்ச் சிறுபான்மையினருடைய அரசியல், சமூகப் பண்பாட்டுச் சிக்கல்களை விரிவாக ஆயும் பொருட்டுத் தோற்றுவிக்கப்பட்ட இந்தத் துறையில், தென்னாப்பிரிக்கா பற்றி டாக்டர் நம்பி ஆரூரன் சிறப்பாய்வு செய்கின்றார். அந்நாட்டுக்குச் சென்று, கள ஆய்வு செய்வதற்கும், செய்தி சேகரித்தற்கும் நுழைவு அனுமதி மைய அரசிடமிருந்து கிடைக்காததால், 1983, நவம்பர் மாதத்தில் ஆறு வாரங்கள் இண்டன் சென்று நூல் நிலையச் செய்திகளைத் திரட்டவும் தென்னாட்டிலிருந்து நாடு பெயர்ந்தோர் பற்றிக் கள ஆய்வு செய்யவும் அனுப்பப்பட்டார். அவர் தொகுத்துள்ள செய்திகளை இப்போது விரிவாக்கி வருகின்றார்.

2. பிறமொழியாளருக்குத் தமிழ் கற்பித்தல்

பிற மாநிலத்தவருக்குக் குறைந்த காலஅளவில் ஒளி, ஒலி உத்திகள் மூலம் தமிழ் கற்பிப்பதற்குப் பாட நூற்களும், துணை உத்திகளும் தயாரிக்கும் பணியில் டாக்டர் சு. இராசாராம் செயற்பட்டு வருகின்றார். இதில் மேனாட்டு இளநிலை ஆய்வாளர்களும் பிற இந்திய மாநில ஆய்வாளர்களும் குறுகிய காலத்தில் இத்துறை நடத்தும் வகுப்பில் தமிழ்ப் படிக்கச் சேர்ந்துள்ளனர். இந்தப் பயிற்சி 3 நிலையாகப் பிரிவு செய்யப்பட்டு இளநிலைக்கு 3 மாதமும், நடுநிலைக்கு 3 மாதமும், முதுநிலைக்கு 3 மாதமும் எனத் தேர்வு நடத்திச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது. தேர்வுக்குழு ஒன்று மாணாக்கர்களின் தரத்தை ஆய்ந்து அவர்களுடைய தகுதியை நிர்ணயம் செய்து பரிந்துரை செய்கின்றது. இதில் தற்போது



மறுநாட்டுத் தமிழர்களுக்குப் பண்பாட்டு வகுப்பு
தவத்திரு குன்றக்குடி அடிகளார் நிறைவு உரை
( 14—1—84 )

மலையாளம், கன்னடம், உருது, காசுமீரம் ஆகிய நான்கு மொழி பேசுவோரும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் தங்கும் சிறப்பு ஆய்வாளர் எர்மென் பெர்கர், இள நிலை ஆய்வாளர்களான (இந்தியக் கலாச்சார மையத்தின் மானிய ஆய்வாளர்) திரு மால்டன் திரு ஃபோர்மெனக் (செக்கோசுலோவாக்கியாவிலிருந்து தமிழ் படிக்க வந்தவர்), திரு வாங் பெள சூ (சீனத்திலுள்ள பீகிங்கிலிருந்து தமிழ் படிக்க வந்தவர்), முதுநிலை ஆய்வாளர், ஆகியோர் இந்த வகுப்பில் படிக்கின்றனர். பிற மாநிலத்திலிருந்து வந்த மொழி பயில் ஆய்வாளர்களைப் பயன்படுத்தி இந்திய மொழிகளில் ஆசிரிய அகராதிகள் தோற்றுவிக்கும் திட்டத்தை ஆங்கிலம்—தமிழ், காசுமீரி—தமிழ், உருது—தமிழ், கன்னடம்-தமிழ், மலையாளம்-தமிழ் ஆகிய தலைப்புக்களில் அகராதி தொகுத்தலை இந்தத் துறை செயல்படுத்தி வருகின்றது.

3. மொழிப்பயிற்சிக்கூடம், ஒளி ஒலிக் கூடம்

குறுகிய காலத்தில் தமிழில் பயிற்சி பெறுவதற்காக மொழிப்பயிற்சிக் கூடம் காட்சி நாடாவில் காட்சிப் பதிவுக் கருவி, வில்லை விளக்கி, நகல் விளக்கி, 16 எம். எம். நிழற்பட விளக்கி முதலியவையும் அடங்கிய ஒளி ஒலிக் கூடமும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

4. மறுநாட்டுத் தமிழர்களுக்குப் பண்பாட்டு வகுப்பு

மறுநாட்டில் குடியேறிய தமிழர்கள், தமிழ்நாட்டுப் பண்பாட்டுக் கூறுகளையும், மொழி, சமுதாயம், இசை, நடனம் முதலியவற்றின் செய்திகளைத் தெரிதற்கும் 4 வார வகுப்பு ஒன்றை இத்துறை சென்ற திசம்பர் மாதத்தில் (1983) ஏற்பாடு செய்திருந்தது. இதில் மேற்கு செருமனி, சிங்கப்பூர், மலேசியா, மொரிசியசு, தென்னாப்பிரிக்கா, தாய்லாந்து, பிசி, சீனா ஆகிய நாடுகளில் இருந்து 32 மாணாக்கர்கள் பயில வந்திருந்தனர். சென்ற ஆண்டு 27 மாணவர்கள் இலண்டன், தென் ஆப்பிரிக்கா, இலங்கை, மலேசியா, மொரீசியசு, பிசி ஆகிய நாடுகளிலிருந்து வந்திருந்தனர். இவ்வாண்டுப் பாடத்திட்டங்களில் சில மாற்றங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. பண்பாட்டு வகுப்பு நடந்த நாளில் முற்பகல் அறிஞர்களுடைய உதவியால் பொதுச் செய்தி வகுப்புகளும், பிற்பகல் மொழி, சமுதாயம், இசை முதலிய துறைகளில் சிறப்புச் செய்திகளும் விளக்கப்பட்டன. முற்பகல் வகுப்பு எல்லோருக்கும் பொதுவாக அமைந்தது. பிற்பகல் வகுப்பு நுணுகிய அறிவு உடையவர்களுக்கு உதவியாக இருந்தது. ஒருவாரம் நீண்டு நின்ற சுற்றுலாவும் இதில் உட்பட்டிருந்தது. தேர்வு நடத்தித் தகுதியை அறிந்து ஒவ்வொருவருக்கும் சான்றிதழ் அளிக்கப்பட்டது. தங்கும்வசதி, உணவுவசதி முதலியவை மன நிறைவளிப்பதாக இல்லாதிருந்தும் மாணவர்களின் ஒத்துழைப்பால் வகுப்புகள் பயனுள்ளனவாக அமைந்தன.

## 2. மொழி பெயர்ப்புத் துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியம், பி.ஏ., பி.எல். துறைத் தலைவர்/புலத் தலைவர் | 6—5—82 முதல் |
| 2. திரு கா. செ. செல்லமுத்து, பி.ஈ., (ஆனர்சு) இணைப் பேராசிரியர்—கணிப்பு மையம் | 7—6—82 முதல் |
| 3. திரு. கே. முருகேசன், பி.எஸ்சி., எம்.ஏ., (உருசியன்) இணைப் பேராசிரியர் மேனாட்டு மொழிபெயர்ப்பு | 1—9—83 முதல் |
| 4. புலவர் வேங்கடாசலம், எம்.ஏ., பி.எல்., சிறப்பு ஆய்வாளர் | 25—11—83 முதல் |

### 1. சட்ட அகராதித் தொகுப்பு

சட்ட அகராதித் தொகுப்பதும் சட்ட மாணவர்களுக்கு நூல் எழுதுவதும். தமது ஆய்வுப் பணியாகப் பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியம் மேற்கொண்டு சட்ட அகராதி பெரும் பகுதியும் முடியும் தருவாயில் இருக்கின்றது. இதற்குத் துணையாகப் புலவர் வேங்கடாசலம் உழைத்து வருகின்றார். இவ்வாண்டு ஏப்ரல் மாதத்திற்குள் இந்த அகராதிப் பணி முடிந்துவிடும். தீங்கியல் சட்டம் பற்றிய தமிழ் நூல் ஒன்று அச்சுக்குத் தயாராக உள்ளது.

### 2. கணிப்பொறி வழி மொழிபெயர்ப்பு

கணிப்பொறி வழி, மொழிபெயர்ப்புப் பணியைத் திரு கா. செ. செல்லமுத்து மேற்கொண்டிருக்கிறார். மருத்துவம், பொறியியல் முதலிய அறிவியல் துறைகளில் பிற மேனாட்டு மொழிகளில் வெளிவரும் சஞ்சிகைகள், கட்டுரைகள் நூற்கள் ஆகியவற்றை உடனுக்குடன் மொழிபெயர்த்து வழங்காவிட்டால் தமிழ் மொழியில் உருவாக்கப்பட்ட அறிவியல் நூற்கள் பழமைப்பட்டுவிடும். தொடர்ந்து மொழிபெயர்ப்புப் பணியை மேற்கொண்டால் அன்றி, ஆய்வுச் செய்திகளை அறிவியல் ஆசிரியர்களுக்ும், மாணவர்களுக்கும் உடனுக்குடன் தெரிவிப்பது இயலாது. அறிஞர்களால் மொழிபெயர்ப்பைச் செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும், நாளும் மிகுந்து வரும் ஆய்வுச் செய்திகளை மனித மொழிபெயர்ப்பால் தமிழ் மொழிக்கு வழங்குவதிற் கால தாமதம் ஏற்பட்டுள்ளது. எந்திர மொழிபெயர்ப்பை மேற்கொண்டால் இந்தக் குறையை அகற்ற முடியும் என்ற எண்ணத்தில் திரு கா. செ. செல்லமுத்து கூட்டுநராக, திரு கே. முருகேசன் (மேல்நாட்டு மொழிகளின் பெயர்ப்பு ஆய்வாளர்), டாக்டர் கே. அரங்கன் (மொழியியல் துறை) ஆகியவர்கள் உருசிய மொழியில் இருந்து தமிழிலும், தமிழில் இருந்து உருசிய மொழிக்கும் கணிப்பொறி வழி ஆக்க முயன்று வருகின்றனர். இதில் முழு வெற்றி கிடைப்பதற்குச் சற்றுக் காலதாமதம்

ஆயினும் இந்தத் துறையில் இதுவரை கண்ட முன்னேற்றத்தை ஆய்வுக் குறிப்பாகப் பத்து வெளியீடுகளைத் தேர்ந்தெடுத்த அறிஞர்களுக்கு அனுப்பி அவர்கள் கருத்தைக் கேட்டுள்ளனர். இந்த ஆய்வில் வெற்றி பெற்றால் தமிழுக்கும், பிறமொழிகளுக்கும் இதனால் கிடைக்கும் பயன் அளவற்றதாகும்.

### 2. அ. கணிப்பொறி வழி ஆய்வு

ஊர் ஆய்வுத் திட்டத்தின் கீழ்க் கிடைத்த தெய்வச் செய்திகள், சாதி, வருவாய் முதலிய செய்திகளை கணிப்பொறியின் உதவியில் தொகுத்தளித்துள்ளார். அதைப் போன்று செய்தித்தாளில் வரும் சொற்களின் தொகையும் அவற்றிற் காணும் எழுத்துக் களின் விவரமும் வருகைப் பெருக்கமும் இந்த மையத்தால் ஆயப்படுகின்றன.

### ஆ. கணிப் பொறியில் பயிற்சி

சென்ற மார்ச்சு மாதத்தில் ' கணிப்பொறி ஒருங்கும் பேஸிக் மொழியும்' என்ற தலைப்பில் மூன்று வாரம் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்தப்பட்டது. அதைப்போன்று இவ்வாண்டு பிப்ரவரி மாதத்தில் மற்றொரு பயிற்சி வகுப்பும் நடக்கிறது. இதிலும் 25 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இதற்கெனத் தமிழில் 'கணிப்பொறிப் பயன் பாட்டு முன்னுரை' என்ற தலைப்பில் ஒரு நூலைத் திரு கா. செ. செல்லமுத்து உரு வாக்கி இருக்கிறார். இந்தக் கணிப்பொறி மையத்தில் துணையாட்களாக திரு. மகா லிங்கம், செல்வி கோ. மணிமொழி, திருமதி சரோஜினி ஆகியோர் பணியாற்று கின்றனர்.

### இ. உருசிய மொழியிலிருந்து தமிழாக்கம்

மேனாட்டு மொழிபெயர்ப்பு குறிப்பாக உருசியனில் இருந்து தமிழாக்கப் பணியை திரு கே. முருகேசன் மேற்கொண்டுள்ளார், தமிழ்ப் பண்பாடு பற்றிய அறி முகம் ஒன்றை உருவாக்குதலும், உருசிய மொழியின் இலக்கிய வரலாற்றை தமி ழாக்குவதும் தமது ஆய்வுப்பணியாக மேற்கொண்டுள்ளார். தமிழ்நாட்டு வரலாற் றோடு தொடர்புடைய டச்சு, பிரெஞ்சு, போர்ச்சுக்கீசு ஆகிய மொழிகளையும் உலக அரங்கில் பயன்படுத்தப்படும் மொழிகளான உருசியம், சீனம், செருமன் முதலிய மொழிகளையும், தமிழ் மக்கள் வாழும் மலாய், சிங்கப்பூர், இலங்கை முதலிய நாடு களின் பெரும்பான்மையினர் மொழியையும் படிப்பதற்கு ஒரு நிலையம் உருவாவதற் கும் திட்டம் வகுக்கப்படுகின்றது. கணிப்பொறி பயன்படுத்திய மொழிபெயர்ப்பிலும் திரு முருகேசன் உழைத்து வருகின்றார்.

### 3. மொழியாக்கப் பயிற்சி வகுப்பு

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்து உருசியன் மொழிபெயர்ப்புப் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்துதற்கும் திரு முருகேசன் திட்டமிட்டுள்ளார். கணிப்பு மொழிபெயர்ப்பு பற்றிய நூலும் இவ்வாண்டு இறுதிக்குள் வெளியிடப்பட உள்ளது.

4. கருத்தரங்கு

சென்ற சூலை மாதத்தில் ''நீதிமன்றத்தில் தமிழ்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு 8—7—83, 9—7—83 ஆகிய நாட்களில் உயர்நீதிமன்ற நீதிபதி திரு மோகன் அவர்களின் தலைமையில் ஏறத்தாழ 40 வழக்கறிஞர்கள், நீதிபதிகள் பங்கேற்கக் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இதில் படைக்கப்பட்ட ஆய்வுரைகளும் மேற்கொண்ட பரிந்துரைகளும் வெளியிடுவதற்குத் தயாராக உருவாக்கப்பட்டுள்ளன.

5. ஆய்வுப்பணி : பிறமொழிப்படிப்பு

மொழிபெயர்த்தற்கும், பண்பாட்டு ஆய்வு நடத்தற்கும் பக்கத்து மாநிலத்தில் உள்ள மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய மொழிகளைப் படித்தற்கும் குசராத்தி, மராட்டி, ஒரியா, வங்காளம், உருது, இந்தி, பஞ்சாபி, காசுமீரி முதலிய இந்தோ ஆரிய மொழிகளைப் படித்தற்கும் பழைய மத இலக்கிய மொழிகளான பாலி, பிராகிருதம் முதலிய மொழிகளை ஆய்தற்கும் பிறநாட்டு மொழிகளான சிங்களம், மலாய் முதலிய மொழிகளைப் படித்தற்கும், முதுநிலை, இளநிலை ஆய்வாளர்களில் கீழ்க்கண்ட ஆய்வாளர்கள் இம்மொழி பேசும் பல்கலைக் கழகங்களில் பணியாற்றி வருகின்றனர்.

| | | | |
|---|---|---|---|
| 1. | டாக்டர் வே. சா. அருள்ராசு, முதுநிலை ஆய்வாளர் | மலையாளம் | கோழிக்கோடு பல்கலைக் கழகம், கேரளம் |
| 2. | டாக்டர் சி. சிவசண்முகம், முதுநிலை ஆய்வாளர் | கன்னடம் | பெங்களூர் பல்கலைக் கழகம், பெங்களூர் |
| 3. | டாக்டர் ஏ. செகதீசன், முதுநிலை ஆய்வாளர் | தெலுங்கு | நாகார்ச்சுனா பல்கலைக் கழகம், நாகார்சுனா நகர், ஆந்திரா |
| 4. | திரு ந. முருகேசபாண்டியன் இளநிலை ஆய்வாளர் | மலாய் | சென்னை, பின்னர் மலேயா செல்வார் |
| 5. | திரு ஆர். விவேகாநந்தகோபால் | மராத்தி | டெக்கான் கல்லூரி, பூனா |
| 6. | திரு தா. நீலகண்ட பிள்ளை | சிங்களம் | இலங்கைத் தூதுவரகம், சென்னை, பின்னர் இலங்கை செல்வார் |
| 7. | திரு ஏ. நடராசன் | பஞ்சாபி | பஞ்சாப் பல்கலைக் கழகம், பாடியாலா |
| 8. | செல்வி. எசு. சாய் | குசராத்தி | குசராத் பல்கலைக் கழகம், அகமதாபாத் |



நீதிமன்றத்தில் தமிழ் — கருத்தரங்கு

( 9–7—83 )

உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு எஸ். மோகன் அவர்கள் தலைமையுரை

| | | | |
|---|---|---|---|
| 9. | திரு கார்த்திகேயன் | பிராகிருதம் | குசராத் பல்கலைக் கழகம், அகமதாபாத் |
| 10. | திரு பி. நடராசன் | வங்காளம் | சாந்திநிகேதன், மேற்கு வங்காளம் |
| 11. | திரு என். செயப்பிரகாசு | பாலி | சென்னை, பின்னர் புத்தகயா செல்வார் |

இரண்டாண்டுக் காலம் படித்து முடித்த பின்னர், தமிழ்ப் பல்கலைக் கழகம் திரும்பி, அவர்கள் படித்த மொழியில் வகுப்பு நடத்தவும் மொழி பெயர்க்கவும் இவர்கள் முற்படுவர். பிற மொழியாளர் தமிழ் படிப்பது பற்றிய விவரம் பிறநாட்டுத் தமிழர் துறையில் காண்க.

### 3. தொகுப்பியல் துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் சுந்தரசண்முகனார், துறைத் தலைவர் | 22—2—83 முதல் 2—6—83 வரை |
| 2. டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ., பிஎச் டி. துறைத்தலைவர் | 1—10—83 முதல் |
| 3. டாக்டர் து. மூர்த்தி, எம். ஏ., பி. எச்.டி. விரிவுரையாளர் | 17—2—82 முதல் |
| 4. டாக்டர் பி. மாதையன், எம். ஏ., பிஎச். டி. முதுநிலை ஆய்வாளர் | 8—4—82 முதல் |
| 5. திரு எச். சித்திரபுத்திரபிள்ளை, எம். ஏ. இளநிலை ஆய்வாளர் | 7—4—82 முதல் |

*1. மர இனப் பெயர் அகராதி*

தொகுப்பியல் துறையில் அகராதி ஆக்கக் கொள்கைகளை அளவீடு செய்தற்கும் சீர்தூக்குதற்கும் வாய்ப்பாக மரங்களைப் பற்றிய அகராதிகள் நிகண்டுகள் முதலிய அடிப்படை நூற்களை ஆதாரமாகக் கொண்டு ஏறத்தாழ 5000 மர இனச் சொற்களையும் அவற்றின் வேர் வகைகளையும் திரு சுந்தர சண்முகனார் தொகுக்க முற்பட்டார். அவர் பதவி விலகிய பின் டாக்டர் மாதையனும், திரு சித்திரபுத்திர பிள்ளையும் அப்பணியைத் தொடருகின்றனர்.

*2. அகராதிக் கலை நூல் தமிழாக்கம்*

டாக்டர் தா. வே. வீராசாமி, தமது திட்டமாக சொகுஸ்தா எழுதிய அகராதிக் கலை நூலை மொழிபெயர்ப்பதும், பெரியபுராண இயற்பெயர் அகராதி ஒன்றைத் தொகுப்பதும் ஆகிய இரு பணிகளை முடிக்க முனைந்து வருகிறார்.

### 3. இலக்கியக் கலைச்சொல் தொகுப்பு

இலக்கியக் கலைச்சொல் தொகுப்பை டாக்டர் மூர்த்தி மேற்கொண்டுள்ளார். தமிழ் இலக்கண நூற்களில் வரும் கலைச்சொற்களையும், ஆங்கிலத் திறனாய்வு நூற்களிற் காணும் கலைச் சொற்களையும் தொகுப்பதாகத் திட்டம் தந்தார். 27-1-84இல் வல்லுநர்குழு அவருடைய பணியைச் சீர்தூக்கியபோது, ஆங்கிலச் சொற்களுக்கும் அகராதித் தமிழ்ச் சொற்களுக்கும் எழுதப்பட்ட விளக்கங்களைத் தட்டச்சிட்டுத் தருமாறு வேண்டிக் கொண்டது. 17—2—1984இல் கூடிய வல்லுநர்குழு தமிழ்ச் சொற்களில் வரையறையின்மை, சான்றுகளிற் காணும் குறை முதலியவற்றைச் சுட்டிக்காட்டிச் செப்பனிடும்படி அறிவுறுத்தியதைத் தொடர்ந்து இப்போது செப்பஞ் செய்து வருகிறார்.

## IV. மொழிப்புலம்

### *1.* இலக்கியத்துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார், சிறப்புப் பேராசிரியர், துறைத் தலைவர், மொழிப்புலத் தலைவர் | 21—6—82 முதல் |
| 2. டாக்டர் இரா. சாரங்கபாணி, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி. சிறப்புப் பேராசிரியர் | 18—5—82 முதல் |
| 3. டாக்டர் து. சீனிச்சாமி, எம்.ஏ., பிஎச்.டி. விரிவுரையாளர். | 1—6—82 முதல் |
| 4. டாக்டர் அ. மா. பரிமணம், எம். ஏ., எம். லிட்., பிஎச். டி. சிறப்பு ஆய்வாளர் | 1—11—83 முதல் |
| 5. டாக்டர் பி. பழனியம்மாள். எம்.ஏ., பிஎச். டி. முதுநிலை ஆய்வாளர் | 14—6—82 முதல் |
| 6. புலவர் சி. செல்வத்தாண்டவன், எம். ஓ. எல். முதுநிலை ஆய்வாளர் | 20—10—83 முதல் |

### *1.* சைவசித்தாந்த சாத்திரங்களின் வரலாறு

சைவ சித்தாந்த சாத்திரங்களின் வரலாறு என்ற தலைப்பில் பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் ஆய்ந்து வருகிறார். இரண்டு தொகுதிகளாக உருவாகும் இந்த வரலாற்றின் முதல் தொகுதியில், தமிழ் இலக்கியத்தில் காணும் தத்துவக் கூறுகள் தொகுத்துத் தரப்படும். இரண்டாவது தொகுதியில் 14 மெய் கண்ட சாத்திரங்களின் வரலாறு இடம் பெறும். முதல் தொகுதி இவ்வாண்டு ஏப்ரல் மாதம் அச்சிடத் தயாராகும்.

2. சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம்

சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் ஒவ்வொரு தொகுதியும் 1000 பக்கங்கள் வருமாறு,இரண்டு தொகுதியாகச் சங்க இலக்கியங்களில் வரும் அரசர்கள்,புலவர்கள், குறுநில மன்னர்கள், செடிகொடிகள், உயிரினங்கள், மதம், அறக்கருத்து, அரசியல் வரலாறு, சமுதாயம்,பண்பாடு, நுண்கலைகள் முதலிய செய்திகள் அனைத்தும் சான்று களுடன் தொகுத்து அளிக்கும் பணி டாக்டர் இரா. சாரங்கபாணி தலைமையில் நடை பெறுகின்றது. இதில் டாக்டர் பரிமணம், டாக்டர் பழனியம்மாள், திரு சி. செல்வத் தாண்டவன் ஆகியோரும் உடன் உழைக்கின்றனர். வல்லுநர் குழு ஒன்று 1984 சனவரி 20, 21, 22 ஆகிய நாட்களில் கூடி அதன் செய்திமுறைக் கோவை, அமைப்பு முறை, தொகுப்பு நெறி முதலியவற்றைச் சீர்தூக்கித் தமது கருத்தைக் கூறியது. முதல் தொகுதி இவ்வாண்டு ஏப்ரல் மாதத்தில் அச்சுக்கு அனுப்பும் நிலைபெறும். எம். வி. காணே தொகுத்த தரும சாத்திரத்தின் வரலாறும், மாரீஸ் புளூம்பீல்டு தொகுத்த வேத மந்திர மாறுபாட்டுத் தொகையும், வேத இலக்கியத்திற்கும் அத னோடு சார்புடைய இலக்கியப் படிப்பிற்கும் துணை நிற்பதை ஆய்வாளர்கள் நன்கு அறிவர். சங்க இலக்கியப் படிப்பிற்கு மேற்குறிப்பிட்ட பொருட் களஞ்சியம் மிகவும் உதவும். இதன் இரு தொகுதிகள் வெளியானதும், ஆங்கிலத்திலும் இவற்றை வெளி யிட்டால் உலக ஆய்வாளர்கள், சங்க இலக்கியச் செய்தியைப் பயன்படுத்துதற்குத் துணையாக அமையும். இவ்விரு தொகுதிகளும் ஓராண்டிற்குள் முடிப்பதற்கு எல்லா ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

3. தமிழில் காப்பியக் கொள்கை—நூலாக்கம்

'தமிழில் காப்பியக் கொள்கை' என்ற தலைப்பில் டாக்டர் து. சீனிச்சாமி தமது அறிக்கையைச் சனவரி இறுதியில் தந்தார். பெப்ருவரி 14-ஆம் நாள் இதனைச் சீர்தூக்குக் குழு ஒன்று பரிசோதித்து அதன் நல்ல கூறுகளைப் பாராட்டிச் செய்ய வேண்டிய மாற்றங்களைக் குறிப்பிட்டுள்ளது. தமிழ்க் காப்பியங்களான சிலம்பு, மணிமேகலை, சிந்தாமணி, பெருங்கதை, சூளாமணி ஆகிய ஐந்தையும் அடிப்படை யாகக்கொண்டு, மேனாட்டுக் கொள்கைகளோடு ஒப்பிட்டு, இந்த ஆய்வில் தமிழ் மொழிக் காப்பியக் கொள்கையை வரையறை செய்துள்ளனர்.

4. கருத்தரங்கு

'இலக்கியமும் புத்தியலும்' என்ற தலைப்பில் ஐந்து நாள் நீண்டு நின்ற பண்ணை ஒன்று 1—4—83 முதல் நடைபெற்றது. ஏறத்தாழ இருபது இலக்கிய வல்லுநர்கள் கலந்து கொண்டனர்.

## 2. மொழி இயல் துறை

1. டாக்டர் கே. அரங்கன், பி.ஓ.எல்., எம்.ஏ., பிஎச்.டி. பேராசிரியர், துறைத் தலைவர் — 23—2—82 முதல்

2. டாக்டர் எசு. ஆரோக்யநாதன், எம்.ஏ., பிஎச்.டி., (யு.எஸ்.ஏ) இணைப்பேராசிரியர் — 18—5—83 முதல்

3. டாகடர் கே. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., பி.ஒ.எல்., பிஎச்.டி. இணைப்பேராசிரியர் — 23—6—83 முதல்

4. டாக்டர் தா. இராபர்ட் சத்ய சோசப், எம்.ஏ., பிஎச்.டி. முதுநிலை ஆய்வாளர் — 3—11—82 முதல்

5. டாக்டர் நே. சோசப். எம்.ஏ., பிஎச்.டி. முதுநிலை ஆய்வாளர் — 5—4—82 முதல்

1. மொழி இயல் ஆய்வு

டாக்டர் கி. அரங்கன் இடமாற்று இலக்கண அடிப்படையில் தமிழ்த் தொடர் நிலையை ஆய்ந்து வருகிறார். அதனை அடுத்து மழலைச் சொல்லை ஆய்வது. மூன்றாவது தொல்காப்பியச் சொல்லதிகாரத்தைத் தர்க்க அமைப்புமுறை, விளக்க நெறிமுறை,கட்டுக்கோப்பு முதலிய அடிப்படைகளில் ஆய்வது. தொகையியல்பற்றிய ஆய்வும், செயப்பாட்டு வினை பற்றிய நுண்ணாய்வும் இப்போது செய்து வருகின்றார். இடமாற்றுத் தொடர் இலக்கணம் பற்றிய தமிழ் நூல் ஒன்றையும் எழுதி முடித்துள்ளார். இதனை வல்லுநர் குழு ஒன்று சீர்தூக்கியது. தமிழ் இலக்கணக் கட்டுரைத் தொகுதி ஒன்றையும் வெளியிட முயற்சி நடந்துவருகிறது. வல்லுநர் குழு ஒன்று 16-2-84-ஆம் நாள் கூடி, கடந்த இரண்டு ஆண்டுகளாக அவர் செய்த ஆய்வுப் பணியை அளவீடு செய்தது.

2. வட்டார வழக்கு ஆய்வு

தஞ்சையில் பேசப்படும் மராட்டிய மொழியை ஆய்ந்த டாக்டர் எஸ். ஆரோக்ய நாதன், வட்டார மொழி இணைப் பேராசிரியராக நியமனமானபின் தமிழகம் முழுவதும் ஒரு சமுதாயத்தின் வட்டார மொழியை ஆய்ந்து, வேறுபாடுகளை வகை செய்து வட்டாரப் பரப்பை அறுதி செய்யும் பணியைத் தொடங்கி உள்ளார். எல்லா மாவட்டங்களிலும் வாழும் ஒரு சமுதாயத்தைக் குறிப்பாக அரிசனர்களின் வாழ்க்கையைத் தமது ஆய்வுக்கு எடுத்துள்ளார். இன்னும் ஓராண்டிற்குள் வட்டார வழக்கு பற்றி, வழக்கு வேறுபாடு பற்றித் தெளிவுகள் பல கண்டெடுக்க வாய்ப்புண்டு. பிற பல்கலைக் கழகங்கள் எதுவும் முனையாத முயற்சி இது.

3. மரபிலக்கண வரலாறும் விளக்கமும்

இதன் தலைப்பில் டாக்டர் கே. பாலசுப்பிரமணியம் தமது ஆய்வைத்தொடங்கி இருக்கின்றார். தொல்காப்பியத்தில் உள்ளிணைப்பு, விளக்கும் ஆற்றல், பாணினீயம், பிராகிருத இலக்கண ஆசிரியர் காத்தியாயனர் முதலியவர்களுடன் ஒப்பு நோக்குதல் முதலிய பணி நடந்து வருகின்றது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் தாம் செய்த பணியின் அறிக்கையை முழுமித்துத் தருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

4. மலையினரின் உறவுப் பெயர்களைப் பற்றிய ஆய்வை மேற்கொண்ட டாக்டர். சத்ய சோசப் தஞ்சைக்கு அருகாமையில் உள்ள வல்லத்தில் பல சமுதாயங்களின் உறவு முறைகளை ஆய்ந்து, ஒரு முன்னிலை அறிக்கையை உருவாக்கி இருக்கின்றார்.

5. விவிலிய வேதத்தில் தமிழ் மொழிபெயர்ப்புப் பற்றிய வரலாற்றையும் வேறுபாட்டையும் டாக்டர் என். சோசப் தமது முதுமுனைவர் பட்டப் பொருளாக ஆய்ந்து வருகின்றார். விரைவில் தகுதித் தேர்வை எழுதி வெற்றி பெற்றதும் இந்த ஆய்வில் முனைந்து ஈடுபடுவார்.

இந்தத்துறையின் ஆதரவில் மேற்கு செருமனி ஸ்டெட்காட் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த செர்காட் நிக்கலும், செக்கோசுலோவாகியாவில் உள்ள பிராக் நகரைச் சேர்ந்த சார்லசு பல்கலைக் கழகப் பேராசிரியர் வாசெக்கும், ஐக்கிய அமெரிக்க நாட்டின் கொலரொடோ பல்கலைக்கழக கென்னிசும், சிறப்பு அழைப்பினராக வந்திருந்தனர்.

## V. அறிவியல் புலம்

### 1. தொல் தொழில் துறை

| பெயர் — பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. பேராசிரியர் ஆ. சுப்பிரமணியன் பி. ஈ. துறைத் தலைவர் – புலத் தலைவர் | 26 – 2 - 82 முதல் |
| 2. டாக்டர் கோ. குப்புராம், எம். ஏ., பி. எச். டி. விரிவுரையாளர் | 22 - 2 - 82 முதல் 30 - 11 - 83 முடிய |

**1. சோழர் காலக் கப்பல் கட்டும் கலை பற்றிய ஆய்வு**

சோழர் காலக் கப்பல் கட்டும் பணியை ஆய்ந்து நூல் ஒன்று அளிப்பதற்காகப் பேராசிரியர் ஆ. சுப்பிரமணியம் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகின்றார். சங்க இலக்கியத்தில் புணை, திமில், தோணி, வங்கம், நாவாய் முதலியவற்றைப் பற்றிய குறிப்புகளையும் ஏனைய செய்திகளையும் தொகுத்துள்ளார். பாண்டிச்சேரியில் உள்ள பிரெஞ்சு இந்தியவியல் நிறுவனத்தில் பணியாற்றும் பேராசிரியர் ஜீன் டிலோஷ் என்பவருடன் ஒத்துழைத்து மரக்கலங்கள் செய்யும் தமிழ்நாட்டு மையங்களுக்கும், கடற்கரைப் பட்டினங்களுக்கும் சென்று கள ஆய்வு செய்தார். கல்வெட்டு இலக்கியம், கள ஆய்வுச் செய்திகளைக் திரட்டிப் புணைபற்றிய நூலின் பெரும் பகுதியைத் தட்டச்சு செய்து வல்லுநர் குழு ஒன்றின் ஆய்வுக்குத் தந்தார். 1984 பிப்ரவரி 17ஆம் நாள் வல்லுநர் குழு இதனைச் சீர்தூக்கி விரைவில் முடித்து வெளியிடுமாறு பரிந்துரை செய்தது.

**2. சமச்கிருத நூலிலிருந்து தமிழாக்கம்**

கப்பல் கட்டும் தொழில் நுட்பங்கள் சமச்கிருத நூற்களில் காணப்படுவதால் அவற்றை மொழிபெயர்க்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**3. நீர் அகழ்வாய்வு மையம்**

நீருள் மறைந்த நகரங்களை அகழ்ந்தெடுத்து ஆய்வதற்காகவேண்டி நீர் அகழ்வாய்வு மையம் ஒன்றைத் தோற்றுவிக்கும் அறிஞர் கருத்தை ஆய்தற்கும், அகில

இந்திய துணைக்கருத்தரங்கு ஒன்றை நவம்பர் மாதத்தில் நடத்தினர். (இதன் விவரம் கருத்தரங்கு என்ற தலைப்பில் காண்க)

*4.* **பண்டைய உலோகத் தொழில் பற்றிய ஆய்வு**

உலோகத் தொழில்களைப் பற்றி டாக்டர் குப்புராம் ஆய்ந்தார். இதற்குரிய நூலோதி ஒன்றையும் தொகுத்துப் பல இடங்கட்குச் சென்று உலோக வார்ப்புச் செய்திகளைத் திரட்டியிருந்தார். உடல்நிலை காரணமாக அவர் பதவி விலக நேர்ந்தது.

## 2. தொல் அறிவியல் துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. டாக்டர் கு. சீனிவாசன், எம். எஸ்சி., பி. எச். டி.<br>துறைத் தலைவர் | 28 - 7 - 83 முதல் |

*1.* **அறிவியல் துறைகளின் வரலாற்றுத் தொகுப்பு**

கணிதம், இயற்பியல், தாவரவியல், உயிரியல், புவியியல், வானவியல் இரசாயனவியல் முதலியவற்றின் வரலாற்றைத் தொகுக்க டாக்டர் சீனிவாசன் முனைந்துள்ளார்.

*2.* **தாவரவியல் நூல் தயாரிப்பு**

முதலில் தாவரவியல் பற்றிய செய்திகளைத் தொகுத்து வருகின்றார். தென்னிந்தியாவில் வளரும் தாவரங்களைப் பற்றிய நூலோதி முடிவடைந்துவிட்டது. அந்த நூற்களில் காணப்படும் தாவரங்களின் பட்டிகை உருவாகி வருகின்றது. ஏ. டபிள்யு. லூசிண்டன் தொகுத்த வழக்குமொழிச் சொல்லடைவு மூலமும் இந்தச் செடிகொடிகளின் பெயர் நிர்ணயமும் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தாவரத்தின் உறுப்பமைப்பு, உள்நிலை அமைப்பு, சுற்றுபுற அமைப்பு, பொருளாதார விளைவு முதலியவற்றைத் தொகுத்து வருகின்றார். முதலாண்டு இறுதியில் ஏறத்தாழ 70 செடிகள் பற்றிய விவரங்களை வெளியிடும் நோக்கோடு முனைந்து உழைத்துவருகின்றார்.

அரண்மனை வளாகத்தில் காணும் எல்லா மரம், செடி முதலியவற்றின் அடையாளம் கண்டு பெயர்ப் பலகையில் குறித்துள்ளனர்.

## 3. சித்த மருத்துவத் துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. டாக்டர் சு. உத்தமராயன்<br>பேராசிரியர், துறைத்தலைவர் | 31—3—82 முதல்<br>17—11—82 முடிய |
| 2. டாக்டர் ஏ. ஆனந்தகுமார்<br>இணைப் பேராசிரியர் | 31—3—82 முதல்<br>1—3—83 வரை |

3. பேராசிரியர் ஜே. சாதிக், எம்.டி. எஸ்சி., பிஎச்.டி.
துறைத் தலைவர் 15—7—83 முதல்

4. டாக்டர் எஸ். பிரேமா, எம்.டி. (சித்த மருத்துவம்)
இணைப் பேராசிரியர் 6—7—83 முதல்

5. டாக்டர் சாந்தா பிரேமராஜ், எம்.எஸ்சி.
முதுநிலை ஆய்வாளர்
இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத் திட்டம் 3—1—84 முதல்

6. திரு சிவ. சோமசுந்தரம், எம். எஸ்சி.
முதுநிலை ஆய்வாளர், அறிவியல் மற்றும் தொழில்
நுட்பக் கழகத்தின் தனிப்பட்ட ஆய்வுப் பணி 1—10—83 முதல்

7. செல்வி வா. அசீனா பேகம், எம். எஸ்சி.
முதுநிலை ஆய்வாளர், இந்திய மருத்துவ
ஆய்வுக் கழகம், தனிப்பட்ட ஆய்வுப் பணி 14—11—83 முதல்

8. திரு மா. செகதீசன், எம். எஸ்சி.
இளநிலை ஆய்வாளர் 7—9—83 முதல்

9. இரா. வள்ளியப்பன், பி.எஸ்சி.
தொழில் நுட்ப உதவியாளர், கி.ம.ஆ. திட்டம் 5—12—83 முதல்

10, திரு ப. நாகேந்திர பிரசாத், எம். எஸ்சி.
சிறப்பு ஆய்வாளர் 1—12—83 முதல்

1. 'நோய்களும் நோய்களுக்குரிய மருந்து வகைகளும்' —நூலாக்க முயற்சி

பேராசிரியர் உத்தமராயன், தாம் பணி செய்த மாதங்களில் நோய்களும், நோய்களுக்குரிய மருந்து வகைகளும் பற்றிய நூல் ஒன்றை ஆக்குதற்கு முயன்றார். உடல்நிலை சரியில்லாததால் பதவி விலக்கம் பெற்றார்.

2. கருவுறுதல்—சித்த மருத்துவச் செய்தித் தொகுப்பு

டாக்டர் ஆனந்தகுமார் கர்ப்பம் தரித்தல் பற்றிச் சித்தமருத்துவச் செய்திகள் தொகுக்க முற்பட்டார். பிற பணிகளால் ஆய்வுப் பணியில் கருத்துக் செலுத்த முடியாத நிலை ஏற்பட்டதாலும், உடல் நிலை வளமாக இல்லாத காரணத்தாலும் பதவி விலகிக் கொண்டார்.

3. கீல்வாதம் பற்றிய சித்த மருத்துவ ஆய்வும் சித்த மருந்துகளை விலங்குகளுக்குச் செலுத்தித் சோதித்தலும்

டாக்டர் ஜே. சாதிக் கீல்வாதத்தைப் பற்றி விரிவாக ஆய்வு செய்தற்கும், அறுகம்புல் தைலம், கொம்பரக்கு முதலியவை புண்ணாற்றும் திறன் உடையவை என்பதை விலங்குகளிற் சோதித்து மனிதர்களுக்கு மருத்துவம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். மருந்தியலாளர் உடல், இரசாயன வல்லுநர்களுடைய ஒத்துழைப்புடன் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

## 4. நோய்களும் போக்கும் மருந்துகளும்

(அ) கீல்வாய்வு : தமிழகத்திலும், இந்தியாவிலும், உலகின் பல பாகங்களிலும் வருத்தும் கீல்வாயு நோயின் இயல்புகளையும், மாற்றும் மருந்துகள் பற்றியும் ஆய்வுத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இதனைத் துறைத்தலைவர் டாக்டர் ஜே. சாதிக் மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்விற்காக மாற்று மருந்துகளைச் சோதனை செய்ய, வெள்ளெலி, முயல் முதலியவற்றைப் பராமரிக்கும் விலங்கு வளை (Animal House) ஒன்று சிறிய அளவில் உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) மஞ்சட்காமாலைக்குரிய மருந்து வகைகளை ஆராய்ந்து. சோதனை செய்ய இந்திய மருத்துவ ஆய்வுக் கழகத்தின் ( I C M R ) மானியத்துடன் மூன்றாண்டுகளில் முடியும் நீண்ட கால ஆய்வுத்திட்டம் ஒன்று செயற்படுத்தப்பட்டிருக்கிறது. இதில் முதுநிலை ஆய்வாளர் ஒருவர், தொழில் நுட்ப உதவியாளர் ஒருவர், விலங்கு பராமரிப்பவர் ஒருவர் ஆக மூவர் செயல்படுகின்றனர். இத் திட்டத்தையும் டாக்டர் ஜே. சாதீக் மேற்பார்வை செய்கிறார், டாக்டர் சாந்தா பிரேமராஜ் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றுகிறார்.

(இ) நீண்டகாலத் திட்டமாகப் புற்றுநோய், தோல் வியாதிகள், குட்டம் போன்ற நோய்களின் இயல்பறிந்து அவற்றிற்கு மாற்று மருந்துகளை ஆராய்வதற்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

(ஈ) சோதனைக் கூடம் : மருந்துகளைப் பரிசோதனை செய்வதற்காவும், உருவாக்குவதற்காகவும், சிறிய அளவில் ஒரு சோதனைக் கூடம் உருப்பெற்றிருக்கின்றது. விரைவில் இதற்குரிய ஆய்வுக் கருவிகள் வாங்க முயற்சி நடந்து வருகின்றது. இதன் ஒரு பகுதியாக குளிர் பதன அறையும் அமைக்கப்படும். இச் சோதனைக் கூடத்தை 1-3-1984 அன்று பேராசிரியர் ஏ. இரகுமான், இயக்குநர், (தேசிய அறிவியல் தொழில் நுட்ப மேம்பாட்டு நிறுவனம், புதுதில்லி—12) திறந்து வைத்தார்.

## 5. சித்த மருத்துவ ஏடுகளையும் அரிய நூல்களையும் வெளியிடுதல்

தமிழ்ப் பல்கலைக் கழகச் சுவடிப்புலத்தில் 950 ஏடுகள் தொகுக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 500 அரிய நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. நல்ல பதிப்பாக வெளிவராத ஏடுகளை வெளியிடவும், இப்போது கிடைக்காத அரிய நூல்களை வெளியிடவும் ஒரு முயற்சி நடந்து வருகின்றது. ‘அகத்தியர் குழம்பு’ என்ற நூலை உருளச்சிட்டு, அண்மையில் நடந்த சித்த மருத்துவக் கருத்தரங்கிற்கு வந்திருந்த பேராளர்கட்கு வழங்கப்பட்டது.

கி. பி. 1867ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை வெளி வந்துள்ள சித்த மருத்துவ நூல்கள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றை அட்டவணையிட்டு வெளியிடவும், ‘போகர் வயித்தியம்’ 700—என்ற நூலைப் பதிப்பிக்கவும், சித்த மருத்துவத்துறை இணைப் பேராசிரியர் டாக்டர் சே. பிரேமா, ஓலைச் சுவடித் துறையைச் சேர்ந்த திரு ப. வெ. நாகராசனுடன் இணைந்து பணியாற்றி வருகிறார்.

நுண்படமெடுக்கும் கருவியும், நிழற் படியெடுக்கும் கருவியும் பல்கலைக்கழகத்தில் இருப்பதைக் குறிப்பிடவேண்டும்.



சித்தமருத்துவத் துறை — விலங்குவளைத் திறப்புவிழா
( 17—1—84 )




அனைத்திந்தியச் சித்தமருத்துவ மாநாடு

( 13, 14—2—83 )

## 6. மூலிகைப் பண்ணை

சித்த மருத்துவ ஆய்விற்குத் தேவையான மூலிகைகளைப் பெரிய அளவில் வளர்த்து மருந்து செய்யப் பயன்படுத்தும் நோக்கோடு 10 ஏக்கர் பரப்பில் விதைப் பண்ணை ஒன்று தமிழ்ப் பல்கலைக் கழகப் புது வளாகத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. மூலிகை வளர்ந்ததும், 30 ஏக்கர் நிலப் பரப்பில் பயிரிடப்படும். இப் பணிகளைத் திரு நாகேந்திர பிரசாத் மேற்பார்வை செய்து வருகிறார்.

அந்த வளாகத்தில் மாறும் தட்பவெப்ப நிலையில் மூலிகைகள் வளர்த்தற்குச் சம வெப்ப அறையும், கண்ணாடி அறையும் அமைக்கப்பட உள்ளன.

மூலிகைகள் இனச் சேர்க்கைகள் செய்யப்பட்டு, திசுக்களைச் (நுண்செதுக்கி) (tissues) சோதனைக் குழாயில் வளரச் செய்து, உயிர்ச் சத்து மிகுதியாக உள்ள மூலிகைகளை உருவாக்க ஆய்வு முயற்சிகள் நடக்கின்றன.

## 7. மூலிகைகளும் நோய் நீக்கலும் பற்றிய கள ஆய்வு

தஞ்சை மாவட்டத்தில் உள்ள ஊர்ப்புறங்களில் நோய்களுக்குப் பயன்படுத்தும் சித்த மருத்துவ மூலிகைகளைப் பட்டியல் மூலமாகத் திரட்டி நூலாக வெளியிட ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகின்றது. 15 ஊர்களில் 120 பேராளர்கள் வழியாக இப் பட்டியல் இதுகாறும் தொகுக்கப்பட்டுள்ளது. முதலில் தஞ்சை மாவட்டத்திலும் பிறகு வேறு மாவட்டங்களிலும் செயல்படுத்தத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் திரு ம. ஜெகதீசன் மேற்பார்வையில் நடைபெறுகின்றது.

திரு சிவ. சோமசுந்தரம் அறிவியல் தொழில் நுட்பக் கழகத்தின் முதுநிலை ஆய்வாளர் நல்கை பெற்றுக் கீல்வாயு மருந்தினை ஆராய்ந்து வருகின்றார். செல்வி வ. ஹசீனாபேகம் இந்திய மருத்துவக் கழகத்தின் (ICMR) முதுநிலை ஆய்வாளர் நல்கைபெற்றுக் கீல்வாயு மருந்து பற்றி ஆராய்ந்து வருகிறார்.

# 32. பிறதுறை

## சமூகவியல் துறை

| பெயர்—பதவி | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|
| 1. டாக்டர் எஸ். எஸ். தேக்கமலை, எம்.ஏ., பிஎச்.டி. பேராசிரியர், துறைத் தலைவர் | 1—7—83 முதல் |
| 2. திரு சி. சிவதாணு, எம்.ஏ. முதுநிலை ஆய்வாளர் (மொழியியல்) | 12—8—83 முதல் |
| 3. டாக்டர் ஏ. இராமநாதன், எம்.ஏ., பிஎச்.டி. முதுநிலை ஆய்வாளர் | 20—10—83 முதல் |

### 1. ஊர்ப்புற ஆய்வு

பாரத மாநில வங்கி அறக்கட்டளையாக வழங்குவதற்கு வாக்களித்த ரூ. 5 இலட்சத்தில் தோற்றுவிக்கப்பட்ட இந்தத் துறை ஊர்ப்புறச் சமுதாயத்தின் பொருளாதாரம், மத நிலை முதலியவற்றை ஆய்தற்கு முனைந்துள்ளது. பேராசிரியருக்குத் துணையாகப் புள்ளிவிவரம், பொருளாதாரம், மொழியியற் செய்திகள் முதலியவற்றைச் சேகரிக்க 3 முதுநிலை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

### 2. ஆய்வுச் செய்திகள் தொகுப்புப் பணி

தஞ்சை, கோவையில் நடந்தது போல திருச்சி மாவட்டத்திலும் ஊராய்வுத் திட்டத்தை மேற்கொண்டு, அண்மையில் அது முடிவுற்றது. அதனை வகைப்படுத்திச் செய்திகளைத் தொகுக்கும் பணியில் இப்போது துறை ஈடுபட்டு வருகின்றது. இந்த ஊராய்வுத் திட்டத்தில் தேசிய சமூகத் தொண்டு செய்யும் இளைஞர்களைப் பயன்படுத்தி ஏறத்தாழ 2000 ஊர்களை அளவீடு செய்துள்ளது.

### 3. நாட்டுப் பாடல் ஆய்வு

சின்னண்ணன், சின்னத்தம்பி என்ற நாட்டுத் தலைவர்களைப் பற்றிய பாடல்களைத் தொகுத்து வரலாற்று நிலையில் ஆராய முதுநிலை ஆய்வாளர் திரு ஏ. இராமநாதன் முனைந்து வருகின்றார். இந்தப் பாடல்களிற் காணும் வேறுபாடுகளைத் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் இருந்து தொகுத்துள்ளார்.

## 33. ஆய்வாளர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அளிக்கும் வாய்ப்பு

1. 9 முதல் 12 மாதங்களுக்குள் நிறைவேற்றும் குறுகிய கால ஆய்வுத் திட்டங்களுக்கு மானியம் வழங்குகிறது. முன்னர் 26 பேருக்கு இத்தகைய மானியம் வழங்கி ஆய்வறிக்கை பெற்றுள்ளது. கல்லூரியில் இருந்தே இந்தப் பணியைச் செய்யலாம்.

2. தமிழகத்தில் உள்ள ஆய்வு செய்யும் ஆசிரியர்களுக்கு 6 வாரம் வரை வேனல் விடுமுறையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தங்கி நூலகத்தையும், பணியாற்றும் பேராசிரியர்களையும் பயன்படுத்த மானியம் வழங்குகிறது.

3. முனைவர் பட்டம் பெற்றவர்கள் மேலும் நுணுக்கமாக ஆராய விரும்பினால் முதுமுனைவர் பட்டத்துக்கு ஆய்வாளர்களாகத் தேர்ந்தெடுக்கிறது.

4. அவ்வப்போது நடக்கும் கருத்தரங்குகள், பண்ணை முதலியவற்றுக்கு ஆசிரியர்களையும் அழைத்துப் புதுச் செய்திகளைப் பரிமாறும் வாய்ப்பும் தருகிறது.

5. தமிழ்க் கலை, 'Tamil Civilization' ஆகிய காலாண்டு இதழ்களில் தரமான கட்டுரைகள் ஆசிரியர்களிடமிருந்து பெற்று வெளியிடுகிறது.

6. ஆசிரியர்களில் திறமையான மொழிபெயர்ப்பாளர் இருப்பின் அவர்கள் மொழி பெயர்க்கும் நூலுக்கு வரையறை செய்த ஊதியத்தை நல்கி ஊக்குவிக்கிறது.

7. இதுவரை ஏறத்தாழ எல்லா மாவட்டங்களையும் சேர்ந்த 300 ஆசிரியர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் திட்டத்தால் பயன் பெற்றிருக்கின்றனர்.

பிறமாநிலத் தமிழாசிரியரும், ஆய்வாளர்களும் (கேரளம்,ஆந்திரம், கர்நாடகம், வட இந்தியா) தமிழ்ப் பல்கலைக் கழகத் திட்டத்தால் பயன் பெற்றுள்ளனர்.

# 34. சிறப்புப் பட்டமளிப்பு விழா

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வரலாற்றில் 24 – 3 - 1984 என்றும் நினைந்து மகிழ்தற்குரிய ஒரு பொன்னாளாகும். அன்றுதான் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் முதல் பட்டமளிப்பு விழா, சிறப்புப் பட்டமளிப்பு விழாவாகத் தஞ்சை அரண்மனைக் கோட்டத்தில் சங்கீத மகாலில் இனிதே நடந்தேறியது. தமிழ்நாடு ஆளுநரும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வேந்தருமாகிய மேதகு எஸ்.எல். குரானா அவர்கள் தலைமை தாங்க, தமிழ்நாட்டுக் கல்வியமைச்சரும், பல்கலைக் கழகத்தின் இணை வேந்தருமாகிய மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவாற்றினார்கள்.

அன்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒவ்வொன்றும் பண்டைத்தமிழர்தம் கலைப் பண்பாட்டினை நினைவுபடுத்தியது. தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் இலச்சினை பொறித்த ஆலவட்டம் அணிவகுப்பின் முன்னே செல்ல, அதனைத் தொடர்ந்து மூவேந்தரின் கயல், வில், புலி பொறித்த ஆலவட்டங்கள் பின் தொடர, சீருடை அணிந்து பெருமித நடையிட்டுப் பதிவாளர் அணிவகுத்து வருவோர்க்கு வழிகாட்ட, பேரவையினரும், ஆட்சிக்குழு உறுப்பினரும், புலத்தலைவர்களும் இருவர் இருவராகத் தாளத் திற்கேற்ப மெல்ல நடந்து வர, அணிவகுப்பின் முடிவில் பல்கலைக்கழக வேந்தரும், இணைவேந்தரும், துணைவேந்தரும் முத்துக்குடை மூன்றின் நிழலில் நடை பயின்று வந்தது, பண்டைத் தமிழக மூவேந்தர்கள் பவனிவந்த காட்சியினைக் காண்போரின் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தியது.

தமிழ்க்கலை, பண்பாடு ஆகியவற்றில் விழிப்புணர்ச்சியினை உண்டாக்கி, தமிழ்மொழியின் ஆராய்ச்சியில் மக்களை ஈடுபடச்செய்து, தமிழ்மொழியின் வளர்ச்சிக் கெனவே தோற்றுவித்த இப் பல்கலைக் கழகத்தில் தம் வாழ்நாள் முழுமையும் தமிழ்க் கலை, பண்பாடு, மொழிக்கென உழைத்துத் தமிழுக்கும் தமக்கும் பெருமை சேர்த்த தமிழ்ச் சான்றோர் ஐவருக்குப் புட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநரும் வேந்தருமாகிய மேதகு எஸ். எல். குரானா அவர்கள் இலக்கிய முதுமுனைவர், அறிவியல் முதுமுனைவர் பட்டம் வழங்கிப் பெருமை செய்தது விழாவிற்குச் சிறப்புச் சேர்க்கும் நிகழ்ச்சியாகும்.

முதுமுனைவர் சிறப்புப் பட்டம் பெற்றோர்களை முறையே பெரும்புலவர் ச. தண்டபாணி தேசிகர் அவர்களை மொழிப்புலத் தலைவர் பேராசிரியர் கா. வெள்ளைவாரணனார் அவர்களும், உயர்திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களை அறிவியல் புலத்தலைவர் பேராசிரியர் ஆ. சுப்பிரமணியம் அவர்களும், உயர்திரு சு. மு. கௌரி சங்கர தபதி அவர்களைச் சுவடிப்புலத்தலைவர் பேராசிரியர் கே. எம். வேங்கடராமையா அவர்களும், உயர்திரு திருவெண்காடு ப. சுப்பிரமணிய பிள்ளை அவர்களைக் கலைப்புலத்தலைவர் டாக்டர் ஆ.சீ. இராமன் அவர்களும் முன்னிலைப்படுத்தினார்கள். மறைந்த தவத்திரு தனிநாயக அடிகளாரின் கல்வி மேம்பாடு, தமிழ்த் தொண்டு, பெருமை முதலியனபற்றி வளர்தமிழ்புலத் தலைவர் பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியம் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.



சிறப்புப் பட்டமளிப்பு விழா

ஆலவட்டத்தோடு அணிவகுப்பு

( 24—3—84 )



சிறப்புப் பட்டமளிப்பு விழாவில்
இணைவேந்தர், வேந்தர், துணைவேந்தர்
( 24—3—84 )



24—3—84 இல் நிகழ்ந்த தமிழ்ப் பல்கலைக்கழகச் சிறப்புப் பட்டமளிப்பு விழாவில்
கல்வியமைச்சர், மாண்புமிகு செ.அரங்கநாயகம் அவர்கள்
உரை நிகழ்த்துகிறார்கள்



மாமன்னன் இராசஇராசன் படைப்பிலக்கியப் பரிசளிப்பு விழா
மாண்புமிகு துணைவேந்தரவர்கள் பரிசுபற்றி விளக்குதல்
( 24—3—84 )



மாமன்னன் இராசஇராசன் படைப்பிலக்கியப் பரிசளிப்பு
கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள்
கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கு வழங்குதல்
( 24—3—84 )

தஞ்சை மாநகரினைத் தலைநகராகக் கொண்டு செங்கோலோச்சிய சோழப் பேரரசைச் சார்ந்த மாமன்னன் இராசராசன் பெயரில் நிறுவப்பட்டுள்ள உலகந் தழுவிய தமிழ்ப் படைப்பிலக்கியப் பரிசினைப்பற்றித் துணைவேந்தர் அவர்கள் விளக்கிக் கூறி, இதன் அடிப்படையில் 1983-84 ஆம் ஆண்டுக்குரிய படைப்பிலக்கிய பரிசு ரூபாய் ஒரு லட்சத்து ஒன்று கவியோகி சுத்தானந்த பாரதியார் இயற்றியுள்ள 'பாரத சக்தி மகா காவிய'த்திற்கு அளிக்கப்படுகின்றது என்று கூறினார்கள்.

தமிழ்நாட்டுக் கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்கள் கவியோகி சுத்தானந்த பாரதியாரின் தமிழ் இலக்கியத் தொண்டினையும், பெருமையினையும், அவர் இயற்றிப் பரிசுபெறும் காவியம் பற்றியும் எடுத்துக் கூறிக் கவியோகிக்குப் பொன்னாடை போர்த்தி மாமன்னன் பரிசினை வழங்கிப் பாராட்டினார்கள்.

பின்னர் தமது பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவாற்றி, பட்டம் பெற்றோரையும் விழாவில் கலந்துகொண்ட பெருமக்களையும் நம் முன்னோர் சென்ற நெறி ஒழுகித் தமிழுக்குப் பெருமை சேர்க்குமாறு வேண்டினார்கள்.

அன்று பிற்பகல் இரண்டு மணிக்குத் தமிழக மேலவைத் தலைவர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் சிறப்புப்பட்டம் பெற்றோர்க்கும், மாமன்னன் பரிசு பெற்றோர்க்கும் ஒரு பாராட்டுவிழா நடைபெற்றது. டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் அளித்த பாராட்டு உரைக்கு மறுமொழியாகப் பேராசிரியர் டாக்டர் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார், திரு கௌரி சங்கர தபதி, இலக்கிய முதுமுனைவர் ச. தண்டபாணி தேசிகர், கவியோகி சுத்தானந்தர் ஆகியோர் நன்றியுரை ஆற்றினார்கள்.

## 35. முடிவுரை

### ஆய்வே நோக்கம்

ஆய்வே தனது பெரு நோக்கமாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் கருதுகிறது. பிற பல்கலைக் கழகங்களைப் போல இளங்கலை, முதுகலை, முனைவர் பட்டப் படிப் பிற்கு வழி செய்யாது உயர் ஆய்வுக்கு வழி வகுத்துள்ளது. இத்தகைய ஆய்வுக்குத் துணையாகச் சிறந்த நூல்கள், திறமையாக இயங்கும் கணிப்பு மையம், ஓலைச்சுவடி நூலகம், அரிய சுவடி நூலகம், அருங்காட்சியகம், ஒலி ஒளிப் பதிவகம் முதலியவை உருவாக்கப்பட்டுள்ளன. இன்று பல துறை ஆய்விற்கும் கருத்துப் பரிமாற்றத் திற்கும் பல்கலைக் கழகம் வசதி செய்துள்ளது.

### விரைவான வெளியீடு

ஆய்வு அறிக்கைகளையும், நூல்களையும் பதிப்பித்து உடனே வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

### விரிவான ஆய்வு

ஆய்வுத் தகைமைகள் (இளநிலை. முதுநிலை, சிறப்புநிலை, தொல்காப்பியத் தகைமை) முதலியவற்றைத் தோற்றுவித்து ஆய்வை விரிவாக்கியுள்ளது.

### நிலைபெறும் திட்டங்கள்

நெடுநாள் நிலைபெறும் திட்டங்களாகிய சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் (2 தொகுதி), அறிவியல் களஞ்சியம் (20 தொகுதி), வாழ்வியல் களஞ்சியம் (14 தொகுதி), தமிழ்ப் பேரகராதி (10 தொகுதி) ஆகியவற்றைச் செயல்படுத்தியுள்ளது.

### நுண்ணாய்வு மையங்கள்

நுண்ணாய்வுக்கெனத் தக்க இடங்களில், காஞ்சியில் தத்துவ மையம், உதகையில் மலையின ஆய்வு மையம், மண்டபத்தில் நீர் அகழாய்வு மையம் ஆகிய நுண்ணாய்வு மையங்களைத் தோற்றுவித்துள்ளது.

### தமிழை அறிவியல் மொழியாக்கல்

தமிழ் மொழியை மருத்துவம், பொறியியல் முதலிய துறைகளில் பயிற்று-மொழியாக ஆக்குதற்குப் பாடநூற்கள் உருவாக்கவும், கலைச் சொற்களைச் செப்பனிடவும் திட்டமிட்டுப் பணி தொடர்கின்றது.

**மறுநாட்டுத் தமிழருடன் தொடர்பு**

தமிழர் வாழும் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, தென்னாப்பிரிக்கா முதலிய நாட்டுத் தமிழ்ப் பேரன்பர்களோடு, தமிழ் மொழி, கலை, பண்பாடு இவற்றைப் பற்றிய செய்திகளை வகுப்புகள் வழியும், அந்நாடுகளில் நடந்த அளவீடுகள் வழியும், சஞ்சிகைகள் வழியும் தொடர்பு கொண்டுள்ளது.

**சிறப்புத் துறைகள்**

பிற பல்கலைக் கழகங்களில் இல்லாத சிறப்புத் துறைகளாக மறு நாட்டுத் தமிழர் துறை, சித்த மருத்துவம், ஓவியம், சிற்பம், கட்டடக் கலை, தொல் தொழில், தொல் அறிவியல் முதலிய துறைகளைத் தோற்றுவித்து இப் பல்கலைக் கழகம் செயல்படுகிறது.

**நாடெங்கும் நடக்கும் தமிழியல் ஆய்வுக்கு ஊக்கம்**

தமிழ்ப் பல்கலைக் கழக ஆய்வாளர் மட்டுமல்லாமல் தமிழியல் பற்றி ஆயும் அறிஞர்கள், தமிழகத்திலும் புறத்திலும், பிற நாட்டிலுமிருப்பின் அவர்களுக்கு மானியம் வழங்கி ஊக்கமளிக்கிறது.

**உலகப் பரப்பில் ஒரு பரிசு**

தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கு ஞானபீடப் பரிசு போன்று மாமன்னன் இராசராசன் பெயரில் ஓர் இலட்சத்து ஒரு ரூபாய் பெறும் பரிசொன்றை நிறுவி உலகில் எப்பகுதியில் தமிழ்ப் படைப்பிலக்கிய ஆசிரியர்கள் வாழ்ந்தாலும் அவர்களுக்கு இப் பரிசை அளிக்க விதி வகுத்துள்ளது.

**ஆய்வுச் சூழல், ஆய்வாளர் மனநிலை**

ஆய்வுச் சிறப்பால் நற்பெயரெடுக்க வேண்டும் என்ற மன உறுதியை ஆய்வாளர்களிடத்திலே தோற்றுவித்துள்ளது. அதற்குரிய சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இணைப்பு : 1

## ஆட்சிக்குழு உறுப்பினர்

**தலைவர்**

டாக்டர் வ. அய். சுப்பிரமணியம், எம். ஏ.. பிஎச். டி..
துணைவேந்தர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

அலுவல் வழி உறுப்பினர்

1. திரு டி. டி. சுந்தரராஜ். இ. ஆ. ப.,
ஆணையர் மற்றும் அரசு செயலர் ,
கல்வி அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்துறை,
கோட்டை,
சென்னை-600 008.

2. திரு சி. இராமச்சந்திரன், இ. ஆ. ப.,
நிதித்துறைச் செயலர்,
தமிழ்நாடு அரசு,
கோட்டை,
சென்னை-600 009.

3. திரு சு. செல்லப்பன்,
தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்,
குறளகம் (2 ஆவது மாடி),
சென்னை-600 108.

4. டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி. டி. டி. ஐ. அஞ்சல்,
சென்னை-600 113.

5. பேராசிரியர் அ. சீ. இராமன்,
புலத் தலைவர்,
கலைப்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

6. பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியன்,
புலத் தலைவர்,
வளர் தமிழ்ப்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

7. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,
புலத் தலைவர்,
மொழிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

ஏனைய உறுப்பினர்

8. திரு டி. பி. எம். பெரியசுவாமி,
முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை-625 010.

9. மாண்புமிகு புலவர் திரு புலமைப்பித்தன்,
சட்ட மேலவைத் துணைத்தலைவர்,
88, அப்பு முதலி தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

10. பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,
29, அய்யாவு நாயுடு தெரு,
செனாய் நகர்,
சென்னை-600 030

11. திரு ப. சு. மணியம்,
28 / 350 இலாலிச் சாலை.
சுப்பிரமணியபுரம்,
கோயம்புத்தூர்-40

---

1a. திரு கோ. சிவகுருநாதன்,
தனி அலுவலர் — புதிய பல்கலைக் கழகங்கள்,
கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை,
தலைமைச் செயலகம்,
கோட்டை,
சென்னை-600 009.
(கல்வித் துறைச் செயலருக்காக)

2a. திரு சு. சோழபெருமாள்,
துணைச் செயலர்,
நிதித்துறை,
தமிழ்நாடு அரசு,
கோட்டை,
சென்னை-600 009.
(நிதித்துறைச் செயலருக்காக)

இணைப்பு : 2

## ஆட்சிப் பேரவை உறுப்பினர்

1. மேதகு ஆளுநர் எஸ். எல். குரானா,
தமிழ்நாடு அரசு,
இராஜ்பவன்,
கிண்டி,
சென்னை-600 025.

2. மாண்புமிகு செ. அரங்கநாயகம்,
கல்வி அமைச்சர்,
தமிழ்நாடு அரசு,
கோட்டை,
சென்னை-600 009.

3. டாக்டர் வ. அய். சுப்பிரமணியம்,
மாண்புமிகு துணைவேந்தர் அவர்கள்,
தமிழ்ப் பல்கலைக் கழகம் ,
தஞ்சாவூர்.

4. திரு டி. டி, சுந்தர் ராஜ், இ. ஆ. ப.,
ஆணையர் மற்றும் அரசுச் செயலர்,
கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்துறை,
கோட்டை,
சென்னை-600 009.

5. திரு சி. இராமச்சந்திரன். இ. ஆ. ப.,
நிதித்துறைச் செயலர்.
தமிழ்நாடு அரசு.
கோட்டை,
சென்னை-600 009.

6. திரு சு. செல்லப்பன்,
தமிழ் வளர்ச்சி இயக்குநர் ,
குறளகம் (2 வது மாடி)
சென்னை-600 108.

7. டாக்டர் ச, வே. சுப்பிரமணியன்,
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி. டி. டி. ஐ. அஞ்சல்,
சென்னை-600 113

8. பேராசிரியர் ஏ. எஸ். இராமன்,
ஓவியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

9. பேராசிரியர் என். வி. இராமநரசன்,
நாடகத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

10. பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை,
ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

11. பேராசிரியர் கே. எம். வேங்கடராமையா,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

12. டாக்டர் எ. சுப்பராயலு,
பேராசிரியர்,
கல்வெட்டுத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

13. டாக்டர் கு. நம்பி ஆரூரன்,
பேராசிரியர்,
அயல்நாடுகளில் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

14. பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியம்,
மொழிபெயர்ப்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

15. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

16. டாக்டர் கி. அரங்கன்,
பேராசிரியர்,
மொழியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

17. பேராசிரியர் ஆ. சுப்பிரமணியன்,
தொல்தொழில் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

18. பேராசிரியர் அ. மு. பரமசிவானந்தம்,
29, அய்யாவு நாயுடு தெரு,
செனாய் நகர்,
சென்னை-600 030.

19. திரு ப. சு. மணியம்,
28/350 இலாலிச் சாலை,
சுப்பிரமணியபுரம்,
கோயம்புத்தூர்-40.

20. திரு தா. வீராசாமி,
சட்ட மன்ற உறுப்பினர்,
எண். 16, இராசன் ரோடு,
சீனிவாசபுரம்,
தஞ்சாவூர்.

21. திரு செ. இராமலிங்கம்.
சட்ட மன்ற உறுப்பினர்,
எண். 56, சீனிவாசநல்லூர்,
திருநாகேசுவரம்,
கும்பகோணம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

22. மாண்புமிகு புலவர் திரு புலமைப்பித்தன்,
சட்ட மேலவைத் துணைத் தலைவர்,
88, அப்பு முதலி தெரு,
மயிலாப்பூர்,
சென்னை-600 004.

23. திரு கி. ஆ. பெ. விசுவநாதம்,
தமிழகப் புலவர் குழுத் தோற்றுநர்,
தில்லை நகர்,
திருச்சிராப்பள்ளி-620 004.

24. டாக்டர் கே. கே. ஹெப்பார்,
20, கலாநகர்,
பாந்த்ரர் (கிழக்கு),
பம்பாய்.

25. திரு கி. வா. ஜகந்நாதன்,
ஆசிரியர், 'கலைமகள்',
த. பெ. எண். 604,
சென்னை-600 004.

26. டாக்டர் மால்கம் ஆதிசேசய்யா, எம். பி.,
சென்னை-கல்வி வளர்ச்சி நிறுவனத் தலைவர்,
79, இரண்டாவது மெயின் ரோடு,
அடையாறு,
சென்னை-600 020.

27. திரு எம். சிங்காரவேலு, (ஐ.பி.எஸ்) (ஓய்வு)
யு. பி. எஸ். சி விருந்தகம்,
தோல்பூர் இல்லம்,
ஷாஜஹான் சாலை,
தில்லி.

28. திருமதி ஈ. டபிள்யூ. பில்ஜின்,
19, ஷெட்டன் சாலை,
உதகமண்டலம்-643 001.

29. பேராசிரியர் சு. வித்தியானந்தன்,
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம், இலங்கை.

30. திரு டி. பி. எம். பெரியசுவாமி,
முத்துராமலிங்கத் தேவர் தெரு,
கோச்சடை,
மதுரை-625 010.

31. திரு ச. இராமநாதன்,
1983, சேர்வைக்காரன் தெரு,
கரந்தை, தஞ்சாவூர்.

32. திரு து. ஆ. தனபாண்டியன்,
பேராசிரியர்,
இசைத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

33. திரு ஜோ. மை. தத்தா,
பேராசிரியர், சிற்பத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

34. டாக்டர் வ. ஆ. தேவசேனாபதி,
இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
பச்சையப்பன் ஆண்கள் கல்லூரி விடுதி,
காஞ்சிபுரம்-631 503

35. டாக்டர் ஜே. சாதிக்,
பேராசிரியர், சித்த மருத்துவத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

36. டாக்டர் கு. சீனிவாசன்,
பேராசிரியர்,
தொல் அறிவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

37. டாக்டர் தா. வே. வீராசாமி,
பேராசிரியர்,
தொகுப்பியல்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

38. டாக்டர் சி. சே. தேக்கமலை,
பேராசிரியர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

39. டாக்டர் பி. கே. மிஸ்ரா,
இயக்குநர்,
தமிழ்ப் பல்கலைக் கழக மலையின மக்கள் ஆய்வு மையம்,
உதக மண்டலம்,

---

4 (a) திரு கோ. சிவகுருநாதன்,
தனி அலுவலர்—புதிய பல்கலைக் கழகங்கள்,
கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் துறை,
தலைமைச் செயலகம்,
கோட்டை,
சென்னை 600 009.
(கல்வித்துறைச் செயலாளருக்காக)

5 (a) திரு சு. சோழபெருமாள்,
துணைச் செயலர்,
நிதித்துறை,
தமிழ்நாடு அரசு,
கோட்டை,
சென்னை 600 009.
(நிதித்துறைச் செயலாளருக்காக)

இணைப்பு : 3

## புலக்குழு உறுப்பினர்

## I. மொழிப்புலம்

1. பேராசிரியர் க. வெள்ளைவாரணனார்,
புலத் தலைவர்.
இலக்கியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

2. டாக்டர் கி. அரங்கன்,
மொழியியல் பேராசிரியர்,
மொழியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

3. திரு அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள்,
19-நடேசன் சாலை (போலீஸ் பயிற்சிக் கல்லூரி அருகில்)
அசோக் நகர்,
சென்னை-600 083.

4. டாக்டர் நா. பாலுசாமி அவர்கள்,
முதன்மைப் பதிப்பாசிரியர்,
வாழ்வியல் களஞ்சியம்,
37, இராமன் தெரு,
சென்னை-600 017.

5. டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் அவர்கள்,
தமிழ்த்துறைத் தலைவர்,
சென்னை பல்கலைக் கழகம்,
சென்னை-5.

6. டாக்டர் மொ. இசரயேல்,
மொழியியல் துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-21.

7. டாக்டர் இ. அண்ணாமலை,
துணை இயக்குநர்,
இந்திய மொழிகளின் மத்திய நிறுவனம்.
மானசகங்கோத்திரி–570 006.

8. டாக்டர் அனந்தநாராயணன்,
மொழியியல் துறைப் பேராசிரியர்,
உஸ்மேனியா பல்கலைக் கழகம்,
ஹைதராபாத்-7.
ஆந்திரப் பிரதேசம்.

## II. சுவடிப்புலம்

1. பேராசிரியர் கே. எம். வேங்கடராமையா,
புலத்தலைவர்,
அரிய கையெழுத்துச் சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. பேராசிரியர் மு. சண்முகம் பிள்ளை.
ஓலைச்சுவடித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

3. டாக்டர் எ. சுப்பராயலு
கல்வெட்டு—புதைபொருள் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,

4. திரு மு. அருணாசலம்,
பேரகராதித்துறை,
'குறிஞ்சி' புதிய வளாகம்.
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்-613 005.

5. திரு நடனகாசிநாதன்,
இயக்குநர்/பொறுப்பு,
தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை,
31, தெற்குக் கரைச்சாலை,
மந்தவெளி,
சென்னை 600 028.

6. திரு சி. கோவிந்தராசனார்,
தமிழியற்புலம்,
மதுரை—காமராசர் பல்கலைக் கழகம்,
அழகர் கோயில் சாலை, மதுரை - 2.

7. டாக்டர் குஞ்சுண்ணி ராஜா,
கௌரவக்காப்பாளர், கலாட்சேத்திரா,
அடையாறு, சென்னை.

8. டாக்டர் கே. வி. இராமன்,
பேராசிரியர்–துறைத்தலைவர்,
பழம் வரலாறு, தொல்பொருளியியல் துறை,
சென்னைப் பல்கலைக் கழகம்
சென்னை 600 005.

9. திரு கே. ஜி. கிருஷ்ணன்,
கல்வெட்டாய்வாளர் (ஓய்வு),
மத்திய கல்வெட்டாராய்ச்சி நிறுவனம்,
மைசூர்.

10. டாக்டர் கே. ராஜையன்,
பேராசிரியர்-தற்கால வரலாறு,
மதுரை–காமராசர் பல்கலைக் கழகம்,
பல்கலைநகர், மதுரை.

11. டாக்டர் எம். ஜி. எஸ். நாராயணன்,
பேராசிரியர்-வரலாற்றுத்துறை,
கோழிக்கோடு பல்கலைக் கழகம்,
கோழிக்கோடு-673 635,

## III. கலைப்புலம்

1. பேராசிரியர் டாக்டர் ஏ. எஸ். இராமன்,
புலத்தலைவர்,
ஓவியத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. பேராசிரியர் திரு து. ஆ.தனபாண்டியன்,
இசைத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. பேராசிரியர் என். வி. இராமநரசன்,
நாடகத்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சாவூர்.

4. திரு எல். முனுசாமி,
முதல்வர்,
கலைக் கல்லூரி,
எழும்பூர், சென்னை.

5. திரு எஸ். வி. சகஸ்ரநாமம்,
9, தாண்டவராயன் தெரு,
இராயப்பேட்டை,
சென்னை—14.

6. திரு எஸ். தனபால்,
முன்னாள் முதல்வர்,
கலைத் தொழில் கல்லூரி,
36, 3—ஆம் குறுக்குத் தெரு,
சென்னை - 600 028

7. திரு ஆர். எஸ். மனோகர்,
'சுராஜ்' 18, ஸ்ரீராம் காலனி,
ஆழ்வார் பேட்டை.
சென்னை—18.

8. டாக்டர் எஸ், இராமநாதன்,
66, டி. பி. கோவில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை—600 005.

## IV. அறிவியல் புலம்

1. பேராசிரியர் ஆ. சுப்பிரமணியன்,
புலத் தலைவர்,
தொல் தொழில் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. திரு கு. சீனிவாசன்,
பேராசிரியர்,
தொல் அறிவியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

3. திரு ஜ. சாதிக்,
பேராசிரியர்,
சித்த மருத்துவத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

4. திரு ந. சஞ்சீவி அவர்கள்,
9, பாண்டி பஜார் சாலை,
சர் தியாகராய ரோடு,
தி. நகர்,
சென்னை-17.

5. திரு கே. இலட்சுமிகாந்தன் பாரதி, இ.ஆ.ப.,
மைய இந்திய மருத்துவ இயக்குநர்,
அறிஞர் அண்ணா மருத்துவ நிலையம்,
அரும்பாக்கம்,
சென்னை-600 106.

6. திரு ஏ. ஆர். தாமோதர முதலியார் அவர்கள்,
பாரத பெட்ரோலியம் முகவர்,
தாலுக்கா அலுவலகம் சாலை,
மஞ்சக் குப்பம்.
கடலூர்.

7. டாக்டர். ஆர். தியாகராசன் அவர்கள்,
58, அய்யாவு நாயுடு தெரு,
செனாய் நகர்,
சென்னை-30.

8. பேராசிரியர் திரு நரசிம்மன் வி. எம். அவர்கள்,
17, டி. பி. கோவில் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

## V. வளர்தமிழ்ப் புலம்

1. பேராசிரியர் மா. சண்முக சுப்பிரமணியன்
புலத்தலைவர்,
மொழி பெயர்புத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. பேராசிரியர் கு. நம்பி ஆருரான்,
வெளிநாட்டுத் தமிழ்க் கல்வித்துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

3. பேராசிரியர் தா. வே. வீராசாமி,
தொகுப்பியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்.

4. திரு அ. வெ. சுப்பிரமணியம்,
முதன்மைப் பதிப்பாசிரியர்/வாழ்வியல்,
தமிழ்ப் பல்கலைக் கழகக் களஞ்சிய மையம்,
37 இராமன் தெரு, தியாகராய நகர்,
சென்னை - 600 017.

5. திரு கீ. இராமலிங்கனார்,
'தமிழ் மணம்'
21 கிழக்குப் பூங்காச் சாலை,
சென்னை - 30.

6. திரு ஜி. வி. பிள்ளை,
3 அண்ணாமலைபுரம்,
தென்னூர், திருச்சி - 17.

7. டாக்டர் என். எஸ். பிரபு,
ஆங்கில மொழி அலுவலர்,
பிரிட்டிஷ் கவுன்சில்,
அண்ணாசாலை,
சென்னை.

8. டாக்டர் ஏ. வேலுப்பிள்ளை,
தமிழ்ப் பேராசிரியர்,
பெரதேனியா,
இலங்கை.

9. டாக்டர் எம். ஏ. மகந்தலே,
டெக்கான் கல்லூரி,
ஏரவாடா
பூனா.

இணைப்பு : 4

# ஆய்வுக்குழு உறுப்பினர்

## I. மொழிப்புலம்

### 1. இலக்கியத்துறை

தலைவர்

திரு க. வெள்ளைவாரணனார்,
புலத் தலைவர், மொழிப்புலம்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

உறுப்பினர்

1. டாக்டர் இரா. சாரங்கபாணி,
பேராசிரியர், இலக்கியத் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

2. டாக்டர். நா. பாலுசாமி,
முதன்மை பதிப்பாசிரியர்,
வாழ்வியல் கலைக்களஞ்சியம்,
37, இராமன், சென்னை - 17.

3, டாக்டர் பெரிய கருப்பன்,
தமிழ்ப் பேராசிரியர்
மதுரைக் காமராசர்ப் பல்கலைக் கழகம்,
மதுரை-625 021.

4. டாக்டர் மா. ரா. போ. குருசாமி,
'செந்தில்', தாமு நகர்.
கோயம்புத்தூர் – 641 018.

5. டாக்டர் பொன் சௌரிராசன்,
தமிழ்த்துறைத் தலைவர்,
திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி-2

சிறப்பழைப்பாளர்

6. திரு மு. அருணாசலம்,
தலைமைப் பதிப்பாசிரியர்,
தமிழ்ப் பேரகராதித் துறை 'குறிஞ்சி'
தமிழ்ப் பல்கலைக் கழக புதிய வளாகம்,
தஞ்சாவூர்–5.

7. டாக்டர் அ. மா. பரிமணம்,
2242-சிவராயர் தோட்டம்,
மானம்புச்சாவடி, தஞ்சாவூர்.

## 2. மொழியியல் துறை

**தலைவர்**

டாக்டர் கி. அரங்கன்
மொழியியல் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

**உறுப்பினர்**

1. டாக்டர் மோ. இஸ்ரயேல்,
**பேராசிரியர்,**
மொழியியல் துறை,
மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை.

2. டாக்டர் மா . சு. திருமலை,
உதவி இயக்குநர்/பேராசிரியர்
இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம்,
மைசூர்.

3. டாக்டர் அ. காமாட்சிநாதன்,
இணைப் பேராசிரியர்,
மொழியியல்துறை,
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

4. டாக்டர் இரா. கோதண்டராமன்.
சிறப்பு முதுநிலை ஆய்வாளர்,
அனைத்துலகத் திராவிட மொழியியற் பள்ளி,
திருவனந்தபுரம்.

*சிறப்பழைப்பாளர்*

5. டாக்டர் ஜெ. நீதிவாணன்.
இணைப் பேராசிரியர்,
மொழியியல்துறை
மதுரைக் காமராசர் பல்கலைகக் கழகம்,
மதுரை.

## II. சுவடிப்புலம்

### 3. ஓலைச் சுவடித் துறை

**தலைவர்**

திரு மு. சண்முகம் பிள்ளை,
சிறப்பு நிலைப் பேராசிரியர்,
சுவடிப்புலம் - ஓலைச் சுவடித் துறை,
தமிழ்ப் பல்கலைக் கழகம்,
